KALKI
27-1-85
ரூ 1-50

கல்கி



கூடுதல் வட்டி

+2%

வழக்கமான
விகிதத்துடன்
வழங்கப்படுகிறது

இச் சலுகை 31-3-1985 வரை

கீழ்க்கண்ட
வட்டி விகிதங்களில்
டெபாசிட்டுகள் ஏற்றுக்
கொள்ளப்படுகின்றன

1-வருடம்
17+2
19%

2-வருடங்கள்
18+2
20%

3-வருடங்கள்
19+2
21%

5-வருடங்கள்
22+2
24%

மேற்படி கூடுதல் வட்டி
பென்ஷனர், மகளிர், மைனர்களுக்கு மட்டும்
"V.I.P. BRIEF CASE"
அன்பளிப்புடன் வழங்கப்படும்.

உங்கள் டெபாசிட்டுகளை அனுப்பும் முகவரி

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

சென்னை	: 91, உஸ்மான் ரோடு (சிவா-விஷ்ணு கோவில் அருகில்) தி.நகர், சென்னை-600 017 போன் : 447186/442218
பெங்களூர்	: 24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003 போன் : 366971
திருச்சி	: 22 மதுரை ரோடு (முதல் மாடி) திருச்சிராப்பள்ளி-620 008. போன் : 29772
பாண்டிச்சேரி	: 11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்) பாண்டிச்சேரி-605 001.
தஞ்சாவூர்	: எண் : 2 & 3 முதல் மாடி ஜி. ஏ. கனால் ரோடு, தஞ்சாவூர்-613 001. போன் : 1626
திருவண்ணாமலை	: 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601. போன் : 483
பட்டுக்கோட்டை	: 9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 601 போன் : 453

JAY ADTS.B103

இந்திய டாக்டரின் இலக்கிய யாத்திரை





"இந்திய டாக்டர்கள் என்றால் பள்ளிக் குழந்தைகள் ஆசையோடு ஓடி வரும். 'டாக்டர்! என்னை அக்கறையோடு சோதனை பண்ணினீர்களே. அதற்கு இது பரிசு. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் பூத்தது'' என்று சொல்லிக் கொத்து மலர்களை அப்படியே கட்டிக் கொண்டு வந்து கொடுக்கும். ஆஹா! என்ன அற்புதமான குழந்தைகள்! எவ்வளவு ஆனந்தமான காலம்...'' என்று தென் ஆப்பிரிக்க நாட்களின் நினைவுகளால் இழுக்கப்பட்டு அப்படியே மெய்ம்மறந்து போகிறார் 'லக்ஷ்மி' என்ற புனைபெயரில் எழுதும் டாக்டர் திரிபுரசுந்தரி.

மருத்துவப் பணியின் அனுபவங்கள். தென் ஆப்பிரிக்க மண்ணில் இருந்தபோது மனத்தில் விழுந்த சில கீறல்கள். எல்லாவற்றையும் இத்தனை காலம் அசை போட்டு வைத்திருந்தது ''ஒரு காவேரியைப் போல'' நாவலில் விளைச்சலாகி இருக்கிறது. நாவல் நாயகி காவேரி ஒரு நர்ஸ்.

மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் தென் ஆப்பிரிக்காவில் குடியேறிய இந்திய இனத்தவரின் ஒரு விழுது அவள். நிறைவேறாத காதலின் ஏக்கத்தால் சோர்வடைந்து ஒரு மாற்றாக நினைத்துப் பாரதம் வருகிறாள் காவேரி. அவள் மனத்தில் இந்தியாவைப் பற்றி எழுப்பியிருந்த கனவுக் கோட்டைகளெல்லாம் தூள் தூளாகிப் போகின்றன. பொய், பித்தலாட்டம், மோசடி, லஞ்சம், ஊழல் என்று தென் ஆப்பிரிக்காவில் அவள் சந்திக்காத பல விஷயங்களை இங்கே நேர் கொள்ள வேண்டி வருகிறது. இந்த மண்ணின் அழுக்கான பக்கத்தை மட்டுமே பார்த்துப் பரிதவித்த காவேரிக்கு, இதன் பிரகாசமான பகுதியையும் காட்டுகிறாள் ஒரு பெண். புதிய நம்பிக்கைகளுடன் தாயகம் திரும்புகிறாள் காவேரி. அங்கும் புதிய சோதனைகள்..... என்று உணர்ச்சிபூர்வமாக நடை போடுகிறது இந்த நாவல்.

ஏராளமான கனவுகளுடனும், ஆவலுடனும் இந்தியா வருகிற சில வெளிநாட்டவர்கள் இங்கே சில தறுதலைகளால் ஏமாற்றப் படுவதும், களங்கப்படுத்தப்படுவதும், அதன் விளைவாக மனம் நொந்து தாயகம் திரும்புகிற அவர்கள் 'இந்தியா முழுவதுமே இப்படித்தான் ஒரே மோசம்; ஊழல், அழுக்கு' என்றெல்லாம் ஒட்டுமொத்தமாய்ப் பிரசாரம் பண்ணுவதும் — டாக்டர் திரிபுரசுந்தரியால் தாங்கிக் கொள்ள முடியாத அவமானங்களாகி இருந்தன. தென்னாப்பிரிக்காவில் ஒரு விருந்தின்போதுகூட இப்படிச் சிலர் பேசிக் கேட்க நேர்ந்தபோது மனம் வெதும்பிச் சாப்பிட மனமில்லாமல் இவர் வெளியேறியதும் உண்டு.

இந்தியா வந்து திரும்பும் பலர், இந்தப் பூமியின் பண்பாடுகள், கலைகள், அழகுகள், அப்பாவித்தனமான கிராமங்கள், கோயில்கள் என்று 'பிரகாசமான' பகுதிகளைப் பார்த்து மனம் பறிகொடுத்ததும் உண்டு. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம், இந்தப் பூமியின் பிரகாசமான பகுதியைப் பற்றி எடுத்துச் சொல்வதில் 'லக்ஷ்மி' ஆனந்தப்பட்டிருக்கிறார்.


மனதில் புரண்டு கொண்டிருந்த இந்த நினைவுகள், அவருக்குத் தெரிந்த ஒரு பெண்ணின் அல்லல்பட்ட வாழ்க்கை இரண்டும் சேர்ந்து உருவானதுதான் நாவல்.

சாகித்திய அகாதமியின் பரிசு என்கிற அங்கீகாரம் 'லக்ஷ்மி'க்கு நிஜமான சந்தோஷத்தைப் படரவிட்டிருக்கிறது. இந்த மகிழ்ச்சியில் அவர் இன்னும்புதியபுதியசாதனைகளைப் பூக்க வைப்பார் என்று நம்புவோம்.

—வெண்பால்

நாவல் கிடைக்குமிடம்: பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு, சென்னை—4.

அகாதமி பரிசு



ஓய்வு நாளன்று ஒரு வெற்றி

✖ ஃபாஸ்டர் பந்தில் கவாஸ்கர் கிளீன் போல்ட்

● பம்பாய் டெஸ்டின் ஆரம்ப நாள். பம்பாயிலுள்ள பிரிட்டிஷ் டெபுடி ஹைகமிஷனர் அக்கரைச் சீமை ஆட்டக்காரர்களுக்கு 'காக்டெய்ல்' விருந்து வைத்தார்! மறுநாள் அந்தப் பிரிட்டிஷ் டெபுடி ஹைகமிஷனர் கொலையுண்ட செய்தி வந்தபோது ஆங்கில ஆட்டக்காரர்கள் அனைவரும் பேதலித்து விட்டனர்! டெஸ்ட் தொடரையே 'கான்ஸல்' செய்து விடலாமோ என்று கூட காப்டன் கோவரும் சக ஆட்டக்காரர்களும் 'முடிவு' செய்தார்களாம். ஆனால் கொலையுண்ட பிரிட்டிஷ் டெபுடி ஹைகமிஷனரின் மனைவி பிரிட்டிஷ் ஆட்டக்காரர்களுக்கு ஆறுதல் கூறி அந்த தகைய அசம்பாவிதத்திலிருந்து தடுத்தார்!

● பிரஸ் பாக்ஸில் ஆங்கில தேசத்துப் பத்திரிகை நிருபர்களின் எண்ணிக்கை ஒரு ரிகார்டு. பி. பி. ஸி. சார்பில் மட்டும் எட்டு பிரதிநிதிகள் வந்திருந்தனர். காமிராமேன் தனி!

● கபில் டிரஸ்ஸிங் ரூமில் எப்போதும் 'தனித்து' அமர்ந்திருப்பது ஆச்சரியத்தை அளித்தது. அது மட்டுமல்ல. அவர் பத்திரிகை நிருபர்களையோ, நண்பர்களையோ டிரஸ்ஸிங் ரூமில் சந்திக்கப் பயப்பட்டார்! காவஸ்கர் மூன்றும் நாள் 'அலர்ஜி'யால் மைதானத்துக்கு வரவில்லை என்று சொன்னார் மானேஜர் பிரசன்னா! ஒருவேளை கபில் அலர்ஜியாயிருக்குமோ என்று பலருக்குச் சந்தேகம்!

● அம்பயர் ராமசாமிக்கு முதல் டெஸ்ட் அனுபவம்! கட்டாக் ஒருநாள் கிரிக்கெட்டில் கலந்து கொண்ட அவருக்கு டெஸ்ட் அம்பயரிங் யோகம் அடித்துவிட்டது!

● சேப்பாக்கம் ஸ்டேடியம் கண்ட விக்கெட்டுகளின் எண்ணிக்கை 12. இங்கிலாந்து குழுவில் ஃபௌலர் 3, காட்டிங் 3, எட்மாண்ட்ஸ் 2 விக்கெட்டுகளைக் கண்டார்கள்! இந்தியக் குழுவிலும் மொகிந்தர் அமர்நாத் 2 ஸ்ரீகாந்த் 1 கபில் 1 விக்கெட் அடித்துக் 'கை தட்டு' பெற்றார்கள்!



✖ காட்டிங்கின் விக்கெட். சாஸ்திரியின் பந்து பவுண்டரிக்கு!

● ஃபௌலர் அடித்த ஒரு ஸிக்ஸர் பிரஸ்பாக்ஸிலிருந்த காமிராமேன் மாரிஸின் காமிராவைத் தாக்கியது. அவர் உடனே 'ஹெல்மட்' அணிந்து தம் தலையைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்!

● இரட்டைச் சதம் கண்ட ஆங்கில ஆட்டக்காரர்கள் காட்டிங்கும் ஃபௌலரும் பல ரிகார்டுகளை முறியடித்திருக்கிறார்கள். ஆங்கிலக் குழுவுக்கு இந்தியாவில் இதுவரை எடுத்த அதிக ரன்கள் ரிகார்டும் கிடைத்திருக்கிறது!

● ஓய்வு நாளன்று பிரிட்டிஷ் ஆட்டக்காரர்கள் 'Fisherman's Cove' விஜயம் செய்தார்கள். அக்னூரவும் பிரஞ்சும் நீச்சலடித்துக்

⌘ யாதவ், சிவராமகிருஷ்ணனுக்கு பிரஸன்னா ''டிப்ஸ்'' தருகிறார்



கொண்டிருக்கும் போது இரு பெண்களின் அபயக் குரல் கேட்டிருக்கிறது. ஆழமான சுழிக்குள் துணிவுடன் இருவரும் நீந்திச் சென்று அந்தக் கல்லூரி மாணவிகளைக் காப்பாற்றியது. ஓர் அதிசய அனுபவம்! அந்தக் கல்லூரி மாணவிகள் பிரஞ்சையும் அக்னூரவையும் 'புனர் ஜென்மம்' தந்ததற்காக வாழ்த்தி நன்றி தெரிவித்தனர்.

● ஓய்வு நாளன்று பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களும், இந்தியப் பத்திரிகையாளர்களும், லயோலா கல்லூரியில் 'மாட்ச்' ஆடினர். இந்தியப் பத்திரிகைக் குழுவில் பேதி, போர்டே, அம்பர்ராய் ஆகியோர் ஆடி வெற்றியைச் சம்பாதித்துத் தந்தனர். ஏதோ இந்த வெற்றியாவது கிடைத்ததே! 'ஹிந்து' ராமின் பாட்டிங் அற்புதம்!

● இங்கிலாந்து ஸ்கோர் 652–7 ஃபௌலர் 201, காட்டிங் 207 என்ற இரட்டைச் சதங்களைப் பார்த்து விட்டு கவாஸ்கர் மூன்று ரன்களில் அவுட்டானதைக் கண்டு பரிதவித்து, இந்தியக் குழுவின் சரிவைப் பற்றி செலக்டர் போர்டேயிடம் வினவிய போது:

''என்ன செய்வது! ஆங்கில ஆட்டக்காரர்கள் அபாரமா நம்ம பாட்ஸ்மன்களின் பந்துகளை 'காட்ச்' பிடித்து விட்டார்களே! அதை ஒரு 'கெட்ட கனவு' போல் மறந்து விடுங்கள்!''

சென்னை டெஸ்ட்

● 'பல தடவை சொன்னாலும் ஸ்ரீகாந்த் செய்ஞ்ச தப்பையே திரும்பத் திரும்பச் செய்கிறாரு!'' என்று விமர்சகர் ஒருவர் வெங்கட்டிடம் குறைப்பட்டார். உடனே வெங்கட்டின் பதில்: ''அதனால்தான் அவரிடம் சொல்றதையே நான் நிறுத்திட்டேன்!''

● ம. பொ. சி. அவர்களிடம் இந்திய பாட்ஸ்மன்களின் ஆட்டத்தைப் பற்றிக் கேட்ட போது அவர் கூறிய பதில்:

''நம் இந்தியக் குழுவுக்கு நல்ல திறமை இருக்கிறது. ஆனால் 'டீம் ஸ்பிரிட்' தான் இல்லவே இல்லை! ஆட்டக்காரர்களுக்குள் 'பிளவு' பிரமாதமா வேலை செய்கிறது!''

● திரு. சிவாஜி கணேசன் முதல்நாள் ஆட்டத்தைத் தாம் ரஸித்ததாகவும் அடுத்தநாள் 'அறுவை' என்றும் சொல்லிச் சென்றார்! ஆனால் நாகேஷோ மொஹிந்தர் அமர்நாத்தின் ஸிக்ஸரைக் கண்டு 'விசில்' அடித்துக் குதித்தது அனைவரையும் திகைக்க வைத்தது!

-குண்டுமணி

புகைப்படங்கள்: பாலாஜி

⌘ மோஹிந்தரின் எல்லைக் காவல்



பதுமைகள் சொல்லிய படக்கதைகள்

2

இரண்டாம் வாரத்தில் முதல்நாள் மாலை ஜெயமன்மதன் பலகாரம் காப்பி முதலியவை முடித்துக் கொண்டு தியேட்டரின் இரண்டாவது படியில் காலை வைக்கையில், அப்படிக்குக் காவலாயிருந்த கோமளவல்லிப் பதுமை இருகரமுங்கொட்டித் தலையசைத்துக் குலுங்க நகைத்துச் சொல்லுகிறது :

'' அகோ கேளும் ஜெயமன்மதரே ! சென்ற வாரம் முதற் பதுமை சொல்லிய கதைகளைக் கேட்டும் எவ்வித மனக்கிலேசமுமின்றி இப்படியில் ஏறத் துணிந்தீர். உமக்கு என்ன 'அந்தஸ்து' இருக்கிறது இப்படியில் ஏற ? நான் சொல்லும் கதைகளைக் கேட்டு உமக்கு அந்தஸ்து இருக்கிறதா இல்லையாவென நீர் தீர்மானம் செய்யாதிருக்கும்பக்ஷத்தில் நான் 'உன்னைவிடமாட்டேன்' '' என்று சற்று சிவந்த முகத்துடனே திருவாய் மலர, ஜெயமன்மதன் மிகுந்த மனக்கிலேசத்துடனேயும், அதி நடுக்கத்துடனேயும் கேட்ட —

இரண்டாம் படிக்குக் காவலாகிய
கோமளவல்லிப் பதுமை சொல்லிய
'அந்தஸ்து' கதை

ஒரு ஈரேழு குடித்தனங்களுக்கு மத்தியில் இருக்கும் ஜெய்சங்கரை அறிமுகப்படுத்தி (ஜோல்னாப் பையுடன்) குழந்தையை 'நேத்து ராத்திரி... அம்மா' என்று பேச வைக்கும் பாங்கும் சரி, ஒரு சஞர் லக்ஷ்மியைக் காட்டி வேலைக்குச் சேர வந்த ஆளிடம்சாமர்த்தியமாகக் கைரேகை வாங்கிவைக்கும் தோரணையும் சரி — சுவையான ஆரம்பம்தான்.

ஜெய்சங்கருக்கு, லக்ஷ்மி இன்னார் ஆக வேண்டும் என்று அப்போதே யூகிக்க வைத்து விடுகிறார்கள் என்றாலும், அந்த உறவை பகிரங்கப்படுத்தும்இடமும்சோடை போய்விடவில்லை.

ஊரிலிருந்து உழைக்க வரும் உத்தமன் முரளிக்கு'காதலிக்க வேண்டும்'என்ற வேலையைக் கொடுத்து இளவரசியைக் காதலிக்க வைக்கிறார் ஜெய். முரளி விடுவாரா என்ன? இரண்டு மூன்று பேட்டுசஞடன் காதலிக்கிறார். ஊடுகிறார். சண்டை போடுகிறார். ஜெயிக்கிறார். காதலியை அடைகிறார். இதில் பெரிய தலைகளின் மோதல், அந்தஸ்து எதில் என்பதில்தான்.

மற்றபடி :

'என்னைப் பீஸ் பீஸாக் கிழிச்சி, என் பாடியைப் போஸ்ட்மார்ட்டம் பண்ணுக்கூட என் இதயம் ராதா ராதான்னுதான் அடிச்சுக்கும்' என்னும் வசனம் உட்படப்பல வசனங்கள் சுருக் சுருக் !

'என் கண்மணி என் காதலி' பாடலின் போது டைரக்டர் முரளி ஆட்டு மந்தையின் பின் மேகப் பின்னணியில் ஊட்டி மலைச் சரிவில் மிதக்கும் இடம் போல் பல இடங்களில் ஒளிப்பதிவு பளிச் பளிச் !

அந்த எலுமிச்சை மஞ்சளில் புடவையும் ரவிக்கையுமாக வரும் இளவரசி வானத்தில் இருந்து இறங்கிய தேவதையாகக் காட்சி அளிக்கிறார் என்றால் மற்ற இடங்களில் சுட்டிப் பெண்ணாக.

அந்த டிஸ்கோ பாட்டு — ம்யூஸிக் சங்கர் கணேஷாமே! நம்பவே முடியவில்லை நம் காதுகளை. அவ்வளவு ஜோர் ! (ஒரிஜினலா, உபயமா என்று கேட்டால் கோபம் வரும் இல்லை ?) மற்ற பாடல்களும் இனிமை சொட்டச் சொட்டத்தான் இசையமைக்கப் பட்டிருக்கின்றன.

லக்ஷ்மியின் நடிப்பைப் பற்றித் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. அமெரிக்க மாப்பிள்ளை வந்து உட்கார்ந்திருக்கும் இடத்தில் 'என் ஹஸ்பெண்ட்... ஹஸ்பெண்ட்' என்று வழிகிற வழிசலில், பெற்ற பெண்ணிடம் இனிமே உனக்கு அம்மா வேண்டாதவளாகப் போய்டுவா என்று துடிக்கிற துடிப்பில் — கொடி கட்டி ஜிலுஜிலுவென்று பறக்கிறார்.

கவுண்டமணி எப்படியோ மாறப் போகிறார் என்று எதிர்பார்க்க வைத்து ஏமாற்றும் ஒரு ஜெண்ட்டில்மேன்.

இவ்வளவு சிரத்தையாய் எல்லாம் பண்ணி விட்டுக் கழுனிப் பானையில் கைவிட்ட கதை

— ஜெயமன்மதன்





யாக அந்த கார் ஓடல், மோதல், எரிதல்— மிக அதிகமாகிவிட்ட மசாலா. தும்மல் அறையைப் பிளக்கிற அளவுக்கு நெடி !

தேவர் என்றால் எப்போதும் ஒரு வாயில்லா ஜீவனாவது அவர் பெயர் சொல்லிப் பிழைக்கும். இதில் ஒரு சமூதை. ஒரு ஒட்டகத்திற்காக.

சரியாகப் புரியாத இலங்கைப் பேச்சுடன் ஒரு, ஒய். ஜி. மகேந்திரன்.

ரசிக்கும்படியாய்ச் செய்திருக்கிறார்கள்.

கோமளவல்லிப் பதுமை சொல்லிய
'உன்னை விட மாட்டேன்' கதை

அந்த முதல் காட்சி அபத்தம்.

இன்ஸ்பெக்டர் வேலைக்குச் சேருகிற முதல் நாளே ராஜிநாமா பண்ணுகிற அபத்தம். நேதாஜிக்கு போலீஸ் ட்ரஸ் போட்டால் எப்படி இருக்கும் என்ற ஓர் ஆசை வந்திருக்குமோ ?

அதை விடுங்கள். போஸ்டரிலேயே சொல்லிவிடுகிறார்கள், இது பாடமல்ல, படம் என்று. அதற்கேற்றாற்போல் சின்ன வயதில் நடந்த ஒரு சம்பவத்திற்கு, சம்பந்தப்பட்ட வில்லனைப் பழி வாங்கக் காத்திருக்கிறார் கதாநாயகன் உன்னைவிட மாட்டேன் என்று. அதுதான் கதை. கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் நான்கும் நேதாஜியே. நிறைய மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கிறார்.

கொக்கு தலையில் வெண்ணெய் கதையாய் மிரட்டுவதும் அப்புறம் பம்பாய்க்கு அனுப்பப்பட்ட பையனை வரவழைத்து அப்பாவின் கையாலேயே சுட வைப்பதும் நல்ல யுக்தி தான். படம் நெடுக இந்த மாதிரி தூவி விட்டிருந்தாலுங்கூட அதில் இயற்கையிலிருந்து கொஞ்சம் விலகி வந்து நிற்பதால் படம் கொஞ்சம் மனத்தோடு ஒட்டாமல் ஓடுகிறது.

நேதாஜி ஹீரோ. கழுத்தை நிமிர்த்தி ஹ...ஹ...ஹ... என்று அடக்கமாக சிவாஜி போல் சிரிக்கப் பார்த்தாலும் தொண்ணூறு சதம் செயற்கைத்தனம் தெரிகிறது.

கொஞ்சம் சதுர முகமும், கழுத்து எலும்பும் தெரியும் பூர்ணிமா ஹீரோயின். ரத்த சோகையில் பீடிக்கப்பட்டிருக்கிறாரோ என்னவோ. வெளிறித்தான் இருக்கிறார். இன்னும் கொஞ்சம் புஷ்டியாய் இருந்திருந்தால் நடிப்பும் புஷ்டியாக வந்திருக்குமோ ?

'நான் யாருங்கறது முக்கியமில்ல, என்ன சொல்றேங்கறதுதான் முக்கியம்' என்ற வசனத்தில் வசனகர்த்தா நேதாஜி தெரிகிறார்.

எம். ஜி. ஆர். நடித்த படத்தின் ஒரு பாடலைக் காட்டி படத்தை ஐந்து நிமிஷம் நகர்த்துவது இப்போதெல்லாம் ஒரு ஃபாஷனாகிவிட்டது. இதிலும் அந்த ஃபாஷன் தொற்றிக் கொண்டிருக்கிறது.

மெல்லிசை மன்னர் இசை, மிக மெலிந்து இருக்கிறது — முதல் பாட்டு மட்டும் 'பாதகமில்லை, சேர்த்துக் கொள்' ரகம்.

ஒய். ஜி. மகேந்திரனைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லலாமென்று பார்த்தால் மனிதர் கால் படத்திலேயே மண்டையைப் போட்டுவிடுகிறார். அந்த குண்டுச் சட்டிக்குள் இந்தக் குதிரையால் எவ்வளவு ஓடிவிட முடியும்.

பரவாயில்லை, பார்க்கலாம்.

' இங்கே ஜெயமன்மதன் தப்பித்தேன்
பிழைத்தேன் என்று திரும்ப ஓடிக்கொண்டு
இருப்பதால் —
அடுத்த வாரம் பார்ப்போமே !

பரத நாட்டியமா வேண்டாம்!
டப்பாங்குத்தா? ஊம்...!

நடிகை 'ஹேமமாலினி' ஒரு பரத நாட்டிய நிகழ்ச்சிக்காகச் சமீபத்தில் 'காட்மண்டு' சென்றார் ! 'கான்ஸர்' உதவி நிதிக்காக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது ! ஒரு டிக்கெட் ரூ. 250க்கு கூட ' விற்கப்பட்டது ! ஆனால், ஹேமா மாலினி பரத நாட்டியம் ஆடவே, சில ரசிகர்கள் திரைப்பட காட்சிகளில் வரும் டான்ஸ் ஆடச் சொல்லி, ஹேமமாலினி மறுக்க, நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது !

இ வீக்

—சம்பத்குமாரி



பனி சூழ்ந்த தில்லியின் நடுக்கும் குளிர் இரவில் 2

ரத, கஜ, துரக பதாதிகளைக் காட்டும் சரித்திரம் மற்றும் போர்ப்படங்கள்

பல்கேரியாவிலிருந்து இறங்கி இருக்கும் '681 AD — The Glory of Khan வித்தியாசமான, பிடரி மயிர் சிலிர்க்கும் வெண் குதிரையாகத் தெரிகிறது. தயாரிப்புச் செலவைக் கொண்டு, தமிழகச் சத்துணவுத் திட்டத்தை மூன்று மாதங்களுக்குச் சமாளிக்கலாம்!

டைரக்டர் Ludmil Staikov (ஏற்கெனவே தமிழில் உச்சரிக்கப் பார்த்து பல்லைச் சுளுக்கிக் கொண்டிருப்பதால், வேண்டாம் சாமி, வம்பு) கொஞ்சம் ஆராய்ச்சி, கொஞ்சம் கற்பனை என்று விகிதம் பார்த்து கலந்து நூறு நிமிடங்களுக்குத் திரையில் நம்மைக் கண் பதிக்கச் செய்து அசத்துகிறார்.

கான் கட்டிய கோட்டையைத் தகர்க்க ரோமானியப் படை வருகிற ஒற்றை ஸீன் ரோம சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது.

ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம் என்று சிப்பாய்கள் வெள்ளம் (நாற்பதாயிரம் பேராம்!). ஆயிரக்கணக் கான குதிரைப் பிடரிகளின் அலைகள்.

''சரித்திரம் என்பது யூகங்களால் நிர்மாணிக்கப்படுவதில் அர்த்தமில்லை. உண்மைகளின் கூரிய அர்த்தங்களால் சரி பார்க்கப்படுவது'' — டைரக்டர் பத்திரிகையாளர் கூட்டத்தில் சொன்னது. சொன்னபடி செய்திருக்கிறார்.

ஜெயமன்மதன் Comments: Good!

கம்ப்யூட்டர் கலந்த, விஞ்ஞானம் இணைந்த படங்கள்

எலும்புப் பிரதேசத்தை மீறி இதயத்தை நேராய்ச் சென்று 'விஸ்க்' என்று குத்தும் Terminal Choice இங்கிலாந்தின் இதயத்திலிருந்து வந்தது.

விஞ்ஞானமும், கம்ப்யூட்டரும் ஆட்சி நடத்தும் ஒரு ஆஸ்பத்திரி. மாஸ்டர் கண்ட்ரோல் அறையிலிருந்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

'அந்த நோயாளிக்கு பல்ஸ் பார்.'

'இந்த நோயாளியை விசிறி விடு.'

பட்டன்களைத் தட்டியவுடன் கம்ப்யூட்டர்கள் விசுவாச நாய்க் குட்டிகளைப் போலச் சொன்னதைச் செய்கின்றன. எனவே ஹாய்யாக ஆஸ்பத்திரி டாக்டர்கள் சூதாடுகிறார்கள். எதன் பேரில்? நோயாளிகளின் மேல்!

'அவன் பிழைப்பான் என்கிறேன்.'

'நோ சான்ஸ், இரண்டு நாள் தாண்டினால் நூறு பணம் நான் தருகிறேன்.'

'பெட்?'

'பெட்!'

நோயாளிகளின் உயிர்கள் விளையாட்டுப் பொருள்கள்.

கம்ப்யூட்டரில் ஆபத்தான ஆணைகள் ரகசியமாக இடப்பட்டு—

முதலில் ஒரு பெண், உடம்பின் அத்தனை துவாரங்களிலிருந்தும் — ரிபீட் அத்தனை துவாரங்களிலிருந்தும் ரத்தம் கக்கி (எவ்வளவு ரத்தம், எத்தனை சிகப்பு, அம்மாடியோவ்!) பலியாகிறாள். மூக்கை நீட்டும் ஆஸ்பத்திரி பணியாட்கள் ஒவ்வொருவராய் தேர்ச் சக்கரத்தின் கீழ் அகப்பட்டவர்களாகி றார்கள். விவகாரத்தை ஆராய முற்படும் டாக்டருக்குக் கால் தடைகிறது. படுக்கையில் தள்ளி ஷாக்



✱ ''சரித்திரம் யூகங்களால் நிர்மாணிக்கப்படுவதில் அர்த்த மில்லை...''-லுட்மில் ஸ்டய்கோவ்



✱ நளின ஜெயிலில் ஒருபெண்ணைக் காப்பாற்ற... ஃபீரெஞ்சுப் படம் எல் அடிஷன்



⌘ கற்பனைகளும் சொப்பனங்களும் மனிதனை ஆள்கின்றன...? விவா லா வை (பிரான்ஸ்)

கொடுத்துக் க்ளோஸ் செய்ய முயற்சி என்று துடிப்பான க்ளைமாக்ஸ்.
Comments: Good

அடுத்தபடி ஃப்ரான்ஸின் '*Viva La Vie*'.
கற்பனைகளும், சொப்பனங்களும் மனிதனை ஆள்கின்றன என்று திடமாய் நம்பும் டைரக்டர். கடைசி வரை அடுத்த காட்சி என்ன, என்ன என்ற துடிப்பை ஏற்படுத்தி இருக்கையி லேயே நம்மைக் கட்டிப் போடும் படம்.–
மெனிதாய்க் குழப்பும் திரைக்கதை தான் மைனஸ் பாயிண்ட்.

துப்பாக்கிகள் வெடிக்கும் கத்திகள் குத்தும் மர்மம் மற்றும் குற்றப் படங்கள்:

ஃபிரான்ஸின் Laddition. அத்தனை மூலைகளிலும் கம்ப்யூட்டரின் வேவுக் கண்கள் கொண்ட நவீன ஜெயில். ஒரு பெண்ணைக் காப்பாற்ற, அடிதடியில் சிக்கி, ஜெயிலில் நுழையும் இளைஞனும் அவனை வெறுக்கும் ஜெயிலரும் என இரண்டு ஆண் நாயகர்கள்.
சிறைக்குள் சண்டைகள், கலாட்டாக்கள், விபத்தாய் ஒருவன் கொல்லப்பட்டு கதாநாயகன் அதற்கும் தண்டனை அனுபவிக்கிறான், ஜெயிலரால்.
யார், யாரைத் தீர்த்துக் கட்டு கிறார்கள் என்பது மையக் கேள்வி. வெகு விறுவிறுப்பு.
Comments: Good

மது அருந்தும் கஞ்சா குடிக்கும் இன்றைய தலைமுறைப் படங்கள்:

1) Revanche - Greece
2) Bianca - Italy

தில்லியில்
–ஜெயமன்மதன்

இரண்டுமே நாகரீக மோக இளைஞர்களைச் சித்திரிக்கப் பார்க்கும் படங்கள்.
முன்னாள் உயிர் நண்பனின் காதலியைக் காதலிக்கும் இளைஞன். அந்த மூவருக்குள் வெடிக்கும் உறவு உரசல்கள். மென்மையான காதல் உறவுகள். சராசரி இந்திய ரசிகனுக்கு அதிர்ச்சி தரும் படுக்கைக்காட்சிகள். கொஞ்சம் சைக்காலஜி.
Bianca–வில் குழப்பமான மனநிலையுடன் ஒரு இளம் புரொபஸர். சுற்றி இருப்பவை அவனை வெறுப்படையச் செய்வதால் நடைமுறை வாழ்க்கைக்கு அம்பேல் விட்டுவிட்டு, பருத்த தனக் கொங்கையர் பலரைக் கடந்து, நிம்மதி தேடி அலைந்து கடைசியில் அதை ஜெயிலில் அடைகிறார்.
ஜெயமன்மதன் *Comments*: இரண்டுமே *OK*

● பிரேஸில் படங்களுக்கு ஏகப்பட்ட அடிதடி. வெகு துணிச்சலான அரை நிர்வாண, முழு நிர்வாணக் காட்சிகள். ஒரு தியேட்டரில் டிக்கெட் கிடைக்காத நூறு, இருநூறு பேர் கதவுகளை உடைத்துக் கொண்டு வந்து ஓசியில் பார்த்த ஒரு படம்: *Dona Flor and Her Two Husbands*

⌘ உயிர் நண்பன் காதலியைக் காதலிக்கும் இளைஞன்... ரிவான்ஸ் (கிரீஸ்)




எட்டாவது நாடாளுமன்றம்
அ.தி.மு.க தலைமைச் செயலகத்தின் தலைமைப் பீடம்
திருநாவுக்கரசு
ஜெயலலிதா
திருநாவுக்கரசு
உங்க ஜம்பம் சாயாது. அவர் கிட்ட தான் அடங்கும்!



கல்கி

1985 ஜனவரி 27
மலர் : 43 இதழ் : 26
ரக்தாக்ஷி தை 14



ஆள்கிறீர்களா? விளையாடுகிறீர்களா?

இப்படி ஒரு கடுமையான கேள்வியைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நம்மை ஆளாக்கியிருக்கிறார்கள் அ. இ. அ. தி. மு. க. தலைவர்கள்.

தமிழ்நாட்டை அ. இ. அ. தி. மு. க. தான் ஆள வேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள் தமிழர்கள், ஏற்கிறோம். எம். ஜி. ஆர். தான் முதல்வராக வரவேண்டும் என்று தமிழர்கள் விரும்புகிறார்கள் — இது நமக்குப் புரியாமல் போகவில்லை.

எம். ஜி. ஆர். குணமடைந்து வருகிறார் — உண்மை. ஆனால் பூரண குணமடையவில்லை — அதுவும் உண்மை. மாநில முதல்வர் என்ற மாபெரும் பொறுப்பை ஏற்க உடல் வலிமையும் மனோபலமும் ஒருவர் குறைவறப் பெற்றிருக்க வேண்டும். அப்படிப் பெற்றிராத ஒருவர் மீது ஒரு பெரும் சுமையை ஏற்றுவது தவறு மட்டுமல்ல, மனிதாபிமானமற்ற செயலும் கூட.

இதை நேர்த்தியான வார்த்தைகளால் தெளிவாக்கிய ஆளுனர் குரானா அவர்கள் மிக நியாயமான முறையில் அழகாகச் சொன்னார்: ''எம். ஜி. ஆர். ஆட்சிப் பொறுப்பை ஏற்கக் கூடிய வலிமை பெற்ற மறுகணம் அவரிடம் முதல்வர் பொறுப்பை ஒப்படைப்போம்; அதுவரை உங்களில் ஒருவரை நீங்களே இடைக்கால முதல்வராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்'' என்று.

இந்த ஆரோக்கியமான யோசனையைக் காற்றில் பறக்க விட்ட நீங்கள் டில்லிக்கும் அமெரிக்காவுக்கும் மாறி மாறிப் பறந்து கொண்டிருக்கிறீர்கள். அத்துடன் தமிழகத்தின் கௌரவத்தையும் பறக்கவிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

இம்மாத இறுதியிலோ பிப்ரவரி முதல் வாரத்திலோ எம். ஜி. ஆர். தமிழகம் திரும்பினாலும் கூட அவருக்கு மேலும் சில காலம் ஓய்வு தருவதே மருத்துவ ரீதியிலும் சரி, அரசியல் ரீதியிலும் சரி, புத்திசாலித்தனமாக இருக்கும். இது உங்களுக்குத் தெரியாமலில்லை. ஆனால் எம். ஜி. ஆரை முன் வைத்து அவருக்குப் பின்னால் பலப்பரீட்சை நடத்திப் பார்த்து விடுவதே உங்களிடையே உள்ள பல கோஷ்டிகளில் ஒவ்வொரு கோஷ்டியின் நோக்கமாகவும் இருக்கிறது. இன்று நடக்கும் பனிப் போர், நாளைய முஷ்டி யுத்தமாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

அமைச்சர் திருநாவுக்கரசு ராஜினாமா செய்த பிறகும் 'கட்சியில் பிளவு இல்லை' என்று நெடுஞ்செழியன் ஜோக் அடித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் செய்கிற எதுவும் உங்களுக்குப் பெருமை தேடித் தரவில்லை; உங்கள் தலைவர் எம். ஜி. ஆரின் கௌரவத்தையும் காப்பாற்றவில்லை; உங்களை நம்பித் தேர்ந்தெடுத்த தமிழ் மக்களுக்கும் சிறப்புச் செய்யவில்லை.

ஒன்று பொறுப்புணர்ந்து உட்கட்சி ஜனநாயகத்தை மதித்து, ஒற்றுமையாகச் செயலாற்றி அமைச்சரவை அமைத்து ஆட்சி நடத்துங்கள். அல்லது உங்கள் கையாலாகாத்தனத்தை ஒப்புக் கொண்டு ஆளுனரிடம் சொல்லி விடை பெற்றுக்கொள்ளுங்கள்.

இப்படி ஒரு நிச்சயமற்ற நிலையை நீடிக்கச் செய்து உங்களைத் தேர்ந்தெடுத்த தமிழக மக்களை அவமதிக்க உங்களுக்கு உரிமை இல்லை. காபந்து அரசு என்பது காலவரையறை இன்றித் தொடரக் கூடாது. அது, ஆட்சி நடத்த நீங்கள் அருகதையற்றவர்கள் என்பதையே அடிக்கோடிட்டுக் காட்டும்.

பிரதமருக்கும் ஒரு வார்த்தை: மாநில விவகாரங்களில் தேவையின்றித் தலையிட வேண்டாம்தான். ஆனால் அவசியமான சமயத்தில் தலையிடாமல் போனால் அதுவும் குற்றமாகிப் போகும். ஆளுனர் இன்னும் சற்றுக் கண்டிப்புடன் பேசலாம், எச்சரிக்கலாம் என்று சொல்லி வையுங்கள். நினைவிருக்கட்டும். உங்கள் உதவியுடன் இவர்கள் வெற்றி பெற்றனர். இன்று பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது அ. இ. அ. தி. மு. க. தலைவர்கள் அல்ல, தமிழகம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



குறிக்கோள் — தேர்தல் வெற்றி மட்டுமல்ல!

இரா. செழியன்

நடந்துமுடிந்த தேர்தலில் எதிர்க்கட்சிகள் பலமான நிராகரிப்புக்கு உள்ளானதற்குக் காரணங்கள் என்ன? இன்றையச் சூழலில் எதிர்க்கட்சிகளின் பணி என்ன? எமது வேண்டுகோளுக்கு இணங்கி தமது கருத்துக்களைச் சுருக்கமாக வழங்குகிறார் திரு இரா. செழியன்

நடைபெற்ற பொதுத் தேர்தலில் அனுதாப அலை வீசியது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்திரா அம்மையாரே முன்னின்று நடத்தியிருந்தால்கூட தேர்தல் முடிவுகள் இந்த அளவு அவர் கட்சிக்குப் பெரும்பான்மை பலத்தைத் தந்திருக்க முடியாது. அக்டோபர் 31 வரை பொதுத் தேர்தலைச் சந்திக்கத் தயங்கியவர்கள், மிக அவசரமாகத் தேர்தலை வைக்க முற்பட்டதற்குக் காரணம் அனுதாப உணர்வு பயன்படும் என்ற எண்ணமே.

அனுதாப உணர்வு ஒரு முக்கியமான காரணம். அதுவே முழுதான — முடிவான காரணம் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர்களிடை காணப்பட்ட போட்டியும், சச்சரவும், தனிப்பட்டோ ஒன்று கூடியோ இவர்களால் ஒரு வலிவான ஆட்சியைத் தர முடியும் என்ற நம்பிக்கையை மக்களிடம் உண்டாக்கவில்லை.

ஆளுங்கட்சித் தலைவர்களிடம் அனுதாபம், எதிர்க்கட்சியினரைப் பற்றி அவநம்பிக்கை, இரண்டும் தேர்தல் முடிவுகளை வெகுவாகப் பாதித்துவிட்டன. எதிர்க்கட்சித் தலைமையிடம் நம்பிக்கை ஏற்பட்டிருந்தால், முடிவுகள் மாறியிருந்திருக்கும் என்பதற்கு ஆந்திரா ஓர் எடுத்துக்காட்டு!

கொள்கை — திட்டம் — சாதனை — வாக்குறுதிகள் இவைகளை வைத்து அரசியல் முறையில் தேர்தல் நடைபெறாமல், அனுதாப உணர்வு அடிப்படையில் தேர்தல்கள் முடிவுற்றன என்றால், அந்தக் குறைபாட்டுக்கு மக்கள் மட்டும் பொறுப்பு அல்ல. அரசியல் முறையில் பிரச்னைகளைத் தெளிவாக, வலிவாக, மக்கள் முன் வைத்து, மக்களின் நம்பிக்கையைப்பெறத் தவறிய எதிர்க்கட்சிகளும் பொறுப்பு ஆகும்.

தேர்தல் என்பது ஜனநாயக முறையில் மக்களின் மதிப்பீட்டை வெளிப்படுத்துகிற ஒரு வழி முறை. ஆளுங்கட்சி எதிர்க்கட்சியாவதும், தோல்வி வெற்றியாக மாறுவதும், ஜனநாயக முறையில் நிகழக்கூடியவை, நிகழ வேண்டியவை. அரசியல் பயணத்தில் தேர்தல் என்பது ஒரு கணிப்பு, முடிவு அல்ல. கொள்கைகளையும் திட்டங்களையும், பிரச்னைகளுக்கான வழிமுறைகளையும், தொடர்ந்து நாம் வலியுறுத்த வேண்டும், மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

மக்கள் தரும் ஆதரவில் ஒரு சிறு பகுதி மாறினால்கூட பெரிய மாறுதல்கள் தேர்தல் முடிவுகளில் வந்துவிடுகின்றன. தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில்கூட, வெற்றி பெற்ற வேட்பாளருக்கு 52 சதவிகித வாக்குகளும், இரண்டாவது வந்த வேட்பாளருக்கு 45 சதவிகித ஆதரவும் இருந்தன. 4 சதவிகித வாக்குகள் மாறினால், தேர்தல் முடிவு மாறிவிடக்கூடும்.

எதிர்க்கட்சிகளிடை முன்னணி அல்லது இட ஏற்பாடு என்பது தேர்தலில் கையாளப்படும் ஒரு நடவடிக்கை, அதுவே ஒவ்வொரு கட்சியின் இறுதி இலட்சியமாக, கொள்கையாக ஆகிவிடாது. கொள்கைகளையும் திட்டங்களையும் முன்வைத்து, தேர்தல் காலத்தில் மட்டுமல்லாமல், தொடர்ந்து மக்களின் நம்பிக்கையையும், ஆதரவையும் பெற ஜனதா கட்சி முயற்சி செய்யும். கட்சியின் கருத்துகளும் திட்டங்களும் தேர்தலில் வெற்றிபெற மட்டுமல்ல, நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தருவதற்காகக் கூறப்படுபவை. மக்களின் ஆதரவையும் ஆட்சியில் உள்ளோரின் கவனத்தையும் கட்சியின் கருத்துக்களின் பக்கம் திருப்பச்செய்யும் முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும்.

ஜனநாயக முறையில், நேர்மையான — வலுவான தொடர்பு முறை அரசியல் கட்சிக்கும் பொதுமக்களுக்கும் இடையில் இருக்க வேண்டும். ஒவ்வொரு பிரச்னையிலும் மக்களுடைய விருப்பு — வெறுப்புகளை அறிய அந்தப் பிரச்னைகளில் தனிப்பட்ட கட்சிகளின் கருத்துக்களைப் பெற, செய்தித் தொடர்பு மிக முக்கியமான சாதனம். இந்தியாவில் செய்தித் தொடர்பு சாதனங்கள் தற்போது ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரசுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன. வானொலி, தொலைக்காட்சி எந்த அளவு இந்திரா காங்கிரசுக்குச் சாதகமாகப் பயன்பட்டன என்பதைக் கூறத் தேவையில்லை. விளம்பரம், காகித ஒதுக்கீடு, பெரிய பத்திரிகைகளை நடத்தத் தேவைப்படும் பெருத்த முதலீடு, பெரிய முதலாளிகளிடம் சிக்கியுள்ள தொடர்



பத்திரிகைகள், இவைகளை வைத்துப் பார்த்தால், தனியார் துறை பத்திரிகைகளுக்கும் ஆளுங் கட்சியை மீறும் வலிவு இல்லாமல் இருக்கின்றன. இருப்பினும், ஆங்காங்கு சில தனிப்பட்ட பத்திரிகைகள், அரசியலில் நேர்மையை — ஜனநாயக நெறிமுறைகளை உருவாக்கப் பாடுபடுவதால்தான், ஓரளவுக்காவது அரசியல் முறையில் கருத்துகளும் விவாதங்களும் வெளிவர உதவுகின்றன.

ஜனநாயக முறையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. குறை நேர்ந்தாலும் அதைத் திருத்திக்கொள்கிற வாய்ப்பு ஜனநாயகமுறையில் அடங்கியிருக்கிறது. இந்த நம்பிக்கையில் தான் அரசியல் பணியையும் பண்பாட்டையும் சிறப்படையச் செய்ய வேண்டும் என நினைக்கிறேன். கடைசியாக ஒன்று, நல்லவர்கள், நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள், படித்தவர்கள், அரசியல் புரிந்தவர்கள், தேர்தல் முடிவுகள் வந்த பிறகு அக்கறை காட்டி விமரிசனங்கள் செய்வதுடன் நில்லாது, அரசியலில் ஈடுபாடு கொண்டு, தமது பங்கையும் பணியையும் செய்து முடித்தால்தான், நல்ல அரசியல் — நல்ல முடிவுகள் நாட்டுக்குக் கிடைக்கும்.

என்னூறு எண்ணங்கள்!

கோயிலுக்கு உபயோகப்படுத்தும் கருங்கற்களை வைத்துக் கட்டப்பட்ட அவைகள் வீடுகள் அல்ல, கோட்டைகள். வீட்டின் திறந்த வெளி முற்றத்தில் ஒரு படை பயிற்சிகள் செய்யலாம். ரிக்ஷாக்கள் மூடு பல்லக்குகள். எதிரில் வரும் ஆட்கள் தெரிய மாட்டார்கள். தேவகோட்டைக்கு நாங்கள் போன நிமித்தம் சென்னையின் பிரபல பதிப்பாளர் அருணோதயம்அருணனின் மணிவிழாக் கொண்டாட்டம் காண.

சாப்பாட்டு இலைகள் இரண்டாள் படுத்துப் புரளுகிற்போல;

கார அப்பம், மண்டி, செட்டிக் கொளம்பு, எளகின கொளம்பு போன்ற விசேஷ நகரத்தார் ஐட்டங்கள்;

அவுக, வராஹ, போராஹ, அட, படுத்துக் கெடக்காஹ போன்ற நகரத்தாருக்கே உரிய தனித் தமிழ்;

எல்லாவற்றையும் கேட்டு, பார்த்து, சுவைத்து ரசித்து மகிழ...

பதினொன்றும் தேதி காலையில் பரிவட்டம் கட்டி அருணன் மணிவிழாக் கோலம் பூண்டார்.

முக்கியமாய்ப் புரிந்து கொண்ட விஷயம் என்னவெனில் —

அருணோதயம் அருணன் வெள்ளை வேஷ்டியுடன் தேவகோட்டை வீதியில் நடந்த ஆரம்ப நாட்களில் அவரைப் பார்த்து இன்னொருவர் கேட்டது :

'நான் வசதியோட இருக்கேன். வெள்ளை வேட்டி கட்றேன். ஒனக்குக் கட்டுப்படியாகுமா, நீ இப்படி வெள்ளை வேட்டி கட்றியே ?'

அதுதான் அவருக்கு இடப்பட்ட சவால்.

சென்னை வந்தார். மனைவியின் 'கழுத்திரு'வை அடகு வைத்து, புத்தகங்களைச் சுமந்து, சென்னை வீதிகளின் நீள அகலம் தெரிந்து, வியர்வை நீரின் ருசியை நிறைய அனுபவித்து — இன்று அருணோதயம் என்னூறு புத்தகங்களைப் பதிப்பித்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் காரணம் உழைப்புதான் என்றார் அருணன், அவருடைய உரையில்.

'ஆதலினால் சுரேஷ் — பாலாவே உழையுங்கள்' என்று யாரோ முதுகில் தட்டிக் கொடுத்து இரைந்தார்கள். யாரது ? யாரது? யாரது? எங்கள் மனசாட்சிதான். சரி; சரி; சரி; முன்னுக்கு வரவேண்டுமானால் உழைத்துத்தான் ஆகவேண்டும். உழைக்கிறோம் !

சுரேஷ்—பாலா



அரசியலிலிருந்து ஓர் ஏடு

சங்க நிர்வாகஸ்தர்கள் கூடிவிட்டார்கள். பதினைந்து வருடங்களாகத் திறமையுடன் நடத்தி வந்த சங்கத்தின் பிரஸிடெண்ட் விண்ணப்பித்துக் கொண்டார்.

'' அடுத்த மாதம் நம் வருஷாந்தர விழா ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கு எப்படி விளம்பரப்படுத்தி நம் சங்கத்திற்குப் பத்திரிகையிலும், ரேடியோ, டெலிவிஷனிலும் பிராபல்யம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று யோசிக்கத்தான்இக்கூட்டத்தைக் கூட்டச் செய்தேன்'' என்றார் பிரஸிடெண்ட்.

''உங்களுக்கில்லாத அனுபவமா? இவ்வளவு வருடங்கள் எப்படி நடத்தினோமோ அதே பாணியில் நடத்த வேண்டியதுதானே'' என்றார் காரியதரிசி. மற்றக் குழு அங்கத்தினர்கள் தங்களுக்குப் பிரஸிடெண்ட் செய்யும் ஏற்பாட்டில் முழுச் சம்மதம் என்று தெரிவிப்பது போல் தலையசைத்தார்கள்.

'' அப்படின்னு விழா நிகழ்ச்சிகள் ஏக மனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது என்றுதானே அர்த்தம் ?'' என்றார் பிரஸிடெண்ட்.

யாரும் எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லை. திடீரென்று கூட்டத்தின் பின்னிருந்து ஒரு குரல் கிளம்பிற்று.

''நிகழ்ச்சிகளில்சங்கத்திற்குப்பிராபல்யம், விளம்பரம் தரும்படியாக ஒரு அம்சமும் இல்லை'' என்று ஓர் இளைஞர் குரல் எழுப்பினார்.

கூட்டத்தில் ஒரு பரபரப்பு. இவ்வளவு வருஷமாக எதிர்க்குரல் எழுப்பாமல் நடத்தி வந்த பிரஸிடெண்ட் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''என்ன உப்புச்சப்பில்லாத நிகழ்ச்சிகள்?'' என்று இளைஞனின் ஆட்சேபணைக்கு மற்றொரு இளம் ஆதரவுக் குரல் சேர்ந்தது.

'' இதென்னடா ஒரு வருடமும் இல்லாத வழக்கம்?'' என்று மற்ற நபர்கள் அந்த இரண்டு எதிர்வாதக்காரர்களையும் நன்றாக உற்று நோக்கினர். இருவரும் போன வருடம் தான் காரியக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தனர்.

'' ஏன் ? நிகழ்ச்சிகளுக்கு என்ன குறை ? ஒவ்வொரு வருஷமும் பங்கெடுத்துக் கொள்ளும் கலைஞர்களெல்லாம் இருக்கிறார்களே?'' என்றார் காரியதரிசி.

'' நோ, நோ, நோ... இந்த நிகழ்ச்சிகள் ஒன்றிலும் சங்கத்திற்கு விளம்பரம் கிடைக்கப் போகிறதில்லை. முதலில் நாம் ஏற்படுத்தியிருக்கிற விழா சமயத்திலேயே மற்ற சங்கங்களும் போட்டியிட்டுப் புதுப் புது அம்சங்களுடன் நிகழ்ச்சிகளைத் தயார் செய்து பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்திருக்கிறார்களே, அவைகளைக் காரியதரிசியோ, பிரெஸிடெண்டோ யோசனை செய்ததாகவே தெரியவில்லையே.''

''நம் சங்கம் எவ்வளவு வருஷமாக இயங்கி வருகிறது என்று தெரியுமா ? நீங்கள் இருவரும் பிறப்பதற்கு முன்பிருந்தே இருக்கிறது'' என்று வயது வந்த பிரஸிடெண்ட் சற்றுக் கிண்டலாகவே சொன்னார்.

'' அதனாலே என்ன? நான் கேட்பதெல்லாம் சங்கத்திற்கு உங்கள் நிகழ்ச்சிகள் எப்படி விளம்பரம் கொண்டு வரும் என்பது தான்?''

''நாம் விழாவிற்கு முன்பேயே பத்திரிகையில் பதினைந்து நாட்களின் நிகழ்ச்சிகளையும் விளம்பரம் கொடுக்கிறோம். அதையடுத்து அன்றன்றைய நிகழ்ச்சியையும் கொடுக்கிறோமே '' என்றார் காரியதரிசி.



'' இதற்கெல்லாம் சங்கத்தின் கஜானாவிலிருந்து பணம் கக்க வேண்டும் ஐயா ?''

'' பணம் கொடுக்காமல் எப்படி விளம்பரம் வரும் ?'' என்றார் பிரஸிடெண்ட்.

'' அதனாலே காசு செலவழிக்காமலே கிடைக்கிற விளம்பரத்திற்குக்காக கொடுத்து வாங்க வேண்டுமா ?'' என்றார் முதல் இளைஞர். எல்லோரும் சிரித்தனர்.

'' விழாத் தலைவரை மட்டுமின்றி ஓரிரண்டு நிகழ்ச்சிகளை நடத்தித் தரப்போகிறவர்களையும் சர்ச்சைக்குரியவராய்த் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்றான் இளைஞன்.

'' என்ன?'' என்று ஆச்சரியத்துடன் கூவினர். '' இது நம் சங்கத்தின் மரபே இல்லை'' என்று ஒருமுகமாகச் சிலர் கத்தினர்.

விவாதம் காரசாரமாய்ப் போய்விட்டது. ''சரி. நாங்கள் இருவரும் காரியக் கமிட்டியிலிருந்து இப்பொழுதே ராஜிநாமா செய்கிறோம்'' என்று ஆவேசத்துடன் சொன்னார்கள்.

'' விழா சமயத்தில் இவ்விதம் உள் பூசல்கள் இருக்கக் கூடாது'' என்று பிரஸிடெண்ட் இறங்கி வந்தார்.

'' நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?'' என்றார் காரியதரிசி.

'' விழாவிற்குத் தலைமை தாங்க நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள நபர் வேண்டாம். அதற்குப் பதில்நான் சொல்லும் நபரைஅழைத்துத் தலைமையுரை வாசிக்கச் சொல்லுங்கள் '' என்றான் இளைஞன்.

'' அவரையா ? அவர் ரசாபாசமாய் ஏதாவது சொல்லிப் பத்திரிகையில்சங்கத்தின் பெயர் அடிபடும்படி செய்துவிடுவாரே !'' என்று ஒருமுகமாக மற்ற கமிட்டி நபர்கள் கேட்டனர்.

''ஆமாம். அவரைத்தான் '' என்றான் இளைஞன் அழுத்தம் திருத்தமாக.

''முடியாது. சங்கத்தின் நன்மையைக் கவனிக்க வேண்டும்.''

மறுபடியும் கூச்சல், குழப்பம்.

'' வோட்டு எடுங்கள்'' என்றான் இளைஞன். நிலைமையைப்பார்த்துட பிரஸிடெண்ட் ஒப்புக் கொண்டார். வோட்டெடுப்பில் இளைஞன் தோற்றான்.

பிரஸிடெண்ட், காரியதரிசி போட்ட நிகழ்ச்சிகள்பத்திரிகையில் விளம்பரப்படுத்தப் பட்டன. அன்று சாயந்திரம் பிரஸிடெண்டைப் பார்க்க ஒரு பத்திரிகை நிருபர்வந்தார்.

'' என் சார், தலைவர் தேர்ந்தெடுப்பதில் ஏதோ சற்றுக் குழப்பம் இருந்ததாமே.'' ஒருவர் பெயரைச் சொல்லி, '' அவரைப் போட வேண்டும் என்று ஒரு சாரார் கேட்டார்களாமே !'' என்றார் நிருபர்.

'' அதைப் பற்றி உமக்கென்னய்யா ? சங்கத்தில் எவ்வளவோ நடக்கும். அதை எல்லாம் பத்திரிகைக்குத் தெரியப்படுத்தணுமா?''என்று கோபித்து நிருபரைப்போகச் சொன்னார்.

''இரண்டு கமிட்டி மெம்பர்கள்கூட ராஜிநாமா செய்துவிட்டார்களாமே '' என்று நிருபர் மேலும் கேட்டார்.

மறு நாள் பத்திரிகையில் படித்தது சங்க நிர்வாகிகளைத் திடுக்கிடச் செய்தது.

'' சங்கத்தின் பிரஸிடெண்ட் இதைப் பற்றிக் கேட்டபோது எதுவும் சொல்ல மறுத்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் கேட்டதில் 'அந்த மாதிரி வேறொருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என கருத்து மாறுபாடு இருந்ததாக எனக்கு முன்னமேயே தெரிந்திருந்தால் இவ்வருஷத்திய தலைவர் பதவியை ஒப்புக் கொண்டிருக்க மாட்டேனே. ஏகமனதான தீர்மானம் என்று சொல்லவே ஒப்புக் கொண்டேன்' என்று சொன்னார்.''

நிலவே நீயும் விலகாதே



வாசகர் கருத்து

● நிலவை விலக வேண்டாம் என்ற சுபா எங்களை விட்டு இவ்வளவு சீக்கிரம் விலகிவிட்டாரே ...?

ஆத்துப்பாலம் ''புரட்சிப்பித்தன்''

● 'சுபா' அவர்களின் ' நிலவே நீயும் விலகாதே ' — தொடர்கதை விறுவிறுப்புடன் அமைந்திருந்தது. நல்ல முறையில் எழுதிய 'சுபா' அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்! சித்திரம் தீட்டிய 'ஜெ'க்கு நன்றி.

திருச்சி அன்பு

● நிலவே நீயும் விலகாதே'' ஒரு சந்தான கதை. இது குறிஞ்சி மலரைப் போல் பூத்திருக்கிறது.

கடலூர்—2 ஆர். வேலுமணி

● சரளமான நடை, வித்தியாசமான கருத்துக்கள், சிறந்த பாத்திரப் படைப்பு. உண்மையிலே நிலவே நீயும் விலகாதே என் உள்ளத்தில் நிரந்தர இடம் பிடித்துவிட்டது.

மதுரை—16 க்ருஷ்ஹரி

● சு.பா. இருவரின் கருத்தொருமித்த கற்பனையில் உதித்த காதல் காவியம் தான், ''நிலவே நீயும் விலகாதே''.

மாதேமங்கலம் வெ. கோபால்

● கதையின் முடிவு அபாரம். ஆனால் பாலா அனுவை இழந்தது எனக்கு வருத்தமே.

மாமாகுடி பானுரேகா

● கதைக்கேற்ற விதத்தில் சித்திரம் அமைத்திருந்த ஜெ...க்குப் பாராட்டுதல்கள்.

பொறையார்—7 வனிதா சுரேஷ்குமார்

● நிலவே நீயும் விலகாதே தொடர்கதையில் அனுசூயா என்ற அனிச்ச மலரைச் சாகடித்த பாவத்துக்குக் கதம்பா என்ற ரோஜாவைப் பாலாவுடன் இணைத்துப் பரிகாரம் தேடிக் கொண்டார்கள் போலும்.

திருச்சி—3 எம். நீலா

அந்தப் பத்திரிகை விமரிசனத்தை அடுத்து மறுப்புகளும், பேட்டிகளும் ஒவ்வொரு தினத்தாளிலும் வந்தன. விழா விஷயங்கள் ஜனங்களிடம் பரபரப்பூட்டியது. நிகழ்ச்சிகளுக்கு வந்தவர்களிடமும் இதே பேச்சுதான்.

'' அடுத்த வருஷ சங்க நிர்வாகஸ்தர்கள் தேர்தலில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்று மூத்த நபர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர்.

அடுத்த வருட தேர்தல் தினம். ஒரே அமளி. '' பழைய பெருச்சாளிகள் வேரூன்றிவிட்டனர். இதில் எவ்வளவோ ஊழல்கள் இருக்கின்றன. இதையெல்லாம் அம்பலப்படுத்த எங்களைத் தேர்ந்தெடுங்கள்'' என்று அச்சான விளம்பரத் தாள்களைச் சங்க அங்கத்தினருக்கு இளைஞர்கள் விநியோகித்தனர். ஒவ்வொருவர் வீட்டுக்குமாகப் போய்த் தங்களுக்கு வோட்டுப் போடக் கோரினர். ''எங்களைத் தேர்ந்தெடுங்கள். சங்கத்திற்கு எப்படி உயிரோட்டம் கொடுக்கிறோம், பாருங்கள்'' என்றனர்.

தேர்தலில் பழைய பிரஸிடெண்டும், காரியதரிசியும் அவர்களைச் சார்ந்தவர்களும் படுதோல்வி. இளைஞர் குழாம் வெற்றி.

'' என்ன சார் இது. இப்படியாகிவிட்டது'' என்று ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டனர். அதற்கு மேல் செய்வதற்கு ஒன்றுமில்லை.

நினைத்ததற்கு மாறாக அடுத்த வருஷ நிகழ்ச்சிகளில் ஒருவித மாறுதலும் இல்லை. ஊழல்களைப் பற்றி ஒரு பேச்சும் இல்லை. சர்ச்சைக்குரிய தலைவரோ, கலைஞரோ எவரும் இல்லை. எல்லாம் உப்புப் சப்பில்லாத நிகழ்ச்சிகள்தான் !

'' போன வருஷம் அப்படி தீவிரமாகப் பேசினுனே. இந்த வருஷம் என்ன சர்ச்சைக்குரிய நிகழ்ச்சிகளை ஏற்படுத்திவிட்டான்கள்?'' என்று சங்கத்தைவிட்டு வெளியேற்றப்பட்டவர்கள் பேசிக் கொண்டார்கள்.

'' என்ன சார், ஒருவிதமான புது நிகழ்ச்சிகளையும் காணும் இந்த வருஷம். போன வருஷம் அப்படிப் பேசினீர்கள். இலவச விளம்பரம் சர்ச்சையினால்தான் வரும் என்று சொன்னீர்கள். இந்த வருஷம் பத்திரிகையாளருக்கு ரஸமான சர்ச்சைக்கு ஒரு விஷயமும் இல்லையே!'' என்று பத்திரிகை நிருபர் இளைஞர் பிரஸிடெண்டையும், காரியதரிசியையும் கேட்டார்கள்.

''என் ஸார். நீங்கள் பத்திரிகையாளர்கள் தானே. அரசியலில் பதவிக்கு வர என்னென்ன யுக்தியைக் கடைப்பிடிக்கிறார்கள். பதவிக்கு வந்த பிறகு ஏதாவது மாற்றம் உண்டா, சொல்லுங்கள்?'' என்றார் இளைஞர் பிரஸிடெண்ட். நிருபர் பேசாமல் நடையைக் கட்டினார்.

வட்டமேஜை

● தங்கள் அட்டைப் படக் கடிதம் (13–1–85 இதழ்) படித்தேன். மிகக் கவனமாகக் கருத்துக்களுடன் எழுதப்பட்ட இக் கடிதம் கல்கி அளவில் நிற்காமல் இதன் ஆங்கில வடிவம் பதிவுத் தபாலில் பிரதமருக்கு அனுப்பப்பட்டால் நன்றாக இருக்கும்.
திருச்சி கே.வி.எஸ். சுந்தரம்

● கோடம்பாக்கம் விஷயமாக கமல் பதிலளித்த விதத்திலிருந்து தம் தொழிலில் எவ்வளவு பக்தி கொண்டிருக்கிறார் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டார்.
வடுவூர் எஸ். கண்ணன்

● மேஜர் ஜெனரல் திரு மகாதேவன் கூறுவது போல் (கல்கி 23-12-84 வட்ட மேஜை) கெரில்லா என்ற பெயர் 'Ernesto Che Guevara'வின் பெயரிலிருந்து வந்ததல்ல.
'Che Guevara' இந்த நூற்றாண்டுக்காரர். கெரில்லாப் போர் முறையோ மிகப் பழமையானது.
சென்னை–6 எஸ். ராகவன்

● பி. வி. ஆர். எழுத ஆரம்பித்திருக்கும் ''ஆகாச கங்கை'' முதல் வாரமே களை கட்டத் தொடங்கியுள்ளது! அரவிந்தன் வசவைச் சந்திக்க வராத காரணம் என்ன? சஸ்பென்ஸ் முடிச்சு நன்றாக விழுந்திருக்கிறது.
சீர்காழி இரா. சுவாமிநாதன்

● வார்ட்னில் உலக கோப்பையை வென்ற இந்தியாவின் பரபரப்பான வெற்றியைப் போல கிரிக்கெட் சிறப்பிதழ் பரபரப்புடன் இருந்தது...
வளவனூர் பாரதி கோபு

● விவசாயிகளின் ஒப்பற்ற ஒரே தலைவனைப் பற்றிய அருமை பெருமைகளை எழுதிய ஒரே இதழ் கல்கிதான் என்பதில் தனிப் பெருமை!
மாம்பாக்கம் ஜி. புருஷோத்தமன்

● பல கிரிக்கெட் விஷயங்களைப் புரிந்து கொள்ள உதவியது — கிரிக்கெட் சிறப்பிதழ் — அட்டைப்பட ''ஹீரோ ஷிவா'' அருமையாய் அமைந்துள்ளது.
தேரழுந்தூர் சி. சுப்பு

● கிரிக்கெட் க்விஸ் முதல் கேள்விக்கு விடையாக வான்கடே, பேடி, சிதம்பரம், சின்னசாமி ஸ்டேடியங்களின் பெயர்களைச் சொல்லியிருக்கிறீர்கள். கல்கத்தா ஈடன் கார்டனில் ''ரஞ்ஜி'' ஸ்டேடியம் மறைந்த இந்திய கிரிக்கெட் முன்னோடி மஹாராஜா ''ரஞ்ஜித் சிங்ஜி–நவநகர்'' பெயரில் உருவாக்கப்பட்டுப் பல ஆண்டுகளாக டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டங்களும் அங்கு நடைபெற்று வருவதைத் தெரிவிக்க ஆசை.
கு. தாம்பரம் ஸ்ரீநிவாஸன்

● ''கல்வி நிலையங்களா? கொள்ளைக் கூடங்களா!'' கட்டுரையில் கல்விக்கூடங்களைப் பற்றி கூறுகையில் திருவாளர் துரை முருகன் ''கோழிப் பண்ணைகளை விடக் கேவலமான'' என்ற வார்த்தைகளை அவர் உபயோகப் படுத்தியிருக்க வேண்டியதில்லை. நன்கு நிர்வகிக்கப்படும் சுத்தமான கோழிப் பண்ணைகள் இன்று நிறையவே உள்ளன.
பாபநாசம் இரா. பார்த்தசாரதி

● அறிஞர் அண்ணா 1962–67ல் எப்படி டெல்லியில் செயல்பட்டாரோ அப்படி கலைஞர் கருணாநிதி செயல்பட வேண்டிய தருணம் இது.
எவ்வளவு நாட்கள் தமிழ் நாடு என்ற குறுகிய வட்டத்திற்குள் கலைஞர் செயல்படுவது? கலைஞர் கருணாநிதியின் அரசியல் சாணக்கியம், சாதுர்யங்கள் அனைவரும் அறிந்ததே. கலைஞரின் குரல் இந்தியாவெங்கும் ஒலிக்க வேண்டும். இன்று டெல்லியில் தமிழ் நாட்டின் உரிமைக் குரல் ஒலிக்க, ஏன்? எதிர்க் கட்சிகளின் சங்கநாதம் முழங்கிட திறமை வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. எனவே, டெல்லியில் கலைஞர் ஆற்றக்கூடிய பணி முக்கியமாகிறது. சட்டசபைத் தேவைகளைக் கவனிக்கப் பேராசிரியர் க. அன்பழகன் குரல் போதுமானது. கலைஞர் தேசிய நீரோட்டத்தில் இணைவது இன்றைய சூழ்நிலையின் நிர்ப்பந்தம்.
மாநிலங்கள் அவை மூலமாக அல்லது உரிய முறையில் தேர்தலைச் சந்தித்துக் கலைஞர் டெல்லி செல்வது நாட்டுக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் மிகவும் உதவும். கலைஞர் டெல்லி செல்வதன் மூலம் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைப் பலப்படுத்தலாம். காவேரி பிரச்னைக்குத் தீர்வு காண வழி கோரலாம், இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி வாதாடலாம். அகாலிகள் உறவைப் புதுப்பித்து பஞ்சாப் பிரச்னைக்குத் தீர்வு காண முன்வரலாம்.
கலைஞரே! டெல்லிக்குச் செல்லுங்கள்!
பெங்களூர் சி. தீனதயாளன்
(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)



சளியினால் ஏற்படும் இந்தத் தொல்லைகளில் எது உங்களை பாதிக்கிறது?



சளியை விரைவில் விரட்ட, அதனால் உண்டாகும் எல்லாத் தொல்லைகளிலிருந்தும் விடுதலைபெற, இரட்டிப்பு சக்திவாய்ந்த

விக்ஸ் ஆக்ஷன்-500



சளி பிடித்ததோ சனி பிடித்ததோ என்பார்கள். சளியினால் ஏற்படும் துன்பங்கள் பல. உற்சாகமற்று நாளே பாழாகிறது. இரட்டிப்பு சக்திவாய்ந்த விக்ஸ் ஆக்ஷன்-500, சளியை போக்க வல்ல எல்லா மருந்துப் பொருள்களையும் ஒரே வில்லையில் கொண்டுள்ளது. சளியை போக்குவதுடன், நீங்கள் சுறுசுறுப்பாய் இருக்க உதவுகிறது. இரட்டிப்பு சக்திவாய்ந்த விக்ஸ் ஆக்ஷன்-500, நான்கு வழிகளில் செயல்படுகிறது. சளி மற்றும் அதன் உபாதைகள் அனைத்திலிருந்தும் விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

1. சளியினால் ஏற்படும் தலை வலியையும், உடல் வலியையும் போக்குகிறது.
2. மூக்கடைப்பை நீக்குகிறது.
3. சாதாரண தொண்டை கரகரப்பையும் வலியையும் குணப்படுத்துகிறது.
4. ஜுரத்தையும் ஃப்ளுவையும் கட்டுப்படுத்துகிறது.

இரட்டிப்பு சக்திவாய்ந்த விக்ஸ் ஆக்ஷன்-500 சளியை விரட்டும்போதே உங்களை சுறுசுறுப்பாய் வைத்திடும்.

15

பரிசல் கரை சேர்ந்தது

"செங்கமலா" என்ற குரல் கேட்க, அந்தப் பெண் மின்னல் விரைவில் திரும்பிப் பார்க்க,

கோயிலின் மேல் தட்டோட்டியில் வர்மன் பாதிக் கண்ணீருடன் அவளை நோக்கி யாரும் காணுதவிதமாய்ப் பிராகாரம் வரும்படி ஒரு ஜாடை கொடுத்தான்.

மெல்லிய கட்டு விரலை முகவாயில் புதைத்தாள் அவள்.

அங்குமிங்கும் கள்ளப் பார்வையைத் திருப்பிச்சிறிது நேரம் யோசித்தாள். பிறகு எதையோ மறந்தவள் போல் உள்ளே அவசரமாக ஒரு ஐதியில் போனுள்.

மறுகரையில் ஆர்க்காடு இருந்ததால் வேவுகாரர்களும் ஆயுதக்காரர்களும் இருப்பார்கள் என்று பயம்.

எனவே பரிசல் துறைக்குக் கிழக்கே ஓசையில்லாமல் ஒரு தோப்பில் தண்டு இறங்கினுர்கள்.

வெள்ளைக்காரர்கள் சித்த நிலையில் இருந்தார்கள். கையில் பிஸ்டலும் உடைவாளுமாக நடந்தார்கள.


ஜான் ஸாவேஜுக்கு ஒரு கவலை இருந்தது. இவைகள் ஆர்க்காட்டைப் பிடித்திருப்பாரா ? மாட்டாரா ?

இதற்குள் ஒற்றன் யாராவது வந்திருக்க வேண்டும். வரவில்லை.

இந்நூறு பேரை மட்டும் வைத்து ஆர்க்காட்டைப் பிடிக்க முடியுமோ ?

அங்கே சந்தா சாகிப் 1000 சிப்பாய்களை வைத்திருப்பதாகக் கேள்வி.

அப்படியே ஆர்க்காட்டைப் பிடித்துவிட்டாலும் சரி. அதனுல் திருச்சிராப்பள்ளி



ஏதோ மர்மத்தை உணர்ந்த ஸாவேஜ் குழுவில் ரிச்சார்ட் ப்ரின்ஸ் என்ற இளைஞர் அவள் பின்னுல் நடந்து போக,

புடரிப் பக்கம் ஏற்பட்ட குறுகுறுப்பால் செங்கமலா அறிந்து கொண்டாள்.

உள்ளே நிற்கும் துவார பாலகர்களை வேண்டுமென்றே வணங்கிடுவது போல் ஜாடையாக ப்ரின்ஸைக் கண்டு கொண்டு விட்டுச் சிறிது நேரம் காத்திருந்து ப்ரின்ஸ் திரும்பிப் போகவில்லை என்று தெரிந்ததும், தயக்கத்துடன் அவளாகத் திரும்பிப் பல்லக்கை நோக்கிப் போனுள். போனதும் பெருமூச்சுடன் நின்ருள். தரையைக் கீறினுள். பிறகு வர்மன் எங்கிருந்தாவது அவளைக் கவனித்துக் கொண்டிருப்பான் என்று நம்பி வலது கையை மேலே தூக்கி வளைகள் முழங்கை வழிய மென்மை அபிநயமாக 'வருகிறேன்' என்பதை உணர்த்தினுள்.

பல்லக்கில் ஏறியதும் அது புறப்பட்டது. பரிவாரங்கள் சலனமாகிப் பின் தொடர்ந்தன.

ராஜ வழியைச் சீக்கிரம் பிடித்துத் தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தன.

கன்னிகாம்பாபுரம், அமிர்தபுரம் எல்லாம் கடந்து நடுப் பகலில் சோளிங்கபுரத்தில் தண்டு இறங்கினுர்கள்.

பகல் உணவை உண்டுவிட்டுத் திரும்பப் புறப்படும்போது, செங்கமலா சோளிங்கபுரத்து நரசிங்க தெய்வத்தைப் பிரார்த்தனை செய்தாள்.

"பகவானே ! என் தந்தைக்கு எந்தத் தீங்கும் நேரிடக் கூடாது. என் பெற்ருேர்களைக் காப்பாற்று" என்ருள் மனம் உருக.

இருட்டும்போது ராணிப்பேட்டை அடுத்து பாலாற்றங்கரையை அடைந்தார்கள்.

ஆற்றில் வெள்ளம் வந்திருந்தது.

முற்றுகையின் உக்கிரம் குறையும் என்று இவைகள் நம்பினர்.

அதைப்புனித ஜார்ஜ்கோட்டை (சென்னை) கவுன்ஸிலும் ஒத்துக் கொண்டுவிட்டது.

ஆர்க்காடு பணிந்துவிட்டதா ?

அல்லது இவைகள் வெளியில் நிற்கிருரா ?

இருட்டில் கரை ஓரமாக உளவு பார்க்க ஸாவேஜின் ஆட்கள் இருமருங்கும் போயிருந்தார்கள்.

கிழக்கே அரை நாழிகை தூரத்தில் ராமய்யனும், பலராமய்யனும் இங்கிலீஷ் சிப்பாய்



கும்பல் ஒன்றைப் பார்த்ததும் திடுக்கிட்டார்கள்.

விசாரித்ததில் கிளைவுக்கு உதவிக்காகப்பதினெட்டு பவுண்ட் பீரங்கிகளைச்சென்னை கம்பெனியார் அனுப்பியிருந்தார்கள்.

ஆற்றில் வெள்ளம் போனதாலும் எதிர்க்கரையில் என்ன நடக்கிறது என்று தெரியாததாலும் இங்கேயே காத்திருக்கிறார்கள் என்று தெரியவந்தது.

செய்தி கேட்டதும் ஸாவேஜ் ஓடோடி வந்து சென்னையிலிருந்து வந்த கேப்டன் லெனுக்ஸைச் சந்தித்தார்.

லெனுக்ஸ் மொத்தம் இரண்டு பீரங்கிகளைக் கொண்டு வந்திருந்தார். கிளைவ் கேட்டதன் பேரில் கம்பெனி நிர்வாகம் அவைகளை அனுப்பித்திருக்கின்றன. பகலிலேயே அவர்கள் வந்து விட்டார்கள்.

ஸாவேஜ் தமது சகாக்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அவரது ஆணையின் பேரில் ஐந்தாறு பரிசல் ஓட்டிகள் குடிசைகளிலிருந்து அழைத்து வரப்பட்டார்கள். இந்த இருட்டில் பரிசல் விடுவதில் ஆபத்து உண்டா என்று கேட்டார்கள். ஆபத்து இல்லை. ஆனால் ஓட்டுவது கடினம் என்று இழுத்தார்கள்.

ஸாவேஜ் அதிகப் பணம் தருவேன் என்று சொன்னதும் இணங்கினார்கள்.

இங்கிலீஷ்காரர்கள் இரண்டு பரிசல்களிலும் செஞ்சுகா, அவள் தாதி ஒரு பரிசலிலும், இதர முக்கிய ஊழியர்கள் இரண்டு பரிசலிலும் ஏற்றப்பட்டார்கள்.

ஏனையவர்கள் திரும்பி விடலாம் என்று உத்தரவு இடப்பட்டது.

அக்கரை நிலைமை தெரிந்த பிறகு பீரங்கிகளை நகர்த்தலாம் என்று ஏற்பாடு ஆயிற்று.

அது ஒரு ஊமையான இருட்டு! இரண்டே தினங்களுக்கு முன் புயல் அடித்ததால் மழை ஏகமாகப் பெய்து பாலாறு சேறு மாதிரி ஓடியது. ஒரே வேகமான பிரவாகம். சுழிப்

பும் இழுப்புமாக ஓடியதில் ஒருவித தணிந்த ஆனால் உறுமல் போல் இரைச்சல்! இருட்டில் அதைப் பார்ப்பதற்கே அச்சமாக இருந்தது.

ஆகாயம் இருட்டியிருந்தாலும் நட்சத்திர வெளிச்சம் ஒரு ஊமை மினுப்பில் தெரிந்தது.

செஞ்சகாவும் அவளது தாதியும் பரிசலில் ஏற அது கிளம்பியது..

பரிசல்கார இளைஞன் தனது நீண்ட கழியால் ஆற்று மணல் படுகையில் நுனியை ஊன்றித் தனது பலத்தால் பரிசலைத் தள்ளிக் கொண்டிருந்தான்.

ஆற்றின் ஓரங்களைத் தாண்டி நடுவுக்குப் போன போது நீர் ஓட்ட வேகம் மிகையானது என்று தெரிந்தது.

பரிசல்கள் ஒன்றுக்கொன்று விலகின. ஆற்று வேகம் வேறு இழுத்துச் செல்ல செஞ்சகாவின் பரிசல் சுற்றிக் கொண்டு கிழக்கே பாய்ந்தது.

பரிசல்காரன் முயன்றும் முடியவில்லை.

அப்போது பிரவாகத்தில் ஒரு கறுத்த தலை மிதந்து வருவது போல் இருந்தது.

பரிசல்காரன் கவனிக்குமுன், நீரில் நீந்தி வந்த அந்த மனிதன் கக்கத்தில் தெப்பக் கட்டையோடு பரிசலில் ஏறினான்.

பரிசல் ஆபத்தாகத் தொட்டில் ஆட, மனிதன் அந்த பரிசல்காரனைத் தண்ணீரை நோக்கித் தள்ளினான். ''யோவ்'' என்று கூவிக் கொண்டு தண்ணீரில் அவன் விழ, அவனை நோக்கித் தெப்பக் கட்டையை எறிந்தான். பிறகு கழியை எடுத்துப் பரிசலைக் கிழக்காக விருட்டென்று விட்டுக் கொண்டு போக,

சொட்டச் சொட்ட நிற்கும் அவன் வர்மன் என்று அறிந்து செஞ்சகா திடுக்கிட்டாள்.

அருகில் இருந்த தாதி வாய் புதைத்து மற்ற பரிசல்கள் எங்கே என்று பார்த்தாள்.

இருட்டில் எதுவும் தெரியாமல் போக, ஏதோ விபரீதம் நடக்கிறது என்று புரிந்து கொண்டாள்.

வர்மன் கிழக்கே அரை நாழிகை சென்று பரிசலைக் கரையில் ஒதுக்கினான்.

''இளவரசி, இறங்கிவிடுங்கள். தப்பித்தீர்கள்'' என்று சொன்ன போது செஞ்சகா இருட்டில் வாய் பேசாது உட்கார்ந்திருந்தாள்.

ஆச்சரியத்துடன் அவள் பார்க்க —

'' ஐயா, நீங்கள் செய்தது பிடிக்கவில்லை. நான் இறங்கப் போவதில்லை'' என்றாள் கம்பீரமாக. அவள் குரலில் இருந்த உறுதியைப் பார்த்துத் திகைத்து அவளை நோக்கி வந்தான் வர்மன்.

ஆர்க்காடு 1751ஒரு தலைநகர அந்தஸ்தில் லட்சம் ஜனத்தொகையுடன் பெரிதாக இருந்தது.

அதில் கோட்டைப் பகுதி தனியாக இருந்தது. கோட்டைக்குள் நாலாயிரம் அளவு ஜனம் இருந்தார்கள்.

இங்கிலீஷ் படை வந்தபோது உண்மையாகவோ, பொய்யாகவோ, ஜனங்கள் அவர்களை ஆரவாரமாக வரவேற்றார்கள்.

அங்கங்கு மலர்களை அள்ளி வீசினார்கள். பலர் பழங்களைக் கொண்டு வந்து எதிர்ப்பட்ட சிப்பாய் கையில் கொடுத்தார்கள்.

கிளைவின் இருபது வெள்ளைக்கார அதிகாரிகளுக்கும் அது ஆச்சரியமாக இருந்தது.

இவர்கள் இப்படி வரவேற்கிறார்களே, பின்னால் குழியைத் தோண்டுவார்களோ?

இல்லை. இவர்களுக்குச் சந்தா சாகிப் பிடிக்கவில்லை. அதனால்தான் நம்மை வரவேற்கிறார்கள் என்று நினைத்தனர் சிலர்.

கோட்டை திறந்தபடி கிடந்தது. அதன் பாதுகாப்பில் இருந்த அத்தனை வீரர்களும் வெளியே போய்விட்டார்கள்.

கோட்டைக்குள் நுழைந்த கிளைவ் அவசரமாகக் கொத்தளங்களையும் காவல் மாடங்களையும் பார்வை இட்டான். உள்ளே சுரங்க வழி ஏதாவது இருக்கிறதா என்று எல்லா இடங்களையும் பரிசோதித்துவிட்டு, கடைசியில் கோட்டைக்கதவுகளை மூடச் சொன்னான்.

பிரும்மாண்ட இரும்புக் கதவு மூடப்பட்டது.

பிறகு தமது தளகர்த்தர்களுடன் அவசர ஆலோசனையில் இறங்கினான்.

நகரத்துக்கு வெளியே போய்விட்டதே ஆர்க்காட்டுப் படை ! ஏதாவது ராஜதந்திரமாக இருக்குமோ! திடீரென்று தாக்குவார்களோ ? அல்லது வேறு திட்டம் வகுத்திருப்பார்களோ ?

அடுத்த வாரம்



ராஜேஷ்

வண்ணப்படக் கட்டுரை

இதுவரை வெளிவராத பல ஆச்சரியத் தகவல்கள்

'' எத்தனை சிப்பாய்கள் அவர்களுக்கு ?'' என்றான் கிளைவ்.

'' ஸார் ! இங்கே தவசுப் பிள்ளைகளை விசாரித்துவிட்டேன். மொத்தம் 1100 சிப்பாய்கள்தான்!'' என்றான் லாம்பார்ட்.

''பீரங்கி இருக்கிறதா ?''

'' சின்னக் குழல் பீரங்கி இரண்டு இருக்கிறதாம்.''

'' அவ்வளவுதானே ! இன்னும் நமக்குப் பீரங்கி வந்து சேரவில்லை, பார் !'' என்று அங்கலாய்த்தான் கிளைவ்.

''இதற்குள் வந்திருக்க வேண்டும். நகரத்துக்கு வெளியே ஆர்க்காட்டுப் படையைப் பார்த்துத் தயங்குகிறார்களோ என்னவோ?''

''உளவுக்காரர்களை அனுப்பிவிட்டீர்களா?''

'' அப்போதே போய்விட்டார்கள் !''

''பார்ட்டன் !'' என்றான் கிளைவ். மீசை வைத்த பார்ட்டன் ஏற்கனவே கணக்குக் குறிப்பேட்டுடன் இருந்தான்.

'' பார்ட்டன் ! கோட்டையில் ஐந்து பகுதிகள் சரியாக இல்லை! சட்டுமானம் வேண்டும். இல்லாவிட்டால் எதிரி தாக்கினால் உடைந்துவிடும். உடனே இந்த வேலையை ஆரம்பிக்கிறோம். ஒரு வேளை எதிரி நம்மைமுற்றுகையிட்டால் தாங்கமுடியுமா?''

பார்ட்டன் உடனே பதில் சொல்லவில்லை. கிளைவின் நேர் முகத்தில் பார்த்துக் கொண்டிருந்தான். உள்ளே மனக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

'' ஸர் ! இரண்டே வாரங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியும். அதற்கு மேல் பண வசதி கிடையாது. ஜியார்ஜ் கோட்டை (சென்னை)யிலிருந்து வந்தால் உண்டு.''

'' அவர்களே திண்டாடுகிறார்களே! எங்கே அனுப்பப் போகிறார்கள் ?''

''அப்படியானால் முற்றுகையைத் தாக்குப் பிடிக்க முடியாது !''

''திருப்பதி பணம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள்!'' என்றான் கிளைவ்.

'' எந்தக் காலத்துக்கு வரப் போகிறது?''

''இல்லை, இனி தப்ப முடியாது. ஸாவேஜ் துரை பொம்மை ராஜுபாளையம் போயிருக்கிறார். பணம் இங்கே எப்படியும் வரும்.''

'' வந்தால்தான் ஆயிற்று !''

''சங்கர் ராவ் !'' என்று இந்தியத் தளபதியை அழைத்தான்.

'' எஸ், ஸர் !''

இங்கிலீஷ் கோட்டுப் போட்டு, பச்சைத் தலைப்பாகை அணிந்திருந்தார்.

'' கோட்டைக்குள்ளே இருக்கிற ஜனத்திற்கு மளிகைச் சாமான் இருக்கிறதா. அதை விசாரிக்க வேண்டுமே !''

''விசாரிக்கிறேன். இங்கே கோட்டை வீடு ஒவ்வொன்றிலும் சேமிப்புக் கிடங்கு உண்டு. ஆனால்...''

கிளைவ் புருவத்தை உயர்த்தினான்.

'' வெளியிலிருந்து இனி எதுவும் வரவொட்டாதபடி செய்துவிடுவார்கள்.''

'' ஓகோ ! வெளியே இருக்கும் ஆர்க்காட்டுப் படையைக் கூறுகிறீர்களா?''

'' ஆமாம் ! அவர்கள் நமது விநியோகத் தடத்தைத் துண்டித்து விடுவார்கள்!''

'' அதைத்தான் நானும் எதிர்பார்க்கிறேன்'' என்றான் லாம்பார்ட்.

கிளைவ் நெற்றியில் சுருக்கம் !

'' அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள்?''

'' ஊருக்கும் ஆற்றுக்கும் இடையே !''

'' அவர்களைத் தாக்கினால் என்ன ?''

பலரும் அதை ஆமோதித்தார்கள்.

(தொடரும்)

ஒரு வெற்றிக் கதையின் ஆரம்பம்!

நான் எழுதிய முதல் நாவல் 'சுவாமியும் சிநேகிதர்களும்'. இதை நான் இங்கிலாந்திலுள்ள பல பிரசுரகர்த்தர்களுக்கு அனுப்பி வைத்தேன். எல்லோரும் திருப்பி அனுப்பிவிட்டார்கள் ! கடைசியாக 'டெல்ப்' என்ற பிரசுரகர்த்தருக்கு அனுப்பினேன். அத்துடன் இணைந்த கடிதத்தில் ''இந்த நாவலை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தின் எக்ஸடர் கல்லூரியில் படிக்கும் என் நண்பர் பூர்ணவுக்கு அனுப்பிவிடுங்கள்'' என்று எழுதினேன். பூர்ணவுக்கும் நான் ஒரு கடிதம் எழுதிப் போட்டேன். ''என் நாவல் நிராகரிக்கப்பட்டு உனக்கு அனுப்பப்பட்டால் நீ அதில் ஒரு கல்லைக் கட்டி தேம்ஸ் நதியில் போட்டு விடு !'' என்று. நான் எதிர்பார்த்தபடியே என்னுடைய நாவல் நிராகரிக்கப்பட்டு பூர்ணாவிடம் போய்ச் சேர்ந்தது ! ஆனால் அவர் நான் சொன்னபடி அதைத் தேம்ஸ் நதியில் போடவில்லை ! லண்டனிலுள்ள பல பிரசுரகர்த்தர்களிடம் போனார். கடைசியில் கிராஹாம் கிரீன் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளரிடம் அதைக் கொண்டு போய்க் கொடுத்தார். அவர் அதைப் படித்துவிட்டு ஒரு பிரசுரகர்த்தரிடம் சிபாரிசு செய்தார். அவர் அதை உடனே ஏற்றுக் கொண்டார். எனக்கு அட்வான்ஸாக இருபது பவுன் அனுப்பினார்.

(திரு ஆர். கே. நாராயண் எழுதிய ஒரு ஆங்கிலக் கட்டுரையிலிருந்து)

—அனிதா ராமச்சந்திரன்



உங்களுக்குத் தேவை இவைதான்:
சாந்தமுள்ள மனநிம்மதி
சக்தியுள்ள உணவுகள்.



ஆம். குழந்தைக்கு பாலூட்டத் தயாராகும் நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டியது மிக எளிய விஷயம்; மன நிம்மதியோடு பாலூட்டுங்கள். அதிகமாக பால் சுரப்பதற்கு உதவிடும் உணவுகள் அனைத்தையும் உண்ணுங்கள்.

கவலைப்படுவதை நிறுத்துங்கள்

கவலைப்படுவது உங்களுக்குத் தீங்கு விளைவிக்கும்—என்றால், உங்கள் குழந்தைக்கும்தான். கவலைப்படுவதால் உங்களுக்கு நோய் ஏற்பட்டு பால் வற்றிவிடும்.

நோய்ப் பிரச்சனைகள் எதுவும் உங்களுக்கு இருந்தால், அலட்சியமாய் இருந்து விடாதீர்கள்; டாக்டரிடம் செல்லுங்கள் அவரை உங்கள் மூத்த நண்பராய்க் கருதுங்கள்.

ஆரோக்கியமான உணவைத் துவக்குங்கள்:

உடலுக்கு உகந்த ஆரோக்கிய உணவு எது என்பதை அறிந்திட பிரமாதமாக நூல் நிலையத்திற்குச் சென்று புத்தகங்களைப் புரட்டுவதோ, கலோரிப் பட்டியலைப் பார்ப்பதோ அவசியமில்லை. உங்களுக்குத் தேவை பொது அறிவுதான். உதாரணமாக, குழந்தையின் வளர்ச்சிக்கு புரதம் அதிக அளவில் தேவைப்பட்டால் அதை வழங்கக்கூடியவை, உடல் வளர்ச்சியை உருவாக்கும் பால், முட்டை, மாமிசம் ஆகும். அவற்றை நீங்கள் உண்ண வேண்டும்; புரதம் செறிந்த உணவுப் பானங்களை அருந்த வேண்டும். புரதச்சத்தை அதிக அளவில் நீங்கள் பெறுவது, உங்கள் குழந்தையும் பெறுவதாகும்—உங்களிடமிருந்து. மிகவும் முக்கியம் என்னவென்றால் கார்போஹைட்ரேட்டுகள் அதிகம் கூடாது. காரணம் அது பாலின் தரம் மற்றும் அளவைப் பாதிக்கும்.

இதுபோன்ற எளிய நடவடிக்கைகள்கூட, உங்கள் குழந்தை முறையாக முலைப்பால் குடித்திட உதவும். உடல் நிலை மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் உங்கள் குழந்தைக்கு நீங்கள் மாற்றுப்பால் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே


அமுல்ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது. முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால் புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்.

இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—

இதில் அடங்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான தானிய உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல் தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்,
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன் லிமிடெட்,
தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

ASP/AS-TAMT/83

நெருப்பு மலர்

26

இந்துமதி



மயிலாப்பூர் குளத்தங்கரையில் பஸ் நின்றதும் சாயிராமுடன் கீழே இறங்கினாள் கிருத்திகா.

"ஏங்க, இங்கேயா இருக்காரு பாலச்சந்தர்...?" என்று கேட்டான் சாயிராம்.

"ம்ஹூம்... அவர் வாரன் ரோடுல இருக்காரு....."

"வாரன் ரோடா...? அது எங்கேங்க இருக்கு...?"

"லஸ் சர்ச் ரோட்டைக் கட் பண்ணிப் போகணும்..."

"பின்னே, இங்கேயே இறங்கிட்டீங்க?"

"இங்கே எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. அதை முடிச்சுட்டுப் போறதில் உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே....?"

"ஐயையோ, ஆட்சேபணையா...?...... எனக்கா...? என்னங்க, அப்படிக் கேட்கிறீங்க...?"

"அப்போ, வீடு திரும்பற வரைக்கும் நான் செய்யற எதையும் ஆட்சேபிக்கக் கூடாது. என் பேச்சுக்கு மறு பேச்சு பேசக் கூடாது. என்ன...?"

"சரிங்க...!"

"அப்படிச் சொன்னால் போறாது..."

"வேறே எப்படிச் சொல்லணும்? சொல்லுங்க... அப்படியே சொல்றேன்..."

"சத்தியம் பண்ணிச் சொல்லுங்க..."

"சத்தியமா... மேலே என்னங்க சொல்லணும்...?"

"என் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச மாட்டேன்...."

"சத்தியமா என் பேச்சுக்கு மறுபேச்சு பேசமாட்டேங்க..."

"ஐயோ, உங்க பேச்சுக்கு மறு பேச்சு பேச மாட்டேன்னு சொல்லுங்க..."

"ஐயோ, உங்க பேச்சுக்கு மறு பேச்சு பேச மாட்டேங்க..."

அவனது குழந்தைத்தனமான பேச்சு அவளைச் சிரிக்க வைத்தது.

சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"நான் சொன்னால் நீங்க கேட்கணுமா? மறுத்துப் பேசக் கூடாதா?"

"ம்ஹூம். உங்களை மறுத்துப் பேசவே மாட்டேன்..."

"ஏன், இப்போ பாலச்சந்தர் சார் வீட்டுக்குக் கூட்டிண்டு போறேனே, அதுக்காகவா...?"

"சீசீ... என்னங்க நீங்க. அவ்வளவு மட்டமாகவா என்னை எடை போட்டுட்டீங்க...? நீங்க என்னை பாலசந்தர் வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போகவேணும். எனக்கு சினிமாவில்



பாட்டு எழுதற சந்தர்ப்பம் வேணும். வாங்க, வீட்டுக்குப் போகலாம்....''

'' அடே, என்ன அவ்வளவு கோபப்படறீங்க...?''

'' கோபமில்லீங்க. ரொம்ப வருத்தமா இருக்கு...''

'' எதற்கு வருத்தம்...?''

'' பின்னே என்னங்க... பலனை எதிர் பார்த்துப் பிரியம் வைக்கிறவன் இல்லீங்க நான். லாபம் கருதி அன்பு செலுத்துகிறவன் இல்லே...''

''என்ன இப்படியெல்லாம் பேசறீங்க...?''

'' நீங்க புரிஞ்சுக்காமல் பேசினால் நான் பேசக் கூடாதா ...?''

'' என்ன புரிஞ்சுக்கலேங்கறீங்க?''

'' உங்க மேல் ஏற்பட்ட சொல்லத் தெரியாத ஒரு பிரியத்தினால்தாங்க நான் உங்க பேச்சுக்குக் கட்டுப்படறேன்... எப்படி அந்தப் பிரியம் ஏற்பட்டது, எதுக்காக ஏற்பட்டது என்று கேட்டீங்கன்னால் காரணம் தெரியாதுங்க... பார்த்ததும் சில பேரைப் பிடிக்குமே, அந்த மாதிரி. உங்களை ரொம்ப ரொம்பப் பிடிக்குதுங்க...''

நெகிழ்ந்து போய் சாயிராமைப் பார்த்தாள் கிருத்திகா. மனசு பரவசப்பட்டுக் கிடக்க, மெதுவாகச் சொன்னாள்.

'' எனக்கும்தான் உங்களைப் பிடிக்கிறது. நீங்க சொன்ன அதே மாதிரி பிடிக்கிறது...''

''நிஜம்மாவா சொல்றீங்க...?''—அவனும் ஒரு நெகிழ்ச்சியுடன் கேட்க, அவள் சற்றே உணர்ச்சிவசப்பட்ட குரலில், ''சத்தியமாக'' என்றாள்.

அதோடு சில நிமிடங்களுக்குப் பேச்சு எதுவுமில்லை. லஸ் கார்னர் வந்து பாட்டா செருப்புக் கடையினுள் நுழைந்த கிருத்திகா, சாயிராமைப் பார்த்து, ''வாங்க'' என்றாள்.

அவன் சங்கோஜப்பட்டவனாக இலேசாய், குறுகி, ''எதுக்குங்க...?'' என்று கேட்டதும்.

அவள்,

''ஷ்... என் செய்கைக்கு ஆட்சேபணை தெரிவிக்காமே, பேச்சுக்கு மறு பேச்சு பேசலேன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கீங்க...'' என்று சொல்ல, ''சரிங்க....'' என்று தலையாட்டியபடி குழந்தை மாதிரி உள்ளே நுழைந்தான் அவன்.

நல்லதாக நூறு ரூபாய்க்கு மேல் கொடுத்து அழகான செருப்பாக வாங்கி அவனை அப்போதே போட்டுக் கொள்ள வைத்தாள். அதைப் போட்டுக் கொண்டு வெளியில் வந்த போது இலேசாய்க் கண் கலங்கிப் போயிற்று. குரல் கரகரக்க, ''ரொம்ப நன்றிங்க.....'' என்றான்.

'' இதோ பாருங்க, கவிஞர் சார். இப்படி நன்றியெல்லாம் சொல்லி என்னைத் தள்ளி நிறுத்திடலாம்னு நினைக்காதீங்க. நான் விலகிப் போவதாக இல்லை. வாங்க என் கூட....'' என்று எதிரில் சற்றுத் தள்ளியிருந்த ஒரு பெரிய ஆண்கள் துணிக் கடையில் நுழைந்து நான்கு பாண்ட்டுகளும், அதற்கேற்றதாக நான்கு ஷர்ட்டுத் துணிகளும் எடுத்து. 'அவன் வேணுங்க, போறுங்க...' என்று சொல்லிக் கெஞ்சக் கெஞ்சக் கேட்காமல், அங்கேயே இருந்த தையற்காரரிடம் அளவு எடுக்கச்சொல்லித் தைக்கக் கொடுத்து விட்டு வெளியில் வந்தபோது அவன் நிஜமாகவே அழுதுவிட்டான்.

'' இப்படியெல்லாம் யாரும் என் மீது அன்பு காட்டினதில்லீங்க. சாமி சார் காட்டற அன்பிற்கே உருகிப் போறேன். நீங்க இந்த மாதிரி பண்ணினால் செத்தே போயிடுவேன் போல இருக்குங்க...'' — யாருக்கும் தெரியாத வகையில் கண்களைத் துடைத்துக் கொண்டு அவன் சொன்னதும் நிலைமையின் இறுக்கத்தைக் குறைக்க அவள் சிரித்துக் கொண்டே பேசினாள்.

'' வீட்டுக்குப் போனதும் கணக்கு எழுதி வச்சுப்பேன். எல்லாத்துக்கும் வட்டி போட்டுப் பதிலுக்கு வாங்கிடுவேன்...''

' ஆமாம், இந்த மனசுக்கு வட்டிபோட்டு வாங்கத் தெரியுமா என்ன!' என்கிறதுபோல் புன்னகை செய்தான்.

அங்கிருந்து ஒரு ஆட்டோ பிடித்து வாரன் ரோடிற்கு வந்து பாலசந்தர் வீட்டுக்குப் போனபோது அவர் ஊரில் இல்லை. அவரது மனைவி கிருத்திகாவை வரவேற்றுஉபசரித்துக் காப்பி கொடுத்தார்.

'' என்ன, உன்னை ரொம்ப நாளாகக் காணோம்...?'' என்ற கேள்விக்குத் தான் டில்லிக்குப் படிக்கப் போனதைத் தெரிவித்து விட்டு, பாலசந்தர் வருகிற தேதியைத் தெரிந்து கொண்டு திரும்ப வருவதாகச் சொல்லிப் புறப்பட்டு வெளியில் வந்ததும் சாயிராம் வருத்தமாகச் சொன்னான்.

'' என்னங்க பண்றது. எங்கே போனாலும் என் அதிர்ஷ்டம் முன்னாலே போய் நிக்குதுங்க....''

'' என்ன நீங்க...'' என்று கோபத்தோடு அவனைப் பார்த்தாள் கிருத்திகா.

'' இதுக்குப் போய் இப்படியா மனசு உடைந்து போவது...? அவர் ஊருக்குத் தானே போயிருக்கிறார். உங்கள் பாட்டைப் படித்துப் பார்த்து மறுக்கலையே... அவர் வந்ததும் திரும்பி வந்து பார்க்கலாம். அதற்குள் எஸ். பி. முத்துராமன், ஸ்ரீதர், ஆர். சி. சக்தி இப்படி எத்தனை டைரக்டர்கள் இல்லை, போய்ப் பார்க்கிறது...''

''அவங்களையெல்லாம் உங்களுக்குத் தெரியுமா ?''

'' தெரிஞ்சுக்கலாம். இது ஒருகஷ்டமா?''

'' என்னங்க, இவ்வளவு நம்பிக்கையா பேசறீங்க...?''

'' பின்னே, உங்களை மாதிரி ஒரு சின்ன ஏமாற்றத்துக்கு மனசு உடைஞ்சு போவேனு என்ன?...''

'' அதில்லீங்க... முதல் முறையா நீங்க கூட்டிட்டு வர்றீங்க. அவர் இல்லாதது ஏதோ சகுனத் தடையா பட்டதுங்க...''

'' சகுனமா ?... ஏன் சார் நீங்க கூடவா இதையெல்லாம் நம்பறீங்க. முற்போக்குக் கவிஞருன்னு சொல்லிக்கிறீங்க... சகுனம், தடைன்னு பேசறீங்க. ராகு கால நேரத்துல மனசுக்குள் ஒரு கவிதை குதிச்சுக்கிட்டு வந்தால் எழுதாமலா விட்டுடுவீங்க...?''

'' அதில்லீங்க. வந்து.''

''வரவும் வேணும். போகவும் வேணும். இன்னிக்கு ராத்திரி முழுக்க உட்கார்ந்து உங்ககவிதை ஒண்ணுவிடாமல் படிச்சு முடிக்கப்போறேன். அந்த நோட்டுப் புத்தகத்தை என்கிட்டே கொடுங்க...''

'' இந்தாங்க... படிங்க... படிச்சுட்டு உண்மையான விமரிசனத்தைச் சொல்லணும்...''

'' பொய் சொல்றது, முகஸ்துதிசெய்ப் பேசறதெல்லாம் என்கிட்டே கிடையாது. மனசுலே பட்டதைப் பளிச்சுனு சொல்லிடுவேன். அதனால் கவலைப்படாதீங்க. உண்மையைத்தான் சொல்வேன்...''

மீண்டும் குளத்தங்கரைக்கு வந்தபின் கிருத்திகாவுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. டில்லிக்கு டெலிபோன் பண்ணி பாஸ்கரப்பாவிடமும், ராம்சிங்கிடமும் பேச வேண்டும் என்று தோன்றியது. அதனால் சிறிது தயங்கிச் சாயிராமைப் பார்த்தாள்.

'' என்னங்க...?'' என்று கேட்டான் அவன்.

'' இப்போ உடனே உங்களுக்கு வீட்டுக்குப் போகணுமா...?''

'' அப்படி ஒன்றும் அவசரமில்லீங்க. ஏன் கேட்கிறீங்க...?''

'' இல்லே. டில்லிக்கு ஒரு டிரங்கால் பண்ணணும்னு நினைக்கிறேன். நான் தங்கியிருந்த வீட்டு மனிதர்களுடன் பேசணும்...''

''ஓ... தாராளமாகப் பேசிட்டுப் போகலாம். வாங்க...''

இருவரும் மவுண்ட் ரோடு தபால் நிலையத்துக்கு வந்து டில்லி நம்பரைப் பதிவு பண்ணிவிட்டுக் காத்திருந்தார்கள். அடுத்த அரை மணிநேரத்துக்கெல்லாம் இணைப்பு கிடைக்க— பக்கத்துக் கூண்டினுள் போய்க் கிருத்திகா பேச ஆரம்பித்தாள்.

'' ராம் சிங், நான் கிருத்திகா பேசறேன். வீட்டிலிருந்து இல்லே. வெளியிலிருந்து பேசறேன். ஆமாம், இனி வீட்டு நம்பரில் நான் கிடைக்கமாட்டேன். வாரம் ஒரு தரம் நானே டிரங்கால் பண்றேன். எப்படி இருக்கீங்க...?''

'' அச்சா ஹை மேம் ஸாப். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்...?''

''பஹுத் அச்சா ஹை ராம்சிங். அப்பா இருக்காரா ?...''

'' இதோ பக்கத்திலேயே, காத்துக்கிட்டிருக்கார், தரேன்...''

'' அப்பா, கிருத்திகா பேசறேன். எப்படி இருக்கீங்க...''

'' நான் நன்றாக இருக்கேம்மா, நீ எப்படி இருக்கே...?''

'' நன்றாக இருக்கேம்பா—''

''த்ரீ மினிட்ஸ் ஓவர்...'' — இடையில் குறுக்கிட்ட பெண் குரலுக்கு மேலும் மூன்று நிமிடங்கள் நீடிக்கச் சொல்லிவிட்டுப் பின் கேட்டாள்.

''அர்ஜுனிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததாப்பா...?''

''இல்லேம்மா... என்னாலும் தொடர்பு கொள்ள முடியவில்லை. டெலிபோன் தொடர்பை முற்றிலும் அவர்கள் கத்தரித்து இருக்கிறார்கள். யாராலும் பஞ்சாபோடு எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள இயலவில்லை. எனக்குத் தெரிந்த ராணுவ அதிகாரிகள் அத்தனை பேரையும் விசாரித்துவிட்டேன். ஒரு தகவலும் தெரியவில்லை என்கிறார்கள். அவனாகச் செய்தி அனுப்புகிற வரை — அல்லது திரும்பி வருகிறவரை ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாதம்மா...''

அதைக் கேட்ட கிருத்திகாவின் மனத்தில் கவலை இலேசாய்ப் படர ஆரம்பித்தது. ''ஒண்ணும் பயமில்லையேப்பா. அவர் ஜாக்கிரதையாக இருப்பார் இல்லையா....?'' என்று கேட்டதும்,

'' சீ... பைத்தியம்...'' என்று நம்பிக்கையோடு சிரித்தார் அவர்.

'' இது என்ன யுத்தமா. இப்படிக் கவலையும் பயமும்பட...? சாதாரண உள்நாட்டுக் கலவரம்தானே...? நிமிஷமாக அடக்கிவிட்டுத் திரும்பிவிடுவார்கள். பயப்படாமல் தைரியமாக இரம்மா....''

'' சரிப்பா... அப்போது மீண்டும் அடுத்த வாரம் பேசுகிறேன். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்...'' என்று சொல்லிவிட்டு மீண்டும் ராம்சிங்கைக் கூப்பிட்டு, ''வேளை தவறாமல் அவருக்குச் சாப்பாடு தந்துகவனிக்கச்சொல்லித்தொடர்பைத் துண்டித்து, பணம் செலுத்திவிட்டு வெளியில் வந்து சாயிராமிடம், ''போகலாமா...'' என்று கேட்டு பஸ் பிடித்து வீட்டிற்கு வந்த பின்னர்கூட அவள் மனம் அர்ஜுனிடமே இருந்தது. 'எப்படி இருக்கிறாரோ, என்ன செய்கிறாரோ...?' என்று கவலைப்பட்டது....

கூடவே, ' சீ, இது என்ன யுத்தமா, ஒரு சாதாரண உள் நாட்டுக் கலவரம்தானே... அப்பா சொன்ன மாதிரி நிமிடமாய் அடக்கிவிட்டுத் திரும்பிவிடப் போகிறார். இதற்கு ஏன் இப்படி மனத்தை அலட்டிக் கொள்ள வேண்டும்...?' என்றும் தோன்றியது.

மிகுந்த முயற்சியுடன் சமாதானப்படுத்திக் கொண்டு படுக்கப் போனாள்.

(தொடரும்)



'' என்ன ? மந்திரி மேடையிலே தேம்பித் தேம்பி அழுறாரே !''

''ஆமாம் ! விலைவாசி அதிகமாயிட்டதனாலே ஜனங்க படற கஷ்டத்தை நினைச்சு அவருக்கே துக்கம் தாளவில்லையாம் !''

—ஜெயந்தி

பஸ்ஸை விட்டு இறங்கியதும், என் கையிலிருந்த சூட்கேஸை நேசத்தோடு வாங்கிக் கொண்ட தாமு அடுத்து கேட்ட கேள்வி என்னை அயர வைத்தது.

''உன் பிரண்டு மூர்த்தி அந்தக் கோடி வீட்டுக் கலாவை இழுத்துட்டுப் போயிட்டான் தெரியுமோ?''

வெவ்வேறுவிதமான கற்பனைகளோடு கைகுலுக்கிக் கொண்டிருந்த இதயம் கண நேரத்தில் திசைமாற, ஆச்சரியமும் அதிர்ச்சியுமாய் ஒரு கலவை நரம்புகளில் கிரியைப் புரிய, நான் நிமிஷ நேரம் மௌனமாக நின்று விட்டேன்.

இதை எதிர்பார்த்திருந்தது வாஸ்தவம் தான் என்றாலும் உண்மையை ஜீரணிப்பது எளிதாக இல்லை.

கடந்த இரண்டு மாதங்களாகக் கடிதம் எதுவும் போடாமல் மூர்த்தி மௌனம் சாதித்ததற்கான காரணம் புரிந்து போனதால் ஒரு சுமை குறைந்ததைப் போலிருந்தது.

''என்ன போகலாமா...?''

தாமு ஞாபகப்படுத்தினான். மெதுவாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தோம்.

''ஏன் உனக்குக் கடிதாசு போட்டிருப்பானே?''

தாமுவின் குரலில் மெலிதாக ஒரு நக்கல் இருந்தது. ''உன் ஸ்நேகிதன் யோக்கியதையைப் பாரேன்'' என்று குத்திக் காட்டும் கிண்டலின் கூரிய முனை நெருடியது. அது அவனுடைய இயல்பு.

உலகத்தில் அவனைத் தவிர மற்றவர்கள் எதைச் செய்தாலும் அதை அப்பட்டமான அயோக்கியத்தனமாகவும், வடிகட்டினமுட்டாள்தனமாகவும் மட்டுமே அவனால் பார்க்க முடிந்தது. இப்படி ஒரு வக்ரபுத்தி தனக்குள் வளர்ந்து கொண்டிருப்பதைப் பற்றி அவன் அதிகமாக அலட்டிக் கொள்வதில்லை.

''மூர்த்தி கலாவை ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து கொண்டான்'' என்பதைச் சொல்ல எத்தனையோ நாசூக்கான வழிகள் இருக்கும் போது, 'இழுத்துட்டுப் போயிட்டான்' என்று சொல்வதில் அவனுக்குத் தனி இன்பம் இருக்கிறதென்றால் பாருங்களேன்!

''ம்ம்... போட்டான்' என்பதோடு அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தேன். 'இல்லை' என்று சொல்லி விட்டால் தாமுவின் வாய்க்கு அவல் கிடைத்துவிடும். அப்புறம் ஸ்நேகத்தை பற்றி அவன் அடிக்கும் லெக்சர் மகா சித்திரவதையாகிவிடும்.

''வீட்லே எல்லாரும் சௌக்கியம்தானே'' சம்பிரதாயமாக நான் கேட்டு வைத்ததற்கு தாமு வழக்கம்போல ஆரம்பித்துவிட்டான். ரிடையரான அப்பா பணத்தை இவன் கையில் கொடுக்காததிலிருந்து, தீபாவளிக்கு வந்த தங்கை இவன் மனைவியோடு மோதிக்

காகிதப் பஞ்சு

ஜெரா



கொண்ட நிகழ்ச்சி வரை மூச்சு விடாமல் விளாவரியாக அவன் சொல்லி முடிக்கும் போது வீடு நெருங்கிவிட்டது.

நல்லவேளையாக மூர்த்தி விஷயத்தை இதோடு விட்டு வைத்தானே என்ற நன்றியுணர்வில் நானும் கொஞ்சம் அவனுக்குப் பரிந்து பேச, வீட்டுக்குப் போனதும் உபசாரங்களில் கொஞ்சம் தாராளமாக இருந்தான்.

ஒரு வருடத்துக்குப் பிறகு வந்திருக்கிறேம் — வீட்டிலிருப்பவர்களோடு கொஞ்சம் ஒட்டுதலாகப் பேசவேண்டும் என்ற நினைவெல்லாம் விட்டுப் போய் மூர்த்தி என்னை முற்றுமாக ஆக்கிரமித்திருந்தான்.

குளியல், சாப்பாடு எல்லாம் யந்திரகதியில் முடித்துக் கொண்டு அம்மாவிடம் மட்டும் 'அவசரமாக வெளியே போகிறேன்' என்று சொல்லிவிட்டு நடையில் இறங்கினேன் — தாமு அவசரமாக ஓடிவந்து ''என் ஸ்கூட்டரை எடுத்துட்டுப்போயேன்' என்று தோழமையோடு சொல்லிவிட்டுச் சாவியை நீட்டினான்.

வண்டியைக் கிளப்பும் முன் மெல்ல என்னிடம் குனிந்து ''மூர்த்தி வீட்டுக்குத்தானே போறே'' என்று கிசுகிசுத்தான். ஏதோ, 'கொலை செய்யத்தானே போறே' என்பதைப்போல.

நான் எரிச்சலை அடக்கிக் கொண்டு ஸ்பஷ்டமாய்ப் புன்னகைத்தேன்.

''பி கேர் புல், மூர்த்திமேலே அவங்க வீட்டுலே இருக்கற அத்தனைபேருக்கும் செமை கோபம்! அந்தக் கோபத்தை உன்கிட்டே காட்டிடப் போறாங்க! போன வாரம் மூர்த்தியை பார்த்தப்ப என்கிட்டே ஒரு மூச்சு அழுதுட்டான் — அவங்கப்பா கம்பெனி வாசலுக்கே போய் அவனை கன்னா பின்னான்னு



திட்டிட்டாராம்! அதனாலதான் சொன்னேன். டோன்ட் மிஸ்டேக் மீ.''

தாமு கையாட்டி சிக்னல் கொடுக்க வண்டி சீறியது — கோடி வீட்டைக் கடக்கும் முன்பு வேகத்தை மட்டுப்படுத்திவேன் — கலாவின் வீட்டில் பூட்டு தொங்கியது —

ஸ்டோரி—மேலே தொடரும் முன்பு கொஞ்சமாக என் சுயபுராணம் — அப்பா, அம்மா, தாமு, நான், ஒரே ஒரு தங்கை. அப்பா ஒரு ரிட்டயர்ட் பாங்க் ஆபிசர் — தாமு உள்ளூர் பேங்கில் அதிகாரி — தாமுவுக்கும், தங்கைக்கும் கல்யாணமாகி தலைக்கு இரண்டு வாரிசுகளை உருவாக்கிவிட்டு மூன்றுவதற்கு முயன்றுகொண்டிருக்கிறார்கள். தங்கை பெங்களூர்வாசி — அடியேன் என்ஜினியரிங் படித்துவிட்டு, கொஞ்ச காலம் உள்ளூர் வேலைக்கு லோலோவென்று அலைந்து, உருப்படவழியில்லாமல் இப்போது பிரதானப் பதவியில் பிலாய் ஸ்டீலில் ஒட்டிக் கொண்டிருக்கிறேன் — கடைசியாக ஊருக்கு வந்தது, ஒரு வருடத்துக்கு முன்பு — இனி........

ஒண்ணுவதிலிருந்து பட்டப்படிப்பு வரை என் கூடவே ஒட்டிக் கொண்டிருந்த மூர்த்தி புத்திசாலித்தனமாக உள்ளூரிலேயே வேலை வாங்கிக் கொண்டான் — பொழுது போகாத பள்ளி நாட்களில் நான் கவிதை, இது, அதுவென்று காகிதத்தைத் துவம்சம் செய்து கொண்டிருந்த நேரங்களில் மூர்த்தி காதலிக்க ஆரம்பித்தான் — பிராக் போட்டிருந்த பருவம்தொட்டு, பக்கத்து வீட்டுக் கலாவிற்கு என்னை அடிக்கடி பார்க்கவரும் மூர்த்திமேல் ஒரு பிரேமை இருந்தது. அது பரிணாம வளர்ச்சி அடைந்து காதலாகி, என்னுடைய ஒசிக் கவிதையில் அவன் அதை வளர்க்க, அவள் சிலிர்த்துப் போய் பாலையும் பஞ்சணையையும் வெறுத்துத் தவிக்க, விஷயம் இரண்டு பக்கத்துக்கும் தெரிந்துபோய் அட்டஹாஸமாகத் தீபாவளி கொண்டாடினார்கள்.

எனக்கு இப்படிப்பட்ட நிரமான சமாசாரங்களில் கொஞ்சம் சாமர்த்தியம் போதாது என்பதில் அப்பாவிற்குப் பரிபூரண நம்பிக்கை இருந்தாலும், நான் மூர்த்திக்கு உதவுவதில் அவருக்கு ஆட்சேபம் இருந்தது. தாமு அதை முடிந்தவரை ஸ்திரப்படுத்தினான் —

அப்போது பார்த்துப் பிலாய் ஸ்டீலிலிருந்து எனக்கு ஆர்டர் வரவும், ''ஒன்று பிலாய்க்குப் போ அல்லது மாப்பிள்ளை பாரு''என்று அப்பா பிளாக்மெயில் பண்ண ஆரம்பித்துவிட்டார்—

மாப்பிள்ளையாவதில் எனக்கு அவ்வளவாக உடன்பாடு இல்லாது போகவே, எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் முகத்தில் தாடி வளர்த்துக் கொண்டு, விரலிடுக்கில் சடுகும் சிகரெட்டோடு, மூர்த்தி வந்து வழியனுப்ப, ஒரு நாளில் பிலாய்க்கு வண்டியேறினேன்.

மூர்த்தியின் வீட்டில் பணத்துக்குக் குறைவில்லை — நகரில் பெரிய பலசரக்கடை இருந்தது — இரண்டு மூன்று லாரி ஓடிக் கொண்டிருந்தது — கிராமத்தில் நிலபுலன்கள் உண்டு — அவனுடைய தந்தையும், இரண்டு அண்ணன்களும் கொஞ்சம் கரடுமுரடான டைப், எல்லோரும் மூர்த்தியின்மேல் அவர்

களுக்கு இருந்த பிரியம் உண்மையானது —அடேயப்பா! அவனைத் தரையில் கால்பாவ விடமாட்டார்கள் — ஆள் மாற்றி ஆள் தாங்கிக் கொண்டே இருப்பார்கள்.

மூர்த்தி கேட்டு இல்லை என்று ஆன விஷயம் எனக்கு விவரம் தெரிந்தவரை எதுவுமே இல்லை.

அப்படிப்பட்டவர்கள் இந்தக் கல்யாண விஷயத்திலும் அவனுக்கு கைகொடுத்திருக்கலாம் — கொஞ்சம் அனுசரித்து அனுவசியப் பகைமையைக் குறைத்திருக்கலாம்.

பாசத்துக்குரியவர்கள் கொஞ்சம் பாதை மாறிவிட்டாலும் அந்த பாசமே துவேஷமாகி விடுவதில்லையா?

இப்போது மூர்த்திக்கும் அந்த நிலைதான்.

நான் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு நுழையும்போதே வாசலுக்கு வந்து கொண்டிருந்த மூர்த்தியின் அப்பா பார்த்துவிட்டார் — முகத்தில் என்னும், கொன்னும் வெடிக்கும் என்று எதிர்பார்த்தேன். மாறாகச் சிற்றுய் மலர்ச்சி எட்டிப் பார்த்து, புன்னகை கோடிட்டது.

''அடேடே, ராமுவா, எப்பப்பா வந்தே!''

''இன்னிக்குத்தான் வந்தேன். எல்லாரும் சௌக்கியம்தானே.''

சட்டென்று முகத்தில் கருமை படர 'ம்ம்ம்' என்று செருமிக் கொண்டவர், ''எல்லாம் கேள்விப்பட்டியா'' என்றார் கரகரப்பாக.

நான் வருத்தத்தைக் காட்டவேண்டிய சிரத்தையில் சிக்கியவனாய் லேசாகத் தலை குனிந்து கொண்டு 'ம்' கொட்டினேன்.

மகன்மேல் வைத்திருக்கும் பாசம், அவனைப் பிரிந்து நிற்கும் துயரம், எல்லாமுமாகச் சேர்ந்து இவரை மட்டுமல்ல, இந்த வீட்டிலுள்ள அத்தனை பேரையும் அடித்து வீழ்த்தி இருக்கும்! இவர்கள் துயரத்தை எப்படியாகிலும் துடைக்கவேண்டும்! பாசப் பெருக்குக்கு ஒரு வடிகாலை எப்பாடுபட்டாவது ஸ்தாபித்தாக வேண்டும் — மனத்துக்குள் நிர்மானித்துக் கொண்டேன்.

''கம்பெனி கேட்டிலேயே அவனைப் பாத்துக் கேட்டுப்புட்டேன் ராமு — பெத்தவங்க மேலே பாசமிருக்காடா பரதேசிப் பயலேன்னு...''

அவரைத் தேற்ற முயல்பவனாக ''ஏதோ தெரியாமே செஞ்சுட்டான்... பெரியவங்க நீங்க மன்னிச்சு...'' என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவர் கோபமாகக் குறுக்கிட்டார் — சத்தம் கேட்டு வெளியே வந்த மூர்த்தியின் அண்ணனும், அம்மாவும் என்னை வரவேற்கவும் தோன்றுமல் அவர் பேச்சில் ஈடுபாடு காட்டியபடி நின்றுகொண்டனர்—

''என்ன தம்பி தெரியாம பேசுக! மாசம் சுளையா ரெண்டாயிரம் ரூபா வாங்குறானில்லே — எப்படி! நான் கஷ்டப்பட்டுப் படிக்க வச்சதுனலதானே! அட, வீட்டுக்கு ஏதோ, நூறு, இருநூறுன்னு குடுப்போம்னு தோண வேண்டாம்! எலி கொழுத்தா வளையில தங்காதுன்னு காட்டிட்டானில்லே.''

எனக்குத் திக்கென்றது — சொல்லி வைத்தாற்போல் மூர்த்தியின் அண்ணனும் அவன் வீட்டுக்குப் பணம் தராமல் சம்பாதிப்பதை எல்லாம் ஊதாரித்தனமாக செலவுசெய்வதைப் பற்றியே பேசினன். அதையும்விட கொடுமை மூர்த்தியின் அம்மா சொன்னதுதான் — நான் ஆடிப்போய் விட்டேன்—குப்பென்று வியர்த்துப் போனது. எங்கெல்லாமோ வலி தோன்றி உடம்பு பதறியது.

''ம்க்கும் — எங்களை ஏன் அவன் கவனிக்கப் போறான்! சம்பாதிக்கறதை எல்லாம் அந்தச் சிறுக்கிக்கு புடவை எடுக்கறதிலேயும் அவளோட அப்பன்வூட்டுக்கு சவரட்சணை பண்றதிலேயும் செலவு பண்றான். அவளோட அம்மா மாசக் கணக்கிலே அங்கே உட்கார்ந்து கிட்டு இருக்கு! எனக்கு அவன் இது வரைக்கும் செலவுக்குன்னு ஒரு அஞ்சு ரூபா, அட அது வேண்டாம், வெத்தலைபாக்கு வாங்க ஒரு நாலணு குடுத்திருப்பானு!! வாங்கற சம்பளத்தை எல்லாம் பொண்டாட்டி காலடியில் கொட்டிடறான், பாவிப் பய''

மூர்த்தியின் அம்மா தேம்பி அழவும் எனக்கு முன்னல் இருள் மண்டியது.. இவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம்... பணமா? இவர்களுடைய பாசத்தின் எல்லைகள் பொருளாதாரத்தின் பரிமாணத்தில் மட்டுமே நிர்ணயிக்கப்படுகிறதா? உறவுகளின் அடையாளங்கள் உருண்டோடும் நாணயங்களில் மட்டுமே இருக்கிறதா! இந்தப் பிரிவின் காயங்கள் அத்தனையும் பொய்யா!

ஒரு கட்டுக் கரன்சி காகிதங்களை வீசி எறிந்து, அவற்றையே பஞ்சாக்கி இந்தக் காயங்களை ஒற்றி எடுத்த மாயத்தில் அவை எல்லாம் காய்ந்து போகுமா!

''அடேய் மூர்த்தி — இனி மாதாமாதம் ஒரு கணிசமான தொகையை இவர்களிடம் கொடுத்துவிடு — கழன்று போன உறவுச் சங்கிலிகள் கணநேரத்தில் பூட்டிக் கொள்ளும் — பாசமும் நேசமும் மறுபடியும் பறந்து வந்து ஒட்டிக் கொள்ளும்''

நான் என்னையுமறியாமல் விசும்பி அழ, எல்லோருமென்னைத்தேற்றுவதற்குத் தயார்ப் படுத்திக் கொண்டார்கள்.

சுமை இலேசாக இருக்க வேண்டும் என்று எண்ணாதீர்கள். முதுகு பலமாக இருக்க வேண்டும் என்று எண்ணுங்கள்.
—அபிரகாம் லிங்கன்
பொ. க. சேஷாத்திரி



"உங்கள் காஸ் சிலிண்டர் மாற்றப்படும்போது நீங்கள் செய்யவேண்டிய முதல் வேலை என்ன?"



முதலில் சமையல் அறையில் உள்ள அனைத்து நெருப்புக்களையும் அணைக்கவும்; அகல் விளக்கு, அகர்பத்தி, மண்ணெண்ணெய் ஸ்டவ், சூலா விளக்கு, சிகெரட்டுகள் அனைத்தும். பின்பு எல்லா மின்சார சாதனங்களின் ஸ்விட்சுகளையும் அணைக்கவும்; ரெஃப்ரிஜிரேட்டரையும்கூட, நல்லது.

டெலிவரி செய்பவரால் செய்யப்படவேண்டியவை:

1. பிரஷ்ஷர் ரெகுலேட்டர் ஸ்விட்ச்/சிலிண்டர் வால்வு மற்றும் உங்கள் ஸ்டவ் மீதுள்ள காஸ் டேப்புகள் மூடப்பட்டிருப்பதை உறுதி செய்தல்.
2. புதிய சிலிண்டர் மீதுள்ள சீலை (முத்திரையை) அவர் உங்களுக்குக் காட்டுதல்
3. கசிவிற்காக, சிலிண்டர் வால்வு ரெகுலேட்டர் ஜாயின்ட், ரப்பர் ட்யூப் மற்றும் அதன் இணைப்புகளை சோதனை செய்தல்.
4. இரண்டு பர்னர்களும் பற்ற வைக்கப்பட்டு 'ஃபுல்' முதல் 'லோ' வரை சோதனை செய்தல்.
5. வேறு ஏதாவது அவசியமாக கவனிக்கப்படவேண்டியிருந்தால் மெக்கானிக்கை அனுப்புதல்.

பாதுகாப்பை முன்னிட்டு அதைச் செய்யவும்.

ARTIG 4374 TAM

Bharatgas



குக்கிங் காஸை உங்கள் சிறந்த நண்பனாக்கிக் கொள்ளவும்.

பொதுமக்கள் நலனை முன்னிட்டு பாரத் பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட்டால் வெளியிடப்பட்டுள்ளது.

வாசகர் பங்கு



ஏமாறாதே

புகையில் கரைந்த பொருட்கள்

பம்பாயில் இருந்தபோது பூச்சிக் கொல்லி புகை அடிக்கும் கம்பெனியிலிருந்து விசிட்டிங் கார்டுடன் வந்தனர் சிலர். நாங்களும் திருப்தியடைந்து வீட்டைத் திறந்துவிட்டு விஷப் புகை அகலும்வரை வெளியே காத்திருந்தோம். தங்கள் வேலை முடிந்ததும் பணம் பெற்றுச் சென்றனர் கம்பெனி ஆட்கள். உள்ளே போய்ப் பார்த்தபோது ஏக அதிர்ச்சி. டிரான்ஸிஸ்டர் முதல் ஜரிகை புடவை வரை பல பொருட்களைக் காணவில்லை! கார்டிலிருந்த விலாசத்தைத் தேடிச் சென்றோம். அத்தகைய கம்பெனியே இல்லை என்று தெரிய வந்தது.

திருமதி கோமதி சுந்தரேசன், சென்னை-18

கதையை மாற்றி, ஏமாற்றி

மூர்மார்க்கெட் அருகே ஷூ பாலிஷ் செய்பவரிடம் ஒரு ஷூவை அவிழ்த்துக் கொடுத்து பாலிஷ் செய்யச் சொன்னேன். அவர் மற்றொன்றையும் கழற்றி எடுத்துப் பாலிஷ் போட்டுவிட்டு, '' 35 ரூபாய் தரணும்'' என்றார். அதிர்ந்து போய் ஏன் என்று கேட்டதும் ஷூவை எனக்கு விற்பது போல் கதையை மாற்றி, ''என்ன சார், கலாட்டா பண்றே?'' என்று பேச ஆரம்பித்துவிட்டார். சுற்றியிருப்பவர்களும் நான் ஸாக்ஸ் அணியாததால் என்னை நம்ப மறுத்தனர். 25 ரூபாய் கொடுத்து என் ஷூவை நானே வாங்கி வந்தேன்.

எஸ். அனந்தராமன், சென்னை-1





அவசரத்தால் அஜாக்கிரதை

இரயில் கிளம்பும் நேரம் நெருங்கிவிட்டது. இடம் பிடித்துத் தருவதாகக் கூறிய போர்டர் கையிலிருந்த பெட்டியை வாங்கிக் கொண்டு ஓடினார். அவரைத் தொடர்ந்து ஓடினார் மாமா. நகர ஆரம்பித்துவிட்ட வண்டிக்குள் தாவி ஏறினார் போர்டர். மாமா கஷ்டப்பட்டுத் தாமும் தாவினார். வண்டியின் வேகம் அதிகரித்தது. போர்ட்டர் மறுவழியாக ஓடும் வண்டியிலிருந்து பெட்டியுடன் வெளியே குதித்தார். மாமாவுடன் ரயில் விரைந்தது. இப்போதெல்லாம் போர்ட்டர் என்றாலே மாமாவுக்கு அலர்ஜி என்று சொல்லத் தேவையில்லை.

எம். எஸ். ஜி. சாந்தி, ஊட்டி-1

இன்னும் வருது தென்னை

நான்கு வருடங்களுக்கு முன்னால் அரசாங்கப் பதிவு பெற்ற தோட்டம் என்று இரசீதுப் புத்தகத்துடன் தென்னங் கன்று விற்க ஒருவர் வந்தார். பக்கத்துத் தோட்டக்காரர் 180 ரூபாய் முன் பணம் கொடுத்து நூறு கன்றுகளுக்கு ஆர்டர் கொடுத்தார். பதினைந்து நாட்களில் தருவதாகக் கூறிச்சென்ற விற்பனையாளர் பிறகு வரவேயில்லை!

பி. கமலம், ஞானிபாளையம்

கோயில் வாசலில்

சேலம் பெரிய மாரியம்மன் கோயிலில் சில சிறுவர்களிடம் செருப்பைக் கொடுத்து விட்டு டோக்கன் பெற்றுச் சென்றோம். தரிசனம் செய்துவிட்டு வந்தபோது சிறுவர்களையும் காணவில்லை. செருப்பையும் காணவில்லை. புதிய செருப்பு களவு போனதோடு இளஞ்ஞரின் மனமும் குணமும் அல்லவா கெட்டுப் போயுள்ளன என்ற வருத்தமே மேலோங்கியது.

ஆர். பார்வதி, சேலம்-1

—தொடர்ச்சி பக்கம் 37

வாய்க்கும், பற்களுக்கும் இயற்கை வழி முழு பாதுகாப்பு



பற்சிதைவுகளை தடுக்க,
துர்நாற்றத்தை அகற்ற, ஈறுகளுக்கு
உறுதியளிக்க இலஞ்சி, ஏலக்காய்,
கிராம்பு, ஜாதிக்காய் ஆகிய நான்கு
முக்கிய கிருமி நாசினிகளை ஒன்று
சேர்த்து தயாரிக்கப்பட்ட
ஒரே பற்பசை எ:.பர்மின்ட்

இது ஒரு ஆயூர்வேத அடிப்படைத் தயாரிப்பு

* தற்போது
தமிழ் நாட்டில் மட்டும்
கிடைக்கும்



தயாரிப்பாளர்கள்:
டென்டி:.ப்ரைசஸ்
மாலா P.O., திரிதலா-679 534
கேரளா

விநியோகஸ்தர்கள்:
ஜெஜி மார்க்கெட்டிங்
எ-1, ஸ்ரீதேவ் அபார்ட்மென்ட்ஸ்,
31, சி.ஐ.டி. நகர், முதல் மெயின் ரோடு,
நந்தனம், சென்னை-600 035

APRC/EFT/1/85



பாம்பே டையிங்

புத்தாண்டு தள்ளுபடி விற்பனை

15% தள்ளுபடி

பாலியெஸ்டர்
ஸூட்டிங்,
ஷர்ட்டிங்குகளுக்கு.

15% தள்ளுபடி

பாலியெஸ்டர் மற்றும்
பருத்திச் சேலைகள், டிரெஸ்
ப்ரிண்ட், ரூபியா, கேம்ப்ரிக்,
லான் இவைகளுக்கு.

15% தள்ளுபடி

பாலியெஸ்டர் மற்றும்
பருத்தி விரிப்புகள், டவல்கள்,
ஃபர்னிஷிங், ப்ளாங்க்கெட்,
க்வில்ட் இவைகளுக்கு.

இந்தியாவெங்கும் உள்ள அங்கீகாரம் பெற்ற 500
ரீடெயில் ஸ்டாக்கிஸ்டுகளிடமும் விற்பனை உண்டு.

15%
தள்ளுபடி
எல்லா வகை
பாம்பே டையிங்
துணிகளுக்கும்

BDM-1565

சலுகை. காலவரம்புக்கு உட்பட்டது.

பஸ் மாறாட்டம்

ஈரோடு செல்லும் இரண்டு பஸ்கள் அருகருகே நின்றிருந்தன. ஒரு பஸ்ஸின் மீது சாய்ந்து கொண்டிருந்த கண்டக்டரிடம் டிக்கட் வாங்கிக் கொண்டு அதில் ஏறி அமர்ந்தேன். பஸ் கிளம்பிச் சிறிது தூரம் சென்ற பிறகு கண்டக்டர் பரிசோதித்தபோதுதான் தெரிந்தது. டிக்கட் முன்னமே புறப்பட்டுச் சென்ற பஸ்ஸுக்குரியது என்று. இனி விசாரிக்காமல் டிக்கட் வாங்குவதோ, பஸ்ஸில் ஏறுவதோ கூடாது என்று நிர்மானித்தேன்.

எல். கணேசன், திருநெல்வேலி ஜங் ஷன்



குதிரை விலை!

இலங்கையிலிருந்து முதன் முதலாக ராமேஸ்வரம் வந்தோம். துறைமுகத்திலிருந்து அருகிலிருந்த லாட்ஜுக்குப் போகக் குதிரை வண்டிச் சத்தம் 50 ரூபாய் கேட்டார் வண்டிக்காரர். 30 ரூபாய்க்குப் பேசிச் சம்மதிக்க வைத்த பெருமையுடன் போய்ச் சேர்ந்தோம். அதே வண்டியை நண்பர் மறுநாள் ஸ்டேஷனுக்குப் போக நான்கு ரூபாய்க்குப் பேசி அழைத்து வந்தார். லாட்ஜிலிருந்து ஸ்டேஷனும் துறைமுகமும் ஒரே தூரம்தான்.

தி. கௌரி, சென்னை-78



பாலகன் என்றும் பாராமல்

எட்டு வயது மகனை ரேஷன் வாங்க அனுப்பினாள் என் மனைவி. ஒரு கையில் கார்ட், மறு கையில் பை, பணம் என்று வைத்துக் கொண்டு அவன் வீர நடை போட்டான் வீதியில். எதிரே வந்தவர் கீழே கிடந்த ஒரு பத்து பைசா நாணயத்தை எடுத்து. "என்ன தம்பி, காசைக் கீழே போடுறையே! இப்படிக் கொடு. நான் பொட்டலம் கட்டித் தருகிறேன்" என்று அவனிடமிருந்த காசை வாங்கி பேப்பரில் மடிப்பது போல் மடித்து வெறும் பொட்டலத்தைக் குழந்தையிடம் கொடுத்துவிட்டுப் பணத்துடன் மறைந்தார்.

டி. சுப்பிரமணியன், செகந்தராபாத்-61

கண்ணிமைக்கும் நேரத்தில்

வாசலில் வந்த கறிகாய்க்காரியிடம் காய் வாங்கிவிட்டுச் சில்லறையெடுக்க உள்ளே சென்றேன். வாசலுக்குத் திரும்பியபோது காய்க்காரியைக் காணவில்லை. வாசலில் நின்று கொண்டிருந்த குழந்தையின் இடுப்பிலிருந்த தங்க அரை நாணையும் காணவில்லை. ஒரு கையில் காரட்டும் மறு கையில் தக்காளியுமாய் என்னைப் பார்த்துச் சிரித்தது குழந்தை.

கே. ஜானகி, மதுரை-3

ஓட்டலில் கற்ற பாடம்

ஓட்டலில் டிபன் சாப்பிட்டுவிட்டு ஐம்பது ரூபாய் நோட்டை பில்லோடு தட்டில் வைத்துவிட்டுக் கை கழுவச் சென்றோம் நண்பர்களும் நானும். திரும்பி வந்து பார்த்தால் நோட்டைக் காணோம். பில் மட்டும் இருந்தது! அனுபவம் நல்ல பாடமாக அமைந்துவிட்டது.

பா. இளங்கோ, ஸ்ரீவில்லிப்புத்தூர்

ஏமாறாதே



திருடர்கள் ஜாக்கிரதை!

வீட்டு வாசலில் வந்து விற்கவே சபலப்பட்டுப் பட்டுப் புடவையும், ரவிக்கைத் துண்டும் மலிவாக வாங்கினேன். இரண்டு நாட்கள் கழித்துப் புடவை விற்றவர் போலீசுடன் வந்துவிட்டார். புடவை திருட்டுப் பொருள் என்று சொல்லி வாங்கிப் போய் விட்டார் போலீஸ்காரர். பணம் போனதோடு வெட்கமும் வேதனையும் வேறு பிடுங்கித் தின்றது.

சி. சரோஜா, மதுரை-18

தோழியே இப்படிச் செய்யலாமா?

சமையல் குறிப்பு ஒன்றை போட்டிக்காகத் தயாரித்துவிட்டு என் தோழியிடம் காண்பித்தேன். வெகுவாக ரசித்துவிட்டு என்னை ஊக்குவித்தாள். அச்சில் அந்தக் குறிப்பு வெளியானது. ஒரே பெருமை எனக்கு. இறுதியில் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. என் பெயருக்குப் பதில் என் தோழியின் பெயரில் வெளியாகியிருந்தது அக்குறிப்பு!

ரமா சம்பத், சென்னை-4

தந்தியில் தந்திரம்

விடுதியில் மாணவ நண்பர்கள் நான் சாப்பிடப் போயிருந்தபோது எனக்கு வந்த தந்தியை வாங்கினார்கள். 'unable to come to Tirunelveli' என்று அடித்திருக்கக் கண்டார்கள். முதல் இரண்டு வார்த்தைகளை நீக்கிவிட்டு என்னிடம் தந்தார்கள். நானும் சந்தோஷத்துடன் திருநெல்வேலிபோய் ஏமாந்து திரும்பினேன்!

ஆர். லக்ஷ்மி நரசிம்மன், மதுரை

மலிவென்றால் ஆபத்து

மிகக் குறைவான விலைக்கு சிமெண்ட் தருவதாகக் கூறிக் கட்டட வேலை நடந்து கொண்டிருந்த இடத்துக்கு வந்தான் அவன். மூட்டையைக் கீறி சிமெண்டை எடுத்துக் காண்பித்தான். திருப்தியடைந்து ஐந்து மூட்டை வாங்கினேன். பிரித்துப் பார்த்தால் அத்தனையும் சாம்பல். சாம்பல் மூட்டைக்கு மேல் இன்னொரு சாக்கைப் போட்டுத் தைத்துவிடுகிறார்கள். இரண்டு பைகளுக்கும் இடையே நிஜமான சிமெண்ட், உள்ளேயோ வெறும் சாம்பல்.

டி. சரஸ்வதி, சென்னை-24

நேர்மைத் திறமின்றி வஞ்சனைசெய்வார்

தாயாருக்கு உடல் நிலை கவலைக்கிடம் என்ற தந்தியுடன் சௌதியிலிருந்து பம்பாய் வந்து சென்னை செல்ல டிக்கெட் கேட்டேன். இடமில்லை என்றனர். தந்தியைக் காண்பித்ததும் வேறொருவர் இடத்தைத் தருவதாகவும் நூறு ரூபாய் தரவேண்டும் என்றும் கூசாமல் கூறினர். நானும் தாயின் முகம் காண வேண்டும் என்ற எண்ணமே மேலிட்டதால் சம்மதித்தேன். விமானம் புறப்பட்டபோது பாதிக்கு மேல் இடங்கள் காலியாகவே இருந்தன. இந்த வஞ்சனையும், ஏமாற்றுதலும் மாறி வாய்மைக்குக் காலம் வருமா?

கே. கோபால், சவுதி அரேபியா

திருடனுக்கு விருந்து

பாப்பாவுக்குப் பிறந்த நாள் என்று விசேஷமாகச் சமைத்திருந்தேன். கணவரின் அலுவலகத்துக்கு வழக்கமாகக் காரியர் எடுத்துச் செல்லும் ஆளுக்கு உடம்பு சரியில்லாததால் தன்னை அனுப்பியுள்ளதாகக் கூறிக்கொண்டு ஒருவர் வந்தார். முன்பு அவரைப் பார்த்ததுண்டு என்ற காரணத்தால் காரியரைக் கொடுத்தனுப்பினேன். சற்றைக்கெல்லாம் வழக்கமாக வருபவர் வந்தார். காரியரைக் கேட்டதும்தான் நான் ஏமாந்துவிட்டது தெரிந்தது.

டி. பாரதா தேவி, தூத்துக்குடி-6

இது சில்லறை விஷயமில்லை

ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த உறவினரை ரயிலேற்றப் போகையில் ஸ்டேஷன் வாசலில் 4 ரூபாய்க்கு விலை பேசி பழம் வாங்கினேன். ஐந்து ரூபாய் நோட்டைப் பெற்றுக் கொண்டு ஒரு ரூபாயைத் திருப்பித் தந்தார் பழ வியாபாரி. அவர் கொடுத்த ஒரு ரூபாயைப் பிளாட்பாரம் டிக்கட் வாங்க நீட்டியபோது என்னை ஏற இறங்கப் பார்த்தார் ரயில்வே சிப்பந்தி. சரியாக நடுவில் கிழிந்து போன நோட்டை மடித்த நோட்டு போல் என்னிடம் கொடுத்துத் தந்திரமாக ஏமாற்றியிருந்தார் பழ வியாபாரி.

ஜலஜா சுந்தர்ராமன், பரோடா

பாக்கெட்(டுக்குப்போன)டிரான்ஸிஸ்டர்

மீட்டர் ரீடிங் பார்க்க வந்தவர் குடிக்க தண்ணீர் கேட்டார். உள்ளே சென்று தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன். குடித்து விட்டுப் போனார். பிறகுதான் கவனித்தேன், அந்த அறையில் இருந்த பாக்கெட் டிரான்ஸிஸ்டரைக் காணவில்லை என்று. ஒரு மணி நேரம் கழித்து உண்மையான மீட்டர் ரீடிங் சிப்பந்தி வந்தபோது பாக்கெட் டிரான்ஸிஸ்டர் யார் பாக்கெட்டுக்குப் போயிருக்கும் என்று புரிந்தது.

சுசீலா கண்ணன், சென்னை-91

இரட்டை ஏமாற்றம்

மதுரையில் மலிவு விலையில் ஒரு புடவை வாங்கி வந்தேன். பார்த்தவரெல்லாம் புகழ்ந்தார்கள். நனைத்ததும் தெரிந்தது மலிவு விலை சேலையின் லட்சணம். சாயம் கொட்டி நாசமான புடவையை வாசலில் வந்த எவர்சில்வர் பாத்திரக்காரரிடம் கொடுத்துப் பாத்திரம் வாங்கி ஏமாற விரும்பாமல் ரூபாயாகத் தரும்படி கேட்டேன். ஒன்பது ரூபாய் பெறும் என்று கூறினர். நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு 91 ரூபாய் சில்லறை பெற்றுச் சென்றார். மாலை என் கணவர் வந்ததும் நூறு ரூபாய் நோட்டு போலியானது என்று சண்டையிட்டார். கண் கலங்கி நின்றேன்.

திருமதி கே. பி. தங்கம், திருவனந்தபுரம்

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

சுசீலா கண்ணன்,
நம்பர்-12, பாலையா தோட்டம்,
மடிப்பாக்கம், சென்னை-600 091.

தலைவலி பலவகை உண்டு





சிகிச்சை ஒன்றே ஒன்று!

அனாஸின்

இதில் அதிக அளவில் வலி-நிவாரணி அடங்கியுள்ளது

துரித நிவாரணம் அளிக்க, உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும், வலி-நிவாரணி மருந்து அதிக அளவில் கொண்டது—அனாஸின்.

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ, முதுகு வலி, தசை வலி, பல் வலி ஆகியவற்றிற்கு நல்ல பலனளிக்கிறது.

அனாஸின் மீது மட்டுமே நம்பிக்கை வையுங்கள்.

இப்போது பாதுகாப்பான ஃபாயில் உறையில்.



சக்தி வாய்ந்த நம்பகமான
மேனர்ஸ்
அனாஸின்*

இந்தியாவின் நம்பர் 1 வலி-நிவாரணி மருந்து.

3

அரவிந்தன் நாலே கால் மணிக்குத் தம்மைப் பார்க்க வரும்போது பழைய குடும்ப நண்பராக மாற வேண்டுமா அல்லது கம்பெனியின் சேர்மனாக அவனுடைய முக லாளியாகவே காட்டிக் கொள்ள வேண்டுமா என்று பல தடவைகள் தமக்குள்ளேயே கேட்டுக் கொண்டு கடைசியில் ஒரு முடிவுக்கும் வராமல் தாரக்ராம் அவனுக்காகக் காத்திருந்தார்.

சரியாக நாலே கால் மணிக்கு அரவிந்தன் அவருடைய தற்காலிக அறைக்குள் பிரவேசித்தான்.

''ஹலோ அர்விந்த். ஹௌ ஆர் யூ?''

''நட் ஆஃப்பட்டர் நூன்'' என்று அவசர அவசரமாக வாழ்த்திவிட்டு, ''ஐ'ம் ஆல் ரைட் சார்!'' என்றான் அரவிந்தன்''

''ப்ளீஸ் டேக் யுவர் ஸீட்.''

அரவிந்தன் திகைத்துப் போனான்.

இது வரையில் சேர்மன் அறையில் அவரைப் பார்க்க வரும் எந்த ஊழியருக்கும் அவர் உட்கார இடம் அளித்ததில்லை என்று அரவிந்தன் கேள்விப்பட்டிருக்கிறான். பம்பாயில் ஜெனரல் மானேஜர் கூட இதுபற்றி பலரிடம் கூறித் தாபப்பட்டிருப்பதும் அவனுக்குத் தெரியும். இப்போது அவனை அவர் உட்காரச் சொல்லுகிறார். இதற்கு என்ன அர்த்தம்? அரவிந்தனை ஒரு பணி புரியும் அதிகாரியாகக் கருதவில்லையா?

உட்கார்ந்தான்.

தாரக்ராம் தமிழுக்கு இறங்கினார்..

''சௌக்கியமா இருக்கியா?''

நிச்சயமாக இவர் சேர்மன் இல்லை. தாரக்ராம்தான். அவனுடைய தந்தை ரங்கராஜனுடைய நண்பர்தான். அம்மாவின் நெருங்கிய சிநேகிதியின் கணவர்தான்.

''ஒரு குறைச்சலும் இல்லே சார்.''

''எங்கே இருக்கே?'' தாரக்ராமுக்கு அவன் இருக்கும் தெருவின் பெயரும், வீட்டு நெம்பரும் இனி மானேஜர் ஆராமுதன்மூலம் தெரியும். அவருக்குத் தெரியும் என்று அவனுக்குத் தெரிந்தால் அப்புறம் அவருடையபெருமை குறைந்து விடுமே.

''பெஸன்ட் நகர்லே.''

''ஃப்ளாட்டா?''

''இல்லே சார்... தனி வீடு.''

''அஷ்டலட்சுமி கோவில் பெஸன்ட் நகர்லே தானே இருக்கு?''

''ஆமாம் சார்.''

''ஒரு நா மெட்ராஸைச் சுத்திப் பாக்கணும்... ரொம்ப வளர்ந்துட்டுது.''



ஆகாச கங்கை

அரவிந்தன் மௌனமாக அவருடைய அடுத்த வார்த்தைக்காகக் காத்திருந்தான்.

''இப்ப ரகு எங்கே இருக்கான்? மெரைன் என்ஜினியர் தானே?''

''ஆமாம் சார்... இன்னும் அர்ஜென்டைனாவிலேதான் இருக்கான் சார்.. ஆறு மாச டியூட்டி. ஆறு மாச ஓய்வு....''

''ஏன் போயும் போயும் ஒரு அர்ஜென்டைனா பெண்ணை... சரி சரி... இதெல்லாம் நான் கேக்கப்படாது... 'ரங்கன் இருந்திருந்தா அவனே கேட்டிருக்கமாட்டான்.''

அரவிந்தன் மீண்டும் மௌனமானான்.

''நான் நாளை மார்னிங் ஃப்ளைட்லே டெல்லி போறேன்.''

''யெஸ் சார்''

''புதுசா ஒரு கொலாபரேஷன் வரும் போல இருக்கு... இதுவும் வெஸ்ட் ஜெர்மன்தான்.''

''யெஸ் சார்''

''வெஸ்ட் ஜெர்மன் கம்பெனி என்ஜினியர்களும் டைரக்டர்களும் வந்திருக்காங்க... நாளைக்குக் கையெழுத்தாயிடும்னு எதிர்பார்க்கிறேன்.''

''வெரி குட் நியூஸ் சார்.''



''நீ ஜெர்மனிக்குப் போக வேண்டி வரலாம்.''

''யெஸ் சார்''.

''அப்புறம் இன்னொரு நியூஸ்.''

''சொல்லுங்க ... சார்.''

''பூனா, நாசிக் யூனிட்டுகளை இன்னும் நன்னு கவனிக்க டெல்லியிலிருந்து குல்வந்தையும் மெட்ராஸிலிருந்து உன்னையும் பாம்பேக்குக் கூப்பிடப் போறேன்.''

அரவிந்தனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவனுக்குச் சென்னையை விட்டு நகர எண்ணமே இல்லே. வசுமதி எங்கே இருக்கிறாளோ அதுதான் அவனுக்கு சென்னை, பம்பாய், டெல்லி எல்லாம்.

''இன்னும பத்து நாள்லே ஆர்டர் வரும் வரும்.''

''ஹோஸூர் யூனிட்...''

''உன் தகுதிக்கு அது ஒரு சின்ன யூனிட் இல்லே?''

'என்னால் பாம்பே வர முடியாது' என்று திட்டவட்டமாகக் கூற அவன் நா துடித்தது. ஆனால் முடியவில்லை. அவனால் இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு இந்தக் கம்பெனியை விட்டு ஓட முடியாது. அமெரிக்கா பயிற்சி முடிந்து திரும்பி வந்த கவட்டிலேயே அவன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு விட்டான். ஏழு ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கம்பெனியில் பணியாற்ற வேண்டும். ராஜினாமா செய்வதாக இருந்தால், ஏழு வருடங்கள் முடிய எஞ்சியிருக்கும் காலத்துக்கான சம்பளத்தையும், அமெரிக்கப் பயிற்சிக்கான செலவை வட்டியுடனும் அவன் ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அவனைப் போல மற்ற சில என்ஜினியர்களும் ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். எவ்வளவு பணம் கட்ட வேண்டியிருக்கும் என்ற கணக்குக் கூட அரவிந்தனுக்கு இப்போது விளங்கவில்லை. லட்சக்கணக்கில் இருக்கும் என்ற எண்ணமே மலைபோல எழுந்தது.

''உனக்கு இஷ்டம் இல்லே, அல்லவா?'' என்றார் தாரக்ராம். சிரித்தார். சிரிப்பு பொய்மையாகப்பட்டது.

''ஐ ஹாவ்டு ஒபே ஆர்டர்ஸ்.''

''என் கம்பெனியில்...'' 'என்' அளவுக்கு அதிகமாக அழுத்தமாய் ஒலித்தது. உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது அரவிந்தன். நான் தேடிப் பிடிச்ச என்ஜினியர்களிலே நீ ஒரு வைரம். அதுவும் ப்ளூ ஜாகர். நான்னே என் முதுகைத் தட்டிக்கிறேன்.''

''தாங்க் யூ சார்.''

''பாம்பேக்கு நீ சும்மா வரலே. பிரமோஷனோட வருகிறாய்.''

''கேட்க ரொம்ப சந்தோஷமாகத்தான் சார் இருக்கு. ஆனா... ஆனா...''

''சொல்லு... மனசில இருக்கிறதைத் தயங்காமச் சொல்லு.''

''இன்னும் ஒரு வருஷமாவது மெட்ராஸ்லே இருந்தால் சௌகரியமா இருக்கும். நீங்க அனுமதி அளித்தால் அவசியம் நேரும் போதெல்லாம் பாம்பே வந்து போகிறேன்.''

''யோசிக்க வேண்டிய விஷயம். யோசிக்கிறேன்... வெஸ்ட் ஜெர்மன் கொலாபரேஷன் கையெழுத்தானால் எனக்கு நிறைய வேலை பாம்பேயில் இருக்குமேன்னு பார்த்

தேன்... அது சரி என்ன ப்ராப்ளம்?''
''இப்ப சொல்றத்துக்கு இல்லே சார்... ஆனு பெர்ஸனல் ப்ராப்ளம்.''
''ஓகே, இது ஆபீஸாப் போயிட்டது. நீ என்ஜினியர், நான் சேர்மன்... இன்னிக்கு ஈவினிங் ஸெவன் ஓ க்ளாக் ஒட்டல் டாஜில் என்னை மீட் பண்ணு... த்ரி ஒ ஸெவன்.''
''யெஸ் சார்.''
''நிறையப் பேசணும்...''
''யெஸ் சார்.'' அரவிந்தன் எழுந்தான்.
''உங்கிட்டே பழைய ஆல்பம் இருக்கா அந்து!''
ஒரு கணம் அரவிந்தன் ஆடிப் போனுன். இது வரை தாரக்ராமாகவும் சேர்மனுகவும் மாறி மாறிப் பேசிய அவர் இப்போது முழுக்க முழுக்கப் பழைய குடும்ப நண்பராக, அவனுடைய ஆதர்ஸ புருஷராக மாறி விட்டார்.
''இருக்கு சார்.''
''வர்றப்ப அதைக் கொண்டு வா!''
''சரி சார்...''
''ஒட்டல் டாஜ்லே நீ என்னை சார்னு கூப்பிடாதே... நீ ஏழெட்டு வயசுப் பிள்ளையா இருக்கறப்ப என்னையும் கோமளியையும் எப்படிக் கூப்பிடுவே? நினைவு இருக்கா?''
சட்டென்று நினைவு வரவில்லே.
''கோமளியைக் கோமாளி மாமி என்று கூப்பிடுவே... என்னை தார் மாமான்னு கூப்பிடுவே....'' இப்போது தாரக்ராம் வாய் விட்டுச் சிரித்தார்.
அரவிந்தனுலும் சிரிப்பை அடக்க முடிய வில்லே.
'' அறியாப் பருவத்திலே கேலி செய்ஞ்சதுக்கு இப்ப மன்னிப்பு வேணும்னு கேட்டுடறேன், சார்!'' என்ருன்.
''பழசை எல்லாம் நெனேச்சுப் பார்க்கறப்ப, ஒரு பக்கம் மனசு விகசிக்கிறது. இன்னெரு பக்கம் கண் கனக்கிறது.... நாம நடந்து வந்த பாதையிலே பூ பூத்துக் குலுங்கறதா இல்லே மண்ணு நெரம்பி மூடியிருக்கான்னே புரியமாட்டேங்கறது... சரி... சரி, இப்ப நான் உன்னே போரடிக்கலே... ராத்திரி ஏழு மணிக்கு வைச்சுக்கறேன்.''
அரவிந்தன் நகர்ந்தான்.
கதவைச் சமீபிக்கையில், ''அந்து!'' என்று அவர் அழைப்பது கேட்டது.
''என்ன சார்?''
''டிபன் ஏதும் சாப்பிட்டுவிடாதே... வீ ஆர் ஹாவிங் அவர் டின்னர் டுகெதர்.''

● ● ●

அறையைவிட்டு வெளியே வந்த பிறகு தான், மண்டையைத் தாரக்ராம் சம்மட்டியால் அடித்திருக்கிருர் என்பதை அரவிந்தன் உணர்ந்தான். அறையினுள் இருந்தபோது, ஒட்டல் டாஜுக்கு ஏழு மணிக்கு வரும்படி சொன்னபோது அவனுக்கு வசுமதியின் நினைவே வரவில்லே. இப்போது அவளும் அவளுடைய பிறந்த நாள் விருந்தும், அவன் அவளுக்காக வாங்கியிருக்கும் மோதிரமும் அவனே நாலாபக்கங்களிலிருந்தும் தாக்கின. உடனடியாக அவரை மீண்டும் அவருடைய அறையில் சந்தித்துத் தன்னுடைய நிலைமையை விளக்கிவிடலாமா என்று யோசித்தான். ஆனுல் யோசனையை அவனுல் செயலாக்க முடியவில்லே. சேர்மன் தாரக்ராம் அவனே அனுப்பிய மறுவினுடியே எழுந்து, ஆராமுதன் பின்தொடர மின்தூக்கியினுள் பிரவேசித்துவிட்டார்.
இப்போது என்ன செய்ய?
கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ஐந்தே கால்.
வசுமதி வீட்டில் இருக்கக்கூடும். பெசன்ட் நகரிலிருந்து இந்திரா நகர் அதிக தூரமில்லே. காரில் ஐந்து நிமிடங்களில் அடைந்துவிடலாம்.
ஐந்தரைக்கு முன்னுல் என்றுமே ஆபீஸை விட்டு வெளியேறும் பழக்கம் இல்லாத அரவிந்தன் நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று மண்டையை உடைத்துக் கொண்டான். ஆறரை மணி அளவில் தாரக்ராமுக்கு டெலிபோன் செய்து வர இயலாமையை வருத்தத்துடன் தெரிவித்தால் என்ன? பழைய ஆல்பம் கேட்டிருக்கிருரே! மலரும் நினைவுகளை ரசிக்க அல்லவா அவனே அழைத்திருக்கிருர்? பழைய தார் மாமா என்று சுவாதீனமாகப் பேசி விடுதலே பெறுவதா அல்லது சேர்மன் தாரக்ராம் என்ற பதவி அள்ளிக் கொட்டும் பயத்துக்கு அடிபணிவதா?
திடீரென்று ஆராமுதன் அவனே நோக்கி விரைந்து வருவது தெரிந்தது.
''அரவிந்த்... அர்விந்த்... என்ன நடந்தது... என்ன நடந்தது!''
''நீங்க தெரிஞ்சுக்கும்படியா எதுவும் நடக்கலே...''
''சேர்மனைக் கார்லே ஏத்தி விடப் போனேன் இல்லியா?''
''அதுக்கு என்ன?''

திரை உலக வரலாற்றிலேயே இல்லாத சாதனையைப் புரிந்திருக்கிறது. தீபாவளியன்று வெளியான ''ஓ.... மானே... மானே...'' என்ற திரைப் படம். இந்தப் படம் தஞ்சை பிரபல திரையரங்கம் ஒன்றில் 4 நாட்களே (நான்கு) ஒடிச் சாதனை புரிந்துள்ளது.
—பாரதப் பித்தன்



'' ரொம்ப ஜாலியா இருந்தார். அவர் இப்படிச் சிரிச்சு நான் பார்த்ததில்லே...''

'' கையிலே காமரா இருக்கலையா?''

''இல்லியே... கையை வீசிண்டுதான் வந்தார்.''

'' உங்க கையிலே ?''

'' என்னப்பா, அர்விந்த், நீ என்ன சொல்றே ?''

''ஒண்ணுமில்லே ஆராமுதன் சார்... என்னைக் கொஞ்சம் நிம்மதியா இருக்க விடுங்க!''

''இதுக்கு என்ன அர்த்தம்? உனக்கு இப்ப நிம்மதி இல்லேன்னு அர்த்தம்...ஏன்? சேர்மன் ஏதோ சொல்லியிருக்க வேண்டும். அது உன்னை வாட்றது... என்ன சொன்னார் அரவிந்த்?''

''ப்ளீஸ்...''

'' நான் உன் ஃப்ரண்ட்... நீ என் தம்பி மாதிரி... நான் பிராஞ்ச் மானேஜர்....எங்கிட்டே சொல்லு... உப்பிலியப்பன் கோயிலுக்கு ஒரு ரூபா முடிஞ்சு வைக்கறேன்.... உனக்கு ஒரு கஷ்டமும் வராது...''

''நீங்க ஸ்பூன்லே சாப்பிடுவேளா?''

''ஐஸ் க்ரீம்... ப்ரூட் சாலட்... அதுவும் ஸ்பூனை நானே ஒரு தடவை ஸ்பெஷலா அலம்பிட்டு...''

'' வெங்காயம்?''

''வீட்லே கெடையாது!''

''பூண்டு ?''

'' வாசனையே பிடிக்காது... ஏன் கேட்கறே ?''

''கரம் மசாலா,.. பீஸ் மசாலா. சீஸ் இதெல்லாம்,..''

''இட்டுக்க வரப்படாது...''

'' அப்ப நீங்க டாஜ் ஒட்டல் டின்னருக்கு லாயக்கு இல்லே. அதனாலே என்னை வரச் சொல்லியிருக்கார்.''

''யார்? யார்? சேர்மனா ? உன்னையா ? டின்னருக்குக் கூட்பிட்டிருக்கிறாரா? ஏன் மொதல்லேயே நீ சொல்லலே? அவரும் சொல்லலே?''

ஆராமுதன் மூச்சு விடாமல் பேசினார்.

அரவிந்தன் எழுந்தான்.

லிஃப்ட் கீழே நகர்ந்து கொண்டிருந்தது. அது மீண்டும் மூன்றாவது மாடிக்கு வரும் வரை காத்திருக்கப் பொறுமை இல்லை.மனம் வசுமதியை உடனடியாகச் சந்திக்கத் துடித்தது. அவளைச் சந்திக்க முடியாமற் போனால் தன்னையும் மீறி ஏற்பட்டுவிட்ட ஒரு மாற்றத்தைத் தெரிவித்துவிட வேண்டும். குடும்பமே அவனுடைய வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய ஏமாற்றம் கரை கடந்து போய் விடும். வசுமதி கோபப்படாமல் இருக்கலாம். ஆனால் தாபம்? இன்றைய ஏமாற்றத்தை அவள் என்றென்றும் மறக்கமாட்டாள்.

இந்திரா நகரில் அவனுடைய இரண்டாவது மாடி ஃப்ளாட் உறுதியாகவே பூட்டப்பட்டிருந்தது. கடிகாரத்தைப் பார்த்தான். ஆறு. பத்து நிமிடங்கள் காத்திருக்கலாம் என்று நின்றான். எல்லாருமா ஒரே சமயத்தில் வீட்டை விட்டுப் போவார்கள்?

ஆறு பத்து.

கொசுறாக ஐந்து நிமிடங்கள் அளித்தான்.

பூட்டைத் திறக்க யாரும் வரவில்லை.

அவன் பெசன்ட் நகர் சென்று, குளித்து, உடை மாற்றி, டாஜ் ஒட்டலை அடைய வேண்டும். சாலைகளின் சாயங்கால வேளை நெரிசலைச் சமாளித்து, டாஜ் ஒட்டலை அடைந்து, காரை ஓர் இடம் தேடிப் பிடித்து வைத்து, த்ரீ ஓ செவன் அறையை அடைவதற்குக் குறைந்தது இருபத்தைந்து நிமிடமாவது ஆகிவிடும்.

ஏழு மணிக்கு அவன் அங்கே இருக்க வேண்டுமென்றால் அவன் உடனடியாகக் கிளம்பிவிட வேண்டும்.

பெசன்ட் நகர் ஆறு இருபது.

மீண்டும் புறப்படும்போது ஆறு முப்பத்தைந்து.

அவர் அறையை அடையும்போது கடிகார முட்கள் ஏழில் நின்று அவனைப் பார்த்து ஆரவாரம் செய்தன.

• • •

அன்றிரவு அவன் வீடு திரும்பும் போது இரவு பன்னிரண்டரை.

தாரக்ராம் அவனை மண்டையில் அடிக்கிறாரா ?

அல்லது அவனைத் தன் மார்போடு மனமார அணைத்துக் கொள்ளுகிறாரா ?

எப்போதோ பார்த்த அவர் பெண் மாயாவை ஏன் இப்போது அவர் அவன் முன் நிறுத்த வேண்டும்? அரவிந்தன் சோர்ந்து போனான். (தொடரும்)

பட்டோடி என்ன செய்கிறார் ?

முன்னாள் கிரிக்கெட் வீரர் மன்சூர் அலிகான் பட்டோடி இப்போது கிரிக்கெட் நேர்முக வர்ணனையாளராகவும், விளையாட்டுப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியராகவும் இருப்பதுடன் விளம்பரத் துறையிலும் முழு மூச்சாக இறங்கி விட்டார். துணி விளம்பரத்திற்கு போஸ் கொடுக்கிறார் !

நாமக்கல் ரமேஷ்குமார்



எங்க வீட்டுக்காரர் 3 D...

கோவை அனுராதா



காட்சி—1

[முன் ஹாலில் அன்னபூரணி அம்மாள் வேலைக்காரி காமாட்சியுடன் சத்தம் போட்டுக் கொண்டிருக்க, அதை பயத்துடன் சமையல் கட்டில் இருந்து கவனிக்கிறாள் மருமகள் பிரதீபா.]

அன்னபூரணி: இந்த அன்னபூரணி சொன்னால் அப்பீலே கிடையாது. போ... நாளையில் இருந்து நீ வேலைக்கு வரவேண்டாம்.

காமாட்சி: என்னம்மா இது... வயித்துக்குக் கொஞ்சம் சாப்பிட்டா இதுக்குப் போயி பெரிசா சத்தம் போடறீயே!

அன்னபூரணி: வயித்துக்கு இல்லேன்னு கேட்டு வாங்கி சாப்பிடணும். இப்படி பொய் சொல்லக்கூடாது. போ... போ... இனிமே வேலைக்கே வராதே. யாரை வேணும்னாலும் மன்னிப்பேன். பொய் சொல்றவளை மட்டும் மன்னிக்கவே மாட்டேன்.

[தலையைக் குனிந்து கொண்டு காமாட்சி வெளியே போக, அங்கு மருமகள் பிரதீபா பயத்துடன் வருகிறாள்.]

பிரதீபா: என்னம்மா? காமாட்சி என்ன பண்ணினா?


அன்னபூரணி: ரெண்டு லிட்டர் ஊற வச்ச அரிசி குடுத்து அனுப்பினேன். மிஷின்லே போயி ஒன்றரை லிட்டர் அரைச்சிட்டு, பாக்கியை வீட்டுக்கு எடுத்துண்டு போயிருக்காள். கேட்டா அரிசி மட்டம்... உபரி காணலேன்னு பொய் சொல்றா.

பிரதீபா: பாவம்மா... நல்லா வேலை செய்யறவோ... ஏதோ தெரியாம தப்பு பண்ணிட்டா போல இருக்கு.

அன்னபூரணி: தங்க ஊசின்னு கண்ணைக் குத்திக்க முடியுமா? அவளை நிறுத்திட்டா உனக்கு வேலை அதிகமாயிடும்னு சப்போர்ட்டுக்கு வறயா?

பிரதீபா: ஐயையோ... அதுக்கு இல்லேம்மா... பாவம் புள்ளைக் குட்டிக்காரியாச்சேன்னு சொன்னேன்.

அன்னபூரணி: இங்க பாருமா, பிரதீபா... நான் யாருக்கு வேணும்னாலும் இரக்கப்படுவேன். ஆனா பொய் சொன்னா மட்டும் பிடிக்காது. இவளாவது வேலைக்காரி. உங்க



மாமஞர் எங்கிட்ட ஒரு தரம் பொய் சொல் விட்டார்னு அவர்கூட நான் பதினஞ்சு வருஷம் பேசலே தெரியுமோ ?

பிரதீபா (மனத்திற்குள்) : என் இந்த வீட்டுலே ஒரே பையன்னு இப்பத்தானே புரியறது.

அன்னபூரணி : என்னடீ... ஒரேயடியா யோசனையிலே நின்னுட்டே... வேற வேலைக்காரி பிடிச்சிக்கலாம். கவலைப்படாதே. போயி ஆக வேண்டிய காரியத்தைக் கவனி. உங்கப்பா ஊருக்குப் போருரே... ஏதாவது டிபன் பண்ணிக் குடு. இல்லாட்டா அந்த ரயில்வே ஸ்டேஷன் வரட்டு தோசையைத் தான் கடிச்சி இழுக்கணும்.

[அப்போது பையன் அம்பி வருகிறுன்.]

அம்பி: என்னம்மா பிராப்ளம் ?

அன்னபூரணி : ஒரு அப்பளாமும் இல்லேடா. வேலைக்காரி இல்லாமல்னு பண்ணிஞ. நிறுத்திட்டேன். உன் ஆத்துக்காரி மூஞ்சியைத் தூக்கறு.

அம்பி : நீ செஞ்சதுதாம்மா கரெக்ட்... நானே பொய் சொன்னலும் நீ வீட்டை விட்டுத் தொரத்திடுவேன்னு பிரதீபாவுக்குத் தெரியாது போல இருக்கு. போடீ... வேலையைப் பாரு.... மாட்டுப் பொண்ணுக்கு அதிகமா வேலை கொடுக்கக் கூடாதுன்னு எங்கம்மாவுக்குத் தெரியாது ? அம்மாவே இன்னும் ஒரே வாரத்துக்குள்ள புதுசா வேலைக்காரி பிடிச்சிட மாட்டாங்க...? இல்லேம்மா....?

அன்னபூரணி : அப்படிச் சொல்லுடா என் ராஜா. என் மனசைப் புரிஞ்சுண்டவன் நீதான்.

[பிரதீபா கண்களைத் துடைத்துக் கொண்டே உள்ளே செல்கிறுள்.]

காட்சி—2

[உள்ளே பிரதீபாவின் அப்பா ராஜாமணி ஊருக்குப் போவதற்காகத் தயாராகிக் கொண்டிருக்கிறுர்.]

ராஜாமணி: என்னம்மா... இது. கண்ணு கலக்கமா இருக்கு... மாமியார் வேலைக்காரியை நிறுத்திட்டான்னு அழறயா ?

பிரதீபா : சீ... சீ... நான் பத்து பேர் உள்ள குடும்பத்துல இருந்து வந்தவேப்பா ! இந்த வேலைக்கெல்லாம் அஞ்சமாட்டேன். ஒரு பொய் சொன்னகூட என் மாமியாருக்குப் பிடிக்கலே..... இவ்வளவு கண்டிப்பா இருக்கற அவங்ககிட்ட ஒரு பெரிய பொய்யைச் சொல்லிட்டீங்களேப்பா... அதை நெனைச்சுத்தான் பயப்படறேன்.

ராஜாமணி : நான் என்னம்மா வச்சிக்கிட்டா வஞ்சனை செஞ்சேன். ஆண்டு நிறைவுக்கு வரும்போது குழந்தைக்கு ஒரு பவுன் செயின் பண்ணித்தான் ஆகணும்னு உன் மாமியார் கண்டிஷன் போட்டா... என்னேட அருமை மாப்பிள்ளையும் மண்டையை ஆட்டிஞரு.

பிரதீபா : அதுக்காகக் கவரிங் செயினைப் போட்டுட்டுத் தங்கம்னு பொய் சொல்லி யிருக்கீங்களேப்பா.

ராஜாமணி : கையிலே காசு இல்லே.... இதைவிட வேற வழி தோணலேம்மா. ஒரு மாசம் பொறுத்துக்கோ. பணத்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். தங்கத்துலேயே செயினை வாங்கிண்டு வந்துடறேன். காதும் காதும் வச்சாப்பல இதை மாத்திடலாம்.

பிரதீபா: அது முடியாதுன்னுதானே நான் பயப்படறேன். ஏன்னு... நேத்தைக்கே எங்க மாமியார் செயினைப் பார்த்துட்டு, இந்த டிசைன் நல்லா இல்லே.... என் பேரன் தானே... நானும் ஒரு பவுன் தரேன். கூடப் போட்டு, அழிச்சி நல்ல டிசைனு பண்ணிப் போட்டுடலாம்னு சொன்னு. தட்டான் கிட்ட போனு நம்ம மாத்து எவ்வளவுன்னு தெரிஞ்சுடுமே !

[அழுகிறுள்]

ராஜாமணி:அழாதேம்மா...இங்கபாரு... எதுக்கும் உங்க வீட்டுக்காரர்கிட்ட உண்மையைச் சொன்னு அவர் சமாளிக்கலாம் இல்லையா ?

பிரதீபா : ஐயோ... அவர் ஒரு அம்மா கோண்டு. பொண்டாட்டிக்குப் பரிஞ்சு ஒரு வார்த்தை பேச மாட்டாரு.

ராஜாமணி : இங்க பாரும்மா... நீ எத்தனை லலிதா சகஸ்ரநாமம் சொல்லி இந்த ஆம்படையானுக்கு வாக்கப்பட்டிருக்கே. அந்த லலிதா பரமேஸ்வரி ஒரு நாளும் கைவிடமாட்டா பாரேன்.

காட்சி—3

[பிரதீபா குழந்தைக்குச் சட்டை போட்டுக் கொண்டிருக்க, அன்னபூரணி உள்ளேயிருந்து தேங்காய் பழத் தட்டுடன் வருகிறுள்.]

அன்னபூரணி: பிரதீபா... பிரதீபா... கோவிலுக்குப் போகலாமா?... இன்னிக்குப் புதன் கிழமை... அப்படியே பக்கத்துலதான் நம்ம ஆசாரியார் கடை. அங்க போயி குழந்தையோட செயினையும் அழிச்சுப் பண்ணக் குடுத்துடலாம்.

பிரதீபா : அம்மா... வந்து... வந்து..... குழந்தை அந்த செயினைக் கழட்டினலே அழறுன்ம்மா.... என்ன பண்றது ?

அன்னபூரணி : கடையிலே போயி ஏதாவது நல்ல வார்த்தை சொல்லி கழட்டிக்கலாம் வா.

பிரதீபா (மனத்திற்குள்) : தாயே. லலிதா பரமேஸ்வரி... என்னைக் காப்பாத்தும்மா....

[உள்ளே போகிறாள். அங்கே அம்பி உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருக்கிறான்.]

என்னங்க... என்னங்க... அம்மா என்னைக் கோவிலுக்குக் கூப்பிடறாங்க.

அம்பி : போயிட்டு வாயேன்.

பிரதீபா : அது இல்லீங்க... எனக்குத் தலைவலி... நான் சொன்னா ஏதாவது நெனைச்சிப்பாங்க... நீங்க ஒரு வார்த்தை கோவிலுக்கு அவ வர முடியாதுன்னு சொல்லிடுங்களேன்... ப்ளீஸ்...

அம்பி : இங்க பாரு பிரதீபா... எங்கம்மாவோட குணம் தெரியுமே ? அம்மா ஆசைப்படிதான் போயிட்டு வந்துடேன்.... காத்தாடப் போனா தலைவலி எல்லாம் பறந்துடும்.

மேலட்டையில்..,

இளைஞர் ஆண்டினை

இளநகையுடன்

வரவேற்கச் சொல்பவர்

மெரியா

வண்ணப்படம் : ஏ.வி. பாஸ்கர்

பிரதீபா: அம்மா... அம்மா... எதுக்கெடுத்தாலும் உங்களுக்கு அம்மாதான். நீங்களெல்லாம் ஏன்தான் கல்யாணம் பண்ணிண்டேளோ...

அன்னபூரணி : என்னடீ... பிரதீபா... என்ன பண்றே ?... கடையைச் சாத்திடப் போறான். மளமளன்னு வாடி... நின்னா நின்ன எடம்... போனா போன எடம்... என்ன பொண்ணோ போ...

பிரதீபா : இதோ வந்துட்டேம்மா.... குழந்தை ஜட்டியை ஈரம் பண்ணிண்டுட்டான். அதுதான் வேற டிரஸ் மாத்திண்டிருந்தேன். போகலாம் வாங்கோ...

[கண்ணைத் துடைத்துக் கொண்டு புறப்படுகிறாள்.]

காட்சி—4

[மாமியாரும், மருமகளும் கோயிலுக்குப் போய்விட்டு, ரோட்டில் வந்து கொண்டிருக்கிறார்கள். பிரதீபாவின் கையில் குழந்தை இருக்கிறது.]

பிரதீபா : என்னம்மா... ரோடெல்லாம் இருட்டா இருக்கே...

அன்னபூரணி : பாழாய்ப் போன இந்த ரோட்டுல மாசத்துக்கு இருபது நாளைக்கு லைட்டே இருக்காது. தெரியாம ஏதாவது மூடியில்லாத சாக்கடையிலே காலை வச்சுட்டா நம்மளை மூடி எடுத்துண்டு போயிடுவா...

பிரதீபா : எனக்கே பயம்மாத்தாம்மா இருக்கு...பேசாம திரும்பிப் போயிடலாமா? இன்னொரு நாள் பார்த்துக்கலாமே ?

அன்னபூரணி : இந்த ஏரியாவுலே என்னடி பயம் ? நாற்பது வருஷமா நான் இங்க குப்பை கொட்டியிருக்கேன்....

[அப்போது வேகமாக வந்த சைக்கிள் ஒன்று பிரதீபாவின் மேல் மோதி விட்டுச் செல்கிறது.]

பிரதீபா : ஆ... ஐயோ... அம்மா...

[அலறுகிறாள்]

அன்னபூரணி : என்னடி... என்ன ஆச்சு?

பிரதீபா : அங்க பாருங்கம்மா....... கொழந்தையோட கழுத்துல இருந்து செயினை எவனோ அறுத்துண்டு சைக்கிள்ள வேகமா போறான்...

அன்னபூரணி : ஐயையோ.... திருடன்... பிடியுங்கோ....

[வெல வெலத்து மூர்ச்சையாகிக் கீழே விழுகிறாள்.]

பிரதீபா : தாயே... நீதான் கல்லு. ஆனா உன் மனசு கல்லு இல்லேன்னு காண்பிச்சுக் கொடுத்துட்டயே... பராசக்தி.

[கண்ணில் நீர் வழியக் கோபுரத்தை நோக்கிக் கும்பிடுகிறாள்.]

காட்சி—5

[அன்னபூரணி அம்மாள் சோபாவில் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருக்க, அம்பி வெளியே இருந்து வருகிறான்.]

அன்னபூரணி : வாடா... அம்பி.... நீ போனாலே எல்லா காரியமும் பொறுப்பா முடியும். போலீசுக்குக் கம்ப்ளெயிண்ட் குடுத்துட்டயா ?

அம்பி : கொடுத்தாச்சம்மா... எனக்குத் தெரிஞ்ச இன்ஸ்பெக்டர்தான். எப்படியும் கண்டு பிடிச்சுக் குடுக்கறேன்னு சொல்லியிருக்காரு. கவலைப்படாதே.

பிரதீபா : அம்மா... சங்கிலி போனா பண்ணிக்கலாம்... நீங்க மனசு வருத்தப்பட்டு உடம்பைக் கெடுத்துக்காதிங்கோ.

அன்னபூரணி : சரி, போங்கோ... ராத்திரி மணிபதினொண்ணு ஆகிறது.முழிச்சிண்டு இருக்கறதினாலே செயின் கிடைச்சுடப் போறதா என்ன ?

காட்சி—6

[பிரதீபாவின் படுக்கையறை]

பிரதீபா : என்னங்க... என்னங்க... அந்தத் திருடன் கண்டிப்பா கிடைச்சிருவானா?

அம்பி : அவன் தலையெழுத்து சரியில்லேன்னா கண்டிப்பா மாட்டிக்குவான்.

பிரதீபா : இல்லீங்க... அந்தத் திருடன் கிடைக்கக் கூடாதுங்க...

அம்பி : ஏன் பிரதீபா ?... செயின் வேண்டாமா ?

பிரதீபா : திருடனைக் கண்டு பிடிச்சா தண்டனை கொடுப்பாங்க... நீங்கதானே கம்ப்ளெய்ண்ட் கொடுத்தீங்க... அவன் ஜெயில்லே இருந்து வந்தவுடனே உங்க மேல் கரு வச்சிண்டு ஏதாவது செஞ்சுட்டான்னு...

அம்பி (பலமாகச் சிரித்து) : பிரதீபா.... வாழ்க்கையிலே ஒரு பொய் சொன்னு அதுக்கு விமோசனம் ஒரு உண்மையாலதான் கிடைக்கும். அதை விட்டுட்டு அடுக்கடுக்கா பொய்யாலேயே மறைச்சிண்டு போனு முடிவே கிடையாது... தெரிஞ்சுதா ?

பிரதீபா : நீங்க என்ன சொல்றீங்க ?

அம்பி : ஒண்ணும் இல்லே...: நீ தூங்கு. உன் மனசுப்படியே அந்தத் திருடன் கிடைக்காமயே போயிடுவான்.

பிரதீபா : எப்படிங்க, அவ்வளவு நிச்சயமா சொல்றீங்க ?

அம்பி : போலீஸ் ஊரெல்லாம் தேடலாம். ஆனு உண்மையான திருடன் உன்னோட பெட்ரும்ல இல்ல இருக்கான். எஸ்...இந்தா. உன் குழந்தையோட செயின்...

[சட்டைப் பையில் இருந்து செயினை எடுத்துக் கொடுக்கிருன்.]

பிரதீபா : என்னங்க இது... அப்பமன்னு.

அம்பி : நான்தான் பிரதீபா. அந்த இருட்டான ரோட்ல ஒரு சைக்கிள்ள வந்து, நம்ம குழந்தையோட செயினை அறுத்தவன்... அம்மாவுக்கு அடையாளம்தெரியாமஇருக்கத் தொப்பியோட வந்தேன்.

பிரதீபா : நீங்க... நீங்க... எதுக்கு....

அம்பி : பிரதீபா... வறுமையிலும் உண்மை பேசறது கஷ்டம்தான். பாவம் அந்த மனு வலிமை உங்கப்பாவுக்கு இல்லே. அன்னைக்கு ஊருக்குப் போறபோது நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருந்ததை நான் தற்செயலா கேட்டேன். இந்த செயின் பித்தளைங்கறது எனக்கு அப்பவே தெரியும்.

பிரதீபா : என்னை மன்னிச்சுடுங்க...

[கணவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுகிருள்.]

அம்பி : பிரதீபா... ஒரு மனைவி தன்னோட பேச்சை மட்டும்தான்கணவன் கேக்கணும்னு நினைக்கிறதும், ஒரு தாய் தன்னோட பேச்சை மட்டும்தான் மகன் கேக்கணும்னு நினைக்கிறதும் இயற்கை. நடுவுல எங்களோட மரியாதையையும் காப்பாத்திக்க வேண்டியிருக்கு. அதாவது முப்பரிமாணமா செயல்பட வேண்டியிருக்கு. எங்கம்மா ஒரு வீட்டுல சமையல்காரியா இருந்து கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைச்சிருக்கா.... நீயோ என்னையே நம்பி வந்திருக்கே... உங்க ரெண்டு பேரையுமே நான் திருப்திபடுத்தணும்னு சில சில்லறை விஷயங்களைக் கண்டும் காணும போக வேண்டியதுதான். ஆனு எந்த ஒரு கட்டத்துலயும் உண்மையான கஷ்டம் உன்னை நெருங்கிவிடாம பார்த்துப்பான்இந்த அம்மா கோண்டு அம்பி... சரியா?

பிரதீபா : உங்களை நான் இத்தனை நாளா புரிஞ்சிக்கவே இல்லைங்க...

[ஆனந்தக் கண்ணீருடன் கணவனை அணைத்துக் கொள்கிருள்.]



பரீட்சை அனுபவம்

போட்டி 39:

சமீபத்திலோ அல்லது பல ஆண்டுகள் முன்னரோ நீங்கள் பரீட்சை எழுதும் போது ஏற்பட்ட விசித்திரமான, வேடிக்கையான, அல்லது வருத்தமான ஓர்அனுபவத்தைக்கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்பவும். பிரசுரமானுல் பரிசு. குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. உறையின் மேல், '' பரீட்சை அனுபவம் '' என்று மறவாமல் குறிப்பிடவும்.

முடிவு தேதி: 11-2-85

இன்னும் 14 பட்டுப் புடவைகளே பாக்கி. இவற்றுள் ஒன்றை நிச்சயம் பெற்றுவிடும் உறுதியோடு வாரம் தவருமல் போட்டிகளில் பங்கு பெறவும்.

என் பெயர் : ....

விலாசம் : ....

....

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்

சந்த் பரமானந்த் பிளைண்ட ரிலீ:ப் மிஷன் வழங்கும்

ஒரே குலுக்கலில் நூறு லட்சாதிபதிகள் உருவாக
மற்றொரு வாய்ப்பு!

நேத்ர கல்யாண்
சூப்பர் பம்பர்

டிக்கட் விலை ரூ.2 மட்டுமே

100 முதல் பரிசுகள் ரூ. 2 லட்சம் வீதம்

100 இரண்டாவது பரிசுகள் ரூ. 50 ஆயிரம் வீதம்

500 மூன்றாவது பரிசுகள் ரூ. 10 ஆயிரம் வீதம்

5,000 4வது பரிசுகள் ரூ.1000/- வீதம்

50,000 5வது பரிசுகள் ரூ.100/- வீதம்

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4.50 கோடி

மொத்த பரிசுகள் : 5,55,700





குலுக்கல் தேதி : 15 2.85

ஆர்கனைஸிங் ஏஜெண்ட
ஸ்வஸ்திக் லாட்டரி ஏஜென்ஸிஸ்
புது தில்லி-110 001

நம்ம ஊர் அமெரிக்காக்காரர்



டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி மனம் விட்டுப் பேசுகிறார்:

தமிழர்கள் மிகவும் புத்திசாலிகள் என்ற மதிப்பு இருக்கிறது. அதற்காக வெறுமனே பழம் பெருமை பேசிக் கொண்டிருப்பதில் என்ன பயன்? முன்னேறிப் பார்க்கப் பயப்படுகிறவர்கள்தான் பழம்பெருமை பேசுவார்கள். அமெரிக்காவில் யாரும் ஆபிரஹாம் லிங்கனின் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கவில்லை. அவர் கருத்துப்படி வாழ்ந்து காட்டுகிறார்கள்.

நாட்டின் நிலவரம் சரியாக இல்லை. தொழில் வளர்ச்சியில் அடுத்த தலைமுறை இன்னும் கடுமையாகப் பாதிக்கப்படப்போகிறது. தொழில் நிபுணர்களும், தியாக, தொண்டு மனப்பான்மை உடையவர்களும் ஒன்றுகூடித் தறிகெட்டுப்போகும் நாட்டைச் சரியான பாதையில் திசைதிருப்பியாகவேண்டும். தரம் தாழ்ந்து போன நிலையை மாற்றித் தர்ம நெறிகள் மறுபடி தழைக்க வழி வகைகளைக் காண வேண்டும்.

'எண்ணம் நம்பிக்கையாகிறது: நம்பிக்கை செயலாகிறது' என்றார் ஓர் அறிஞர். அப்படிப்பட்ட எண்ணங்களைத் தூவியாக வேண்டும். நெறிகளும், பொருளாதாரமும் உயர வேண்டும். தனிமனிதனின் பொருளாதாரம் சிறந்தால் நாட்டுப் பொருளாதாரமும் சீர்ப்படும். இந்த உணர்வைத் தலைவர்களிடையேயும் மக்களிடையேயும் தூண்டியாக வேண்டும்.

ரிஸ்க் எடுக்க பயமா?

'லட்ச ரூபாய் வேண்டுமா, இல்லை மாதா மாதம் ஆயிரம் ரூபாய் வேண்டுமா?' என்று ஒரு கேள்வி. மேல்நாட்டு மாணவரைக் கேட்டால், ''லட்ச ரூபாயே தாருங்கள். ஏதாவது தொழிலில் முதலீடு பண்ணுகிறேன்'' என்று பதில் கிடைக்கிறது. நம்ம ஊர் மாணவனானால், ''மாதா மாதம் ஆயிரம் ரூபாய் கொடுங்கள், போதும்'' என்று கூறுகிறான். வித்தியாசத்தைப் பாருங்கள். அவன் ரிஸ்க் எடுத்துத் தொழில் பண்ணத் தயார். இவனுக்கு ரிஸ்க் எடுக்க அச்சம். நிலையாக

○ வானதி பதிப்பகம் வெளியிட்ட டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தியின் நூல்கள் "இந்தியா தொழில் செல்வம்" "நாடு எங்கே செல்கிறது?" நூல் வெளியீட்டு விழாவில் தொழிலதிபர்கள் எம்.வி. அருணாசலம், ஏ. வி. முத்தையா, இனாசி பத்திரிகை நடத்தும் ஜேம்ஸ் ப்ரெடரிக், நிர்மலா சுரேஷ், அவ்வை நடராஜன் போன்றபலர் கலந்துகொள்ள நாட்டின் முன்னேற்றம் பற்றிய ஒரு கருத்தரங்காகவே விளங்கியது. படத்தில் டாக்டர் எம்.எஸ்.யூ. பேசுகிறார்.

மாதா மாதம் ரூபாய் கிடைத்தால் அதுவே போதும் என்று எண்ணுகிற கையாலாகாத மனப்போக்கு.

சின்னக் குழந்தைகளைக்கூட விளையாடுகிற போது, 'குதிக்காதே, ஓடாதே, விழுந்து தொலைப்பே! எலும்பு கிலும்பு முறிஞ்சு போகும்!'' என்று மிரட்டுகிறோம். பயத்தை விதைக்கிறோம். மேல் நாடுகளில் இப்படி இல்லை. துணிச்சலோடு செயல்பட ஊக்குவிப்பார்கள். அதே சமயம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் கற்றுத் தருவார்கள். தன் காலிலேயே நிற்க வேண்டும் என்கிற மனோநிலைத்தைச் சின்ன வயசிலேயே ஊட்டவில்லையானால் பிறகு எப்போது செய்வது?

○ ''நம்முடைய காலம் ஆகிவிட்டது. இன்றைய தவறுகளின் விளைவுகளால் பாதிக்கப்படப் போவது யார்?''

பழம் பெருமை போதும்; புதுப் பெருமை வேண்டும்



எது சுயமரியாதை?

சுயமரியாதை என்று சொன்னால் ஏதோ பிராமணர், பிராமணர் அல்லாதார் சமாசாரம் என்று நினைக்கிறோம். தலைவர்களின் காலில் போய் விழுந்து மண்டியிடுகிற மனிதர்களுக்குச் சுய மரியாதை என்ன வேண்டிக் கிடக்கிறது? நம்மை நாமே தாழ்த்திக் கொண்டு பிறருக்கு அடிபணிவதால் என்ன பயன்?

தெருவில் போகும்போது கறுப்பர்களும் இந்தியர்களும் சாக்கடையோரமாகத்தான் ஒதுங்கி நடக்க வேண்டும் என்று இருந்தது. முக்கிய வீதிகளில் நடமாடுகிற உரிமை கூடப் பாதிக்கப்பட்டிருந்தது. ''பிறரைத் தாழ்த்துவதன் மூலம் எப்படி ஒருவன் உயர முடியும்?'' என்று காந்திஜி கேட்டார்.

இதைப் படித்த ரிச்சர்ட் ஆட்டன்பரோ அசந்து போனார். காந்தி திரைப்படம் எடுத்தார்.

நம்மை நாமே தாழ்த்திக் கொண்டுவிடுவதன் மூலம் யாரையும் உயரப் பண்ணிவிட முடியாது. சுயமரியாதையை ஏன் இப்படிக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும்? பெரியார் இப்படி எந்த நேரத்திலாவது, யார் காலிலாவது போய் விழுந்திருப்பாரா?

இளைஞர்களின் கதி என்ன?

இன்றைய அரசியல் கட்சிகள் இளைஞர்களை அணுகுவதே இல்லை. அவர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறவர்கள் யாரையும் காணோம். அவர்களுக்கு வழிகாட்டுகிறவர்கள்; அவர்களின் பலத்தை உணருகிறவர்கள் கிடையாது. அடுத்த தலைமுறையைப் பற்றி நிஜமாகவே சிந்திக்கக்கூடிய தலைவன் யாராவது இளைஞர்களைப் போய்த் தொட்டால்தான் இங்கே சரியான சமுதாயம் உருவாக முடியும்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கித் தருவதை விட்டு விட்டு, அவனுக்கு இனாம் தருகிறோம். காசு தருகிறோம். நம்முடைய பொறுப்பற்ற தயாள குணம், வளர வேண்டிய இளைஞர்களின் காலை ஒடித்துவிடுகிறது. அவனுடைய தன்மானத்தின் தலையில் அடிவிழுகிறது.

உடல் உழைப்புக் கேவலமா?

படப்பையில் நண்பர் ஒருவர் பெரிய பண்ணை வைத்திருக்கிறார். வெறும காய்கறி மட்டும் பயிரிட்டாலே ஏராளமான லாபம் கிடைக்கிறது.

படித்த பட்டதாரி இளைஞர்களானால்தான் என்ன? வேலை இல்லை என்று ஓலம் இடுவதை விட்டு விட்டு, எங்காவது ஓர் ஏக்கர், அரை ஏக்கர் நிலத்தை எடுத்து இப்படிப் பயிர் செய்து பார்த்தால் என்ன? உடல் உழைப்பு என்றால் ஏதோ கேவலம் என்று நினைக்கிறோம். இப்படித் தோட்டம் போடுவதிலும், பயிர் செய்வதிலும் பணம் தவிர மனக்குச் சந்தோஷமும் கிடைக்கிறது என்பதை அவர்கள் உணர வேண்டும். அவர்களை அப்படி உணரப் பண்ண வேண்டும்.

ஒவ்வொரு இளைஞனும் தன்னுடைய காலிலேயே நிற்கிற மாதிரியான படிப்பை உருவாக்க வேண்டும்

எல்லோரும் கடவுள்களா?

யாரோ சில பேர்தான் கடவுளால் அருளப்பட்டவர்கள் என்று நம்புகிறோம். ஒரு காமராஜ், ஒரு கருணாநிதி, ஒரு எம்.ஜி.ஆர்.; இவர்களெல்லாம் எங்கே பிறந்தார்கள், எப்படித் தலைவர்களாக உருவானார்கள்?

தலைவர்கள் தவறு செய்தால் அவர்கள் பெரியவர்கள். அவர்களைத் திருத்த முடியாது என்று ஒரு சாதாரணக் குடிமகன் நினைக்கிறான். அவர்களுக்குள்ள உரிமைகள் தனக்கும் இருக்கின்றன என்பது அவனுக்குப் புரிவதில்லை. நாம் உணர்த்த வேண்டும்.

வெளிநாடுகளில் சிறக்கும் இந்தியத் திறமை

ஆந்திர முதலமைச்சர் என்.டி.ஆரின் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தைக் கவனியுங்கள். நியூயார்க்கிலும் பிட்ஸ் பர்க்கிலும், லாஸ் ஏஞ்சல்ஸிலும் குடியேறியிருந்த ஆந்திர மக்களைக் கண்டு பேசினார். தொழில் நுட்ப வல்லுநர்கள், திறமையாளர்கள் என்று எல்லோரிடமும் மனம் விட்டுப் பல மணி நேரங்கள் உரையாடினார். விவாதித்தார். ஒவ்வொருவரிடமும் தனித்தனியே பத்து நிமிடம் பதினைந்து நிமிடம் என்று பேசினார். ''இந்தியாவுக்குவாருங்கள். தொழில்தொடங்குங்கள். உதவி தருகிறேன்'' என்று சொன்னார்.

ராமாராவின் இந்த மனப்பான்மை எப்படி உருவானது? அவருக்கு உதவுகிறவர்கள், ஆலோசனை சொல்கிறவர்கள் யார் யார் என்று கவனியுங்கள். டாக்டர் நாயுடம்மா மாதிரி நிபுணர்கள் பலரை ராமாராவ் கேட்கிறார். அவர்களின் திறமையை நம்பிச் செயல்படுகிறார்.

தமிழ் நாட்டில் எத்தனை தொழில்துறை நிபுணர்கள் இருக்கிறார்கள்! இவர்களின் திறமையை, ஆலோசனையை ஏன் கேட்டுப் பெறுவதில்லை?

அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லா விதமான துறைகளிலும் தேர்ச்சி பெற்ற தமிழர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.

அவர்களையெல்லாம் அங்கிருந்து தட்டிக் கொண்டு வந்தால் நாம் முன்னேறலாம். உலக நாடுகளோடு போட்டியிட்டு வெற்றி பெறலாம்.

ஏராளமான விஞ்ஞானிகளும் தொழில் துறை நிபுணர்களும் நிறைந்தது தமிழகம். அவர்களைப் பயன்படுத்தாமல் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

மேலை நாடுகளில் அவர்கள் பெறுகிற அளவுக்கே இங்கு ஊதியம் தர முடியுமா என்பார்கள். கொடுத்தால் தவறில்லை என்பேன். அவர்கள் திறமையைத் தேச முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துகிறபோது கட்டாயம் கட்டுப்படியாகும்தான்.

திறமையான நிருவாகம்

ஆர். கே. சண்முகம் செட்டியார், ஜான் மத்தாய், டி.டி.கே. போன்ற நிபுணர்களையெல்லாம் தொழில் அமைச்சர்களாகப் போட்டிருந்த காலம் உண்டு.



பாரதிதாசன், 'கிண்டல்காரன்' என்ற புனைபெயரில் ஏராளமான நகைச்சுவைக் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.
ஆதாரம் : மா.ரா. இளங்கோவன் எழுதிய ''இதழியல் நோக்கு''
தகவல் : ராஜேஸ்வரி

இன்று என்ன நிலை? யார் யாரெல்லாம் தொழிலுக்கு அமைச்சர்கள் என்று கவனியுங்கள். இவர்களுக்கும் தொழிலுக்கும் என்ன சம்பந்தம்? தொழில் துறை பற்றி எந்தவிதமான அடிப்படை அறிவும் இல்லாதவர்களால் தொழில் வளம் எப்படிப் பெருகும்?

போகட்டும். இவர்களைத்தான் போட வேண்டியிருக்கிறது என்கிற நிலைமை இருக்குமானாலும் இந்த அமைச்சர்களுக்கு ஆலோசனைகள்கூறி ஆக்கபூர்வமாக வழி நடத்தத் தகுதியான நிபுணர்களை ஆலோசகர்களாகவாவது போடலாம் அல்லவா?

உரிமைக்கு ஒரு குரல்

மாநிலத்துக்கு அதிக உரிமைகள் வேண்டும். இவ்விஷயத்தில் தி.மு.க. ஒன்று மட்டும்தான் தைரியமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மற்ற கட்சிகள் மத்தியில் உள்ளவர்களின் உறவு போய்விடுமோ என்று பயந்து இதைப் பற்றியெல்லாம் பேசுவதே இல்லை.

வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, செலாவணி போன்ற இனங்கள் மட்டும் மத்தியில் இருந்தால் போதுமே. இங்கேயிருந்து வரிகளையெல்லாம் வாரிக் கொண்டு அப்புறம் பங்கு போடுவானேன். நமக்கு வளர்ச்சியைத் தடுக்காத சுதந்திரம்தான் வேண்டும்.

கம்யூனிஸ்ட் நாடுதான். சைனாவில் ஷாங்காய் மாநிலத்திலிருந்து எந்த அயல் நாட்டுடனும் தொழில் உறவு கொள்ள முடியும். நேரடியாக லைசென்ஸ் பெறலாம். வெளிநாட்டுக்காரர்களும் அங்கே போய்த் தொழில் தொடங்கலாம். எதற்கும் பீகிங் அனுமதி வேண்டும் என்று அவர்கள் தவம் கிடப்பதில்லை. அங்கே பொருளாதார சுதந்திரம் தாராளமாக இருக்கிறது.

ஏன் பின்னேறி விட்டோம்?

தொழில்துறையில் நாம் மிகவும் பின்தங்கி விட்டோம். நம்முடைய காலம் ஆகிவிட்டது. நாம் போய்விடுவோம். இன்றைய

தவறுகளின் விளைவுகளால் பாதிக்கப்படப் போவது யார்? அடுத்த தலைமுறை என்ன கதி ஆகும்?

டெல்லி என்றும் பம்பாய் என்றும் தமிழ் நாட்டுக்காரர்கள் வேலை தேடி ஓடுகிறார்கள். கலவரங்கள் வருகிறபோது தமிழ்ப் பெயர் வைத்திருக்கிறவன்தான் உதைபடுகிறான். சொந்த பூமியில் வேலை வாய்ப்பு இருந்தால் அவன் ஏன் ஊர் ஊராய்ப் போய் உதைபட வேண்டும்?

தமிழகத்தில் பெரிய பெரிய தொழில்களை வளர்க்கும் வசதி படைத்த ஏராளமான பணக்காரர்கள் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் என்ன நிலவரம்? அரசியல்வாதிகள் கணக்குப் போடுகிறார்கள். 'இவர் இந்தத் தொழிலை ஆரம்பித்தால் எவ்வளவு லாபம் கிடைக்கும்? அதில் நமக்கு எவ்வளவு தருவார்கள்?' என்று யோசிக்கிறார்கள். எங்கே உருப்படும்?

படித்தவர்கள் பண்ணும் பாவம்

பாரதி பாடினான்:
' படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான் ஐயோவென்று
போவான்'

படித்தவர்களிடம் துணிவு இல்லை. எவனையாவது சார்ந்து நின்றால் தான் சகாயம் கிடைக்கும் என்று பயந்து பயந்து சாகிறார்கள். வெறும் படிப்பு மட்டும் போதாது. நல்லவர்களாகவும் இருக்க வேண்டும். இங்கே படித்தவர்கள் செய்கிற கொடுமைகள்தான் அதிகம். செய்கிறதையெல்லாம் சாமர்த்தியமாகச் செய்கிறார்கள்.

தார்மீக உணர்வு மங்கிப் போய்விட்டது. தனி மனிதனை உயர்த்தாத வரை பொது சமுதாயம் மோசமாகத்தான் இருக்கும். காந்திஜி மாதிரி முன்மாதிரியாகத் தாமே இருந்து வழி காட்டுகிற தலைவர்கள் மேல் மட்டத்தில் தோன்ற வேண்டும். அப்படி ஒரு தலைமை உருவாகக் கீழே உள்ளவர்கள் நிர்ப்பந்தப் படுத்த வேண்டும்.

அஞ்சாமை என்பது மிக முக்கியமானது. எதையும் துணிவுடன் சொல்ல வேண்டும். அப்படி இல்லாமல் போனால், முதுகெலும்புக்குப் பதில் அங்கே வெறும் மண் புழுதான் நெளியும். மனத்தில் படுகிற உண்மைகளைப் பட்டென்று சொல்லாமல் அஞ்சி முடங்குகிற வாழ்க்கை என்ன வாழ்க்கை?

பேட்டி கட்டுரை: நிருபர்

அருள்வாக்கு

எரிந்த மரம் கரியாகிறது. அந்தக் கரியும் முதிர்ந்தால் பளிங்காக வைரமாக ஆகிறது. உலகம் இருந்த போதிலும் அதன் மாயை நம்மைத் தொடாமல் எல்லாம் விஷ்ணுமயமாகத் தெரிகிறபோது, நம் அஞ்ஞானம் எரிந்து கரியாகிப் போன நிலையில் இருக்கிறோம். திருமாலும் இதனாலேயே கருமாலாக இருக்கிறார். கரி வைரமாகிறது போன்ற நிலைக்கு — ஸ்படிகமாகிற நிலைக்கு — சுத்த ஸ்படிக ஸங்காசமான பரமேசுவரன் தெய்வமாக இருக்கிறார். கரியும் வைரமும் வேறு வேறு அல்ல. இதுவேதான் அதுவாயிருக்கிறது. மகாவிஷ்ணுவும் பரமேசுவரனும் ஒருத்தரேதான். உலகத்தில் ஆசாபாசங்கள், இவற்றுக்குக் காரணமான மாயை ஆகியவற்றின் நானாவிதமான வர்ண ஆட்டங்கள் இருவரிடத்திலும் இல்லை. மகாவிஷ்ணுவின் கறுப்பு, சிவனின் வெளுப்பு இரண்டுமே சயன்ஸ்படி ஏழு வர்ணங்களில் சேரவில்லை. சத்தியமான தத்துவம் மாயையால் வேறு விதமாக மாறித் தெரிகிறபோதுதான் வர்ணங்கள் உண்டாகின்றன. இருப்பதைப் பொய்யாக மாற்றிச் சொல்வதை இங்கிலீஷில் ''Coloured version'' என்றே சொல்கிறார்கள் அல்லவா? கலர் வந்துவிட்டால் பொய்க்கு வந்துவிட்டோம் என்று அர்த்தம். கலர் இல்லாத கறுப்பு விஷ்ணுவிடமும் வெள்ளைச் சிவனிடமும் மனத்தை வைக்கிற வரையில் சத்தியத்தோடேயே ஒட்டிக் கொண்டிருக்கிறோம்.

இறுதியான வெண்மைக்கு அடையாளமாகவே கரியையும் எரித்தபின் கிடைக்கிற விபூதிச் சாம்பலைச் சைவர்கள் தரிக்கிறார்கள். என்றும் நிற்பது எதுவோ அதுவே நீறு. திருநீறு. மாயை தீண்டாத உலகத்துக்கு அடையாளம் மண். மரம், செடி, கொடி எல்லாம் மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்து முடிவில் மக்கி மடிகிறபோது மண்ணே ஆகின்றன. எனவே மண்ணும் முடிவான எல்லைக்கு அடையாளமாக இருக்கிறது. இதனால்தான் வைஷ்ணவர்கள் திருமண் இட்டுக் கொள்கிறார்கள். திருநீறும் திருமண்ணும் ஒரே தத்துவத்தைத்தான் காட்டுகின்றன. ஹரி—ஹர பேதம் இல்லாததுபோல அவர்களுக்குரிய சின்னங்களிலும் பேதமில்லை. ஜகத்தில் இருந்து கொண்டே மேல் நோக்கி உயர வேண்டும் என்பதற்காகத் திருமண்ணை மேல் நோக்கிப் போட்டுக் கொள்கிறார்கள். எல்லாம் சமமாகிவிட்ட சிவயோக நிலைக்கு விபூதியை உயரவாட்டில் போடாமல் நெற்றியில் குறுக்கே தரித்துக் கொள்கிறார்கள்.

சிவனுக்கும் திருமாலுக்குமிடையே பேதம் கற்பிப்பது கொஞ்சம்கூடச் சரியில்லை. வைஷ்ணவ ஆழ்வார்களும், சைவ நாயன்மார்களும் உயர்ந்த பக்தி நிலையில் இரண்டையும் ஒரே ஸ்வரூபமாகக் கண்டு பாடியிருக்கிறார்கள்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்



என்.டி.ஆரின் சீருடை யோசனை சரியா?



புகழேந்தி



லக்ஷ்மி நாராயணன்



பிருந்தா

தெலுங்கு தேச எம். பிக்கள் பார்லிமெண்டிற்குச் சீருடை அணிந்து செல்வார்கள் என்று என். டி. ஆர். கூறியுள்ளது பற்றிச் சிலரிடம் கேட்டோம்.

அரசியல் ஸ்டண்ட்

இது என். டி. ஆரின் இன்னொரு ஸ்டண்ட் என்றுதான் எனக்குப் படுகிறது. திடீரென ஒற்றைக் குண்டலமணிந்து, காவி உடையணிந்து 'ராஜ யோகி' என்று சொல்லிக் கொண்டார். தம் வரையிலிருந்த அரசியல் விளையாட்டுத்தனங்களை இப்போது கட்சி எம். பி.க்களுக்கும் விஸ்தரித்திருக்கிறார். எதிர்க்கட்சி தலைவர்கள் பலரும் படுதோல்வி அடைந்துள்ள நிலையில், நாடாளு மன்றத்தில் அதிக இடம் பிடித்துள்ள தெலுங்கு தேசம், இந்தமாதிரி ஸ்டண்டுகளைக் கைவிட்டு, உருப்படியாய் ஏதாவது செய்ய முயற்சி பண்ணினால் பாராட்டலாம்.

—லட்சுமி நாராயணன்

குறுகிய சிந்தனை

இந்த முடிவு தப்பு என்பேன். தேசிய ஒருமைப்பாடு, நாம் அனைவரும் சகோதரர்கள் என்று ஒரு புறம் பேசிக் கொண்டு, இன்னொருபுறம் பிராந்தியம், கட்சி என்று குறுகிய வட்டங்களுக்குள் தம்மைத் திணித்துக்கொள்கிற வேலைதான் இது. தெலுங்கு தேசம் கட்சியினர் மட்டும் யூனிபாரம் அணிந்து போனால், நாளடைவில், அவர்களுக்கே தாம் ஒதுக்கப்பட்டவர்கள்போல ஒரு மனப்பான்மை வந்துவிடக் கூடும். இந்த முடிவை உடனடியாய் ராமாராவ் கைவிடுவது நல்லது.

—பிருந்தா

தூய்மையின் சின்னம்

தெலுங்கு தேச எம். பி.க்கள் பார்லிமெண்டிற்கு யூனிபாரத்தில் போகவிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விஷயம். என்.டி. ஆர்.தான் மஞ்சள் புனிதமானது. நாங்களும் புனிதத்தைப் பாதுகாக்க மஞ்சளுடை அணிவோம், மக்கள் சேவையைப் புனிதமாய்க் கருதுவதையே இது குறிக்கிறது....'' என்று காரணத்தை அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லிவிட்டாரே! மஞ்சள் தெ. தேசக் கட்சியின் கொடியின் நிறமும்கூட. மஞ்சள் துணியில் குடிசை, கலப்பை, சக்கரம் இவை தாமே அவர்கள் சின்னம். அதுவுமில்லாமல் இதில் என்ன தப்பு? காங்கிரஸ்காரர்கள் வெள்ளைக் கதர் உடையும் காந்திக் குல்லாயும் அணியவில்லையா? அ.தி.மு.க., தி.மு.க வினர் முறையே கறுப்பு, வெள்ளை சிவப்பு, கறுப்பு, சிவப்பு சரை வேஷ்டி, துண்டு போட்டுக் கொள்ளவில்லையா?

—புகழேந்தி

தொகுப்பு: மௌஷ்மி

"ஆபீஸில் யாரும் சீட்டாடக் கூடாதுன்னுமானேஜர் கடுமையா உத்தரவு போட்டுட்டார்!'

"ஏன்?"

"அவர் நிறைய தோத்துட்டார்!"

—கீழை. அ. கதிர்வேல்





○ ராயல் பாலஸின் இரவுநேரத் தோற்றம்

14

டஸ்ஸில்டார்ஃப் விமான நிலையத்தில் வழியனுப்ப வந்திருந்த நண்பர் டி. ஆர். கோபாலனிடம் விடைபெற்றுக் கொண்டு பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸல்ஸுக்காகப் புறப்பாட்டுக் கூடத்தில் காத்திருந்தேன். 'பெல்ஜியன் ஏர்வேஸ்' சபீனு விமானத்தில் பயணம். ஒரு போயிங்கையோ, ஜெட் வகைகளில் ஒன்றையோ எதிர்பார்த்துச் சென்ற எனக்கு விமான ஓடுபாதையில் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. சுமார் பதினைந்து முதல் இருபது பேர்வரை அமரக் கூடிய பெரிய வெட்டுக் கிளி போன்ற சிறிய விமானம் ஒன்று காத்திருந்தது. 'விமானத்திற்குள்ளே ஏறிச் செல்வதற்கான படிக்கட்டில் ஒரே சமயத்தில் ஒருவர் மட்டுமே ஏறவும்' – என்ற முன்னெச்சரிக்கை அறிவிப்பு வேறு எழுதப்பட்டிருந்தது. உள்ளே ஒவ்வொரு சீட்டிலும் பிளாஸ்டிக் டப்பாவில் அழகாகப் பொட்டலம் கட்டப்பட்டு 'பிரேக்ஃபாஸ்ட்'வைக்கப்பட்டிருந்ததுநெருக்கடியான இருக்கை அமைப்புதான். உட்காரவும், நடமாடவும் இடையூறில்லாதபடி கைப்பைகள், சிறிய பெட்டிகள் உட்படப் பயணிகளிடம் இருந்தவற்றை முன் பக்கம் பைலட் இருக்கையை ஒட்டிய சிறிதளவு காலியிடத்தில் குவித்து விட்டார்கள். மேலே நின்றால் இடிக்கிற நிலை. மிக இட நெருக்கடி. ஆனால் ஆட்டமோ குலுக்கலோ இல்லாமல் பயணம். படுசுகமாக இருந்தது. டஸ்ஸில்டார்ஃபிலிருந்து பிரஸ்ஸல்ஸ் சென்னையிலிருந்து சித்தூர் உள்ள தூரத்தை விடக் குறைவாகவே இருக்கும். ஜெர்மனியின் லுப்தான்ஸா ஹாலந்தின் கே. எல். எம், பிரான்ஸின் ஏர் பிரான்ஸ், பிரிட்டிஷ் ஏர்வேஸ் ஆகியவற்றின் நடுவே சிக்கியுள்ள பெல்ஜியம் ஒரு சிறிய ரூட் மேப்புடன் ஷெட்டில் செர்வீஸ் போன்ற ஒருவகைச் சிறிய விமான செர்வீஸையே நடத்த முடிகிறது. ஆனாலும் அதையும் மிகுந்த திறமையோடு நடத்துகிறார்கள். ஐரோப்பாவில் நடுமையமாக இருக்கும் 'பிரஸ்ஸல்ஸ்' நகரிலிருந்து அண்டை நாடுகளின் தலை நகர்களே சில நூறு கிலோ மீட்டர் தொலைவுக்குள் இருப்பதால் அந்த நகரங்களுக்கு இணைப்புத் தரும் சுருங்கிய அளவிலான விமான சேவையையே பெல்ஜியன் ஏர்லைன்ஸான 'சபீனு' நடத்த முடிகிறது. இது ஏறக் குறைய நமது 'வாயுதூத்'விமான சேவை போன்ற ஒன்றுதான். பெல்ஜியம் நெதர்லாண்டஸ் (ஹாலந்து) லக்ஸம்பர்க், ஆகிய மூன்று நாடுகளுக்கும் சேர்த்து ஒரே விஸா (பெனுலக்ஸ் நாடுகள் என இணைத்து அழைக்கப்படுவன) எடுத்துக் கொள்ளும் வசதி இருந்தது. அப்படியே எடுத்திருந்தேன்.

டஸ்ஸில்டார்ஃபிலிருந்து ஐம்பது நிமிஷ நேரத்திற்குள் பிரஸ்ஸல்ஸ் போய்ச் சேர முடிந்திருந்தது. பிரஸ்ஸல்ஸ் விமான நிலையத்தில் அதிகாலையில் போய் இறங்கியபோது விமானக் கூடம் நம்மூர் சென்ட்ரல் ஸ்டேஷன் போல் ஜே ஜே என்றிருந்தது. 'நெள யூ ஆர் இன் தக்ராஸ் ரோட்ஸ் ஆஃப் யூரோப்' என்று பெரிதாக எழுதிப் போட்டிருந்தார்கள். 'பெல்ஜியத்திற்கு வாழ்த்து' – என்ற மகாகவி பாரதியின் கவிதை நினைவு வந்தது. பெல்ஜியன் கிளாஸ் (கண்ணாடி) பெல்ஜியம் கட்டிங் (வைரக் கட்டுமானம்) என்று நம் ஊரில் அடிக்கடி கேள்விப்படும் வார்த்தை

பாரதி வாழ்த்தும் புதிய பெல்ஜியம்

ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்



○ மடோனா அண்ட் சைல்ட் ஓவியம்


கள் நினைவுக்கு வந்தன. ஒரு காலத்தில் காங்கோ போன்ற வைர வளமுள்ள காலனி நாடுகளைக் கட்டி ஆண்டு வைர வியாபாரம் — வேலைப்பாடுகளில் — 'பெல்ஜியன் கட்டிங்' — என்றே ஒரு தனி முத்திரையைப் பதித்த பெல்ஜியம் இன்று ஐரோப்பாவில் ஒரு குட்டி நாடாக அடங்கிவிட்டது. ஆனால் பெல்ஜியத்தின் அரசியல் முக்கியத்துவம் கேந்திரத் தன்மை ஆகியவை சிறிதும் குறையாததோடு முன்னைவிட அதிகமாகியுள்ளன. ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள், E.E.C. வட அட்லாண்டிக் உடன்படிக்கை நாடுகள் (NATO) ஆகியவற்றிற்குக் கேந்திர நகரம் பிரஸ்ஸல்ஸ். ஐரோப்பியப் பொருளாதார சமூகம் போலவே அதன் உறுப்பு நாடுகளின் மொத்த சபையாகிய ஐரோப்பிய பாராளுமன்றத் (European Parlirment) திற்கு முக்கிய நகரமாகவும் பிரஸ்ஸல்ஸ் விளங்குகிறது. ஐரோப்பாவில் கார் மூலமோ இரயில் மூலமோ. விமான மூலமோ பயணம் செய்பவர்கள் நடுமையமாக சொள்ள முடிந்த சேந்திரமாகவும் பெல்ஜியத் தலைநகரே விளங்குகிறது. ஈ.. ஈ..ஸி. முதலிய அமைப்புகள் பிரஸ்ஸல்ஸைத் தங்கள் இடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அங்கிருந்து இயங்குவதற்குக் காரணமே ஐரோப்பாவில் அந்த நகரத்தின் நடுநாயகத் தன்மைதான்.

ஐரோப்பாவில் எந்தப் பெரிய நகரத்தின் விமான நிலையத்திலிருந்தும் பல கி. மீ. தொலைவிலிருக்கும் நகரின் மையப்பகுதிக்குச் செல்வதற்கு — ரயில் — பாதாளரயில் — கோச் பயணம் என்று வசதிகள் நிறையச் செய்யப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் கோச் — பஸ்களில் செல்ல முடிந்த சாலைப் பயணத்தைவிட ட்யூப் ரயில்வே பயணம் மலிவானதாயிருக்கிறது. விமான நிலையத் தளத்திலிருந்து எஸ்கலேட்டரில் ஒரு தளமோ இரண்டு தளமோ கீழிறங்கினால் உடனே ஏறிச்

நா. பார்த்தசாரதி

செல்வதற்கு ஏற்றபடி ரயில் தயாராயிருக்கிறது. விமான நிலைய 'லெஃப்ட் லக்கேஜ்' பகுதியில் ஒரு சிற்றறைக்குரிய சாவியை வாங்கிச் சாமான்களை வைத்துப் பூட்டிவிட்டுப் பாதாள ரயிலுக்காகக் கீழிறங்கினேன். பாதாள ரயிலுக்கு இறங்கும் வழி பளிங்கு போல் சுத்தமாயிருந்தது.

'' சாவி ஜாக்கிரதை! தொலைந்து போனால் உங்கள் சாமான்களை எடுப்பது பிரச்னையாகி விடும் '' என்று எச்சரித்து அனுப்பினார் அப்பகுதியின் விமான நிலைய அதிகாரி. ரயிலில் அதிகக் கூட்டமில்லை. 'சிட்டி சென்ட்ரம்' — என்று கேட்டு டிக்கெட் வாங்கினேன். விமான நிலையத்திலிருந்து அது எத்தனையாவது ஸ்டேஷன் என்று சக பயணிகள் பலரிடம் ஆங்கிலத்தில் விசாரித்து ஏமாந்தேன். எல்லாரிடமிருந்தும் ஒரே



○ தியேட்டர் மான்னெய்

பதில்தான். 'ஃப்ளெம்மிஷ்' (Flemish) என்பதுதான் அது. 'ஃப்ளெம்மிஷ் என்பதுதான் நிற்குமிடம் என்கிறார்கள் போலும்' என முதலில் தோன்றியது. ஆனால் அப்படி இல்லை. 'ஃப்ளெம்மிஷ்' என்கிற மொழி மட்டுமே தங்களுக்குத் தெரியும். ஆங்கிலம் தெரியாது' என்பதை அப்படிக் கூறுகிறார்கள் என்பது புரிந்தது. அபூர்வமாகக் கிடைத்த ஓர் ஆங்கிலேயர் அதை விளக்கினார். பெரும்பாலான ஃப்ளெம்மிஷ் மொழிக்காரர்களும் அடுத்து பிரெஞ்சு மொழிக்காரர்களும், குறைந்த அளவு ஜெர்மன் மொழி பேசுபவர்களும் பெல்ஜியத்தில் இருக்கிறார்கள். சுமார் பத்து லட்சம் மக்களும் பதினோராயிரத்துச் சொச்சம் சதுர மைல் விஸ்தீரணமுமுள்ள பெல்ஜியம் பெரும்பாலும் தனது வெளிநாட்டு வர்த்தகத்தை நம்பியே வாழ்கிறது. கண்ணாடிச் சாமான்கள், வைரம் பட்டை தீட்டுதல் முதலியவை பெல்ஜியத்தில் முக்கியத் தொழில்கள்.

பெல்ஜியமும் பிரிட்டனைப் போலவே ஓர் அரச பரம்பரையின் மேலாண்மைக்குட்பட்ட பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையைப் பெற்றிருக்கிறது. பல நூறு ஆண்டுகள்

பழமையான புராதன பெல்ஜியத்தின் கோட்டைச் சுவர்கள், கொத்தளங்கள் எப்படி இருந்தன என்பதை இன்றுள்ளவர்கள் பார்த்து அறிவதற்காகப் பிரஸ்ஸல்ஸ் நகரின் பல இடங்களில் அந்தப் பழைய சுவர்கள், கோட்டை கொத்தளப் பகுதிகளை இடிந்த நிலையில் அப்படி அப்படியே விட்டு வைத்திருக்கிறார்கள். உல்லாசப் பயணிகளும், யாத்ரீகர்களும் அதைக் கூட்டம் கூட்டமாகச் சென்று பார்க்கிறார்கள்.

15ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த கட்டிடக் கலை வல்லுநர் ஒருவரால் கட்டப்பட்ட பிரஸ்ஸல்ஸ் டவுன் ஹாலும் அதன் செங்குத்தான கோபுரமும் பார்க்கப் பார்க்க அலுக்காதவை. டவுன் ஹால் சதுக்கத்தில் அழகிய சிறுசிறு தொட்டிகளிலும் பாலிதின் பைகளிலும் பூஞ்செடிகள் பெரிய அளவில் விற்கப்படுகின்றன. சிறுசிறு செடிகளில்கூட வித விதமான வண்ண வண்ணப் பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துப் பொலிந்து கொண்டிருந்தன. சதுக்கத்தின் மையமான பகுதியிலிருந்து நகர் மன்ற இசைக் குழுவினர் வாத்திய இசை நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கின்றனர். உல்லாசப் பயணிகள் கூடி நின்று இரசிக்கிறார்கள்.

பெல்ஜியத்தின் சுதந்திர அடையாளச் சின்னத்திலுள்ள சிறுநீர் பெய்யும் சிறுவன் (Manneken pis)தான் அந்நாட்டின் புராதனமான முதல் பிரஜையாகக் கருதப்படுகிறான். அந்தச் சிறுவனைப் படங்களாகவும், பிக்சர் போஸ்ட் கார்டுகளாகவும், சிறிய பெரிய வெண்கலச் சிலைகளாகவும், பெல்ஜியம் முழுவதும் திரும்பிய பக்கமெல்லாம் பார்க்கலாம். நம் தமிழ் நாட்டுக் கிராமங்களிலும், சிற்றூர்களுள்ளும் ஆலிலை மேல் விரலைக் கடித்துக் கொண்டு கிடக்கும் பாலகிருஷ்ணனைப் போல் பெல்ஜியத்தின் பாலகிருஷ்ணன் சிறுநீர் பெய்யும் இந்தச் சிறுவன்தான் போலிருக்கிறது.

கண் கவரும் மாபெரும் அரண்மனையான ராயல் பேலஸ், ஃப்ளெம்மிஷ் கோத்திக் கட்டிடக் கலை ஸ்டைலில் (*Flemmish Gothic Style*) அமைந்துள்ளது. ராயல் பேலஸின் எதிர்ப்புறமுள்ள மரங்களடர்ந்த பூங்காவில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செலவழிக்கலாம். பசுமை கொழிக்கும் பெரிய பூங்கா இது.

உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு 'மோனலிஸா' ஓவியத்தைப் போல் பதினைந்தாம் நூற்றாண்டில் 'ரோஜியர் வாண்டர் வைடன்' என்ற பிரபல பெல்ஜிய ஓவியர் தீட்டிய 'மடோனா அண்ட் சைல்ட்' (*Madonna and Child*) என்ற ஓவியம் பிரஸ்ஸல்ஸில் பார்க்க வேண்டியது.

லேஸ் எனப்படும் துணிகளின் ஓரத்தில் இணைக்கும் மெல்லிழை நுணுக்க வேலைப்பாடுகளுக்கு (*Lace*) 16ம் நூற்றாண்டிலிருந்தே பெல்ஜியம் புகழ் பெற்றிருந்தது. இன்று லேஸ் துணியிழை வேலைப்பாடுகளில் புகழ் பெற்றிருக்கும் பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் கூடப் பெல்ஜியம் ஒரு காலத்தில் லேஸ்களை ஏற்றுமதி செய்திருக்கிறது. வெள்ளி வேலைப்பாடுகள், பீங்கான் வேலைப்பாடுகளுக்கும் பெல்ஜியம் புகழ் பெற்றிருந்தது. இவற்றில் சில அம்சங்கள் இன்று பழைய நிலையில் இல்லை. பிரஸ்ஸல்ஸில் ஏராளமான மியூஸியங்கள் உள்ளன. மான்னெய் தியேட்டர் போன்ற பழமையான அரங்குகள் இருக்கின்றன.

பிரஸ்ஸல்ஸில் புதிய பகுதியான ஈ.ஈ.சி. நிர்வாக அலுவலகங்கள் அடங்கிய '*Berlaymont Building*' பக்கம் போய் விட்டாலோ நான்கு முனைகளோடு கூடிய நட்சத்திரம் போல் கட்டப்பட்ட அந்தப் பல அடுக்கு மாடிகள் நம்மை மருட்டுகின்றன. ஈ.ஈ.ஸி., நாட்டோ பணிகள் தொடர்பாகப் பெல்ஜியப் பிரஜைகள் அல்லாத ஒரு லட்சம் அந்நியர்கள் இன்று பிரஸ்ஸல்ஸில் வசிக்கின்றனர். பல சர்வதேச அமைப்புகள் – அமெரிக்க ஐரோப்பியத் தொடர்புடையவற்றுக்கு – இன்று பெல்ஜியத்தின் தலைநகர் முக்கிய இடமளித்துள்ளது. காமன் மார்க்கெட் (ஐரோப்பிய) நாடுகளின் நடுநாயக இடம் பிரஸ்ஸல்ஸாக இருப்பதால் இங்கு உத்தியோக நிமித்தம் ஏராளமான ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் வாழ்கிறார்கள். 'பெல்ஜியன் பிராங்' தான் ஐரோப்பாவில் இத்தாலிய லிராவைப் போல் ஒரு டாலருக்குக் கை நிறையக்கிடைக்கக் கூடியதாயிருந்தாலும் – பெல்ஜியம் செழிப்பாகத் திகழ்கிறது என்பது மகிழ்ச்சியளிக்கக் கூடிய விஷயம். ஒன்பது உலக உருண்டைகளை இணைத்து உருக்கில் கட்டப்பட்ட ஆட்டோமியம் (*Atomium*) தான் பிரஸ்ஸல்லின் சிம்பல் டவராக விளங்குகிறது. தரையிலிருந்து நூறு மீட்டர் உயரம் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது ஆட்டோமியம்.

இந்த ஆட்டோமியத்தைப் பார்த்த கையோடு என் பெல்ஜியப் பயணத்தை முடித்துக் கொண்ட நான் பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டு மகாகவி பாரதியார், ''இறத்தினால் எளியையாகிச் செய்கையால் உயர்ந்து நின்றாய்'' – என்று பெல்ஜியத்தை வாழ்த்தியதை நினைத்து மெய் சிலிர்த்தேன்.

(தொடரும்)

''வரதட்சிணை அதிகமா கேட்ட மாப்பிள்ளை திடீர்னு ஏன் வரதட்சிணையே வேண்டாமுன்னு சொல்றார்?''

''பொண்ணு கராத்தேயில் பிளாக் பெல்ட் வாங்கியிருக்குன்னு பேச்சுவாக்கில் சொன்னேன்!''

-ஊழை. ஜி. எஸ். தர்மலிங்கம்



நேரம் நல்ல நேரம்



○ ''ராஜபார்வை தோல்வியா என்று ஆராயவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டேன்.''

39. திரு சிவா, ராம்நகர், கோவை — அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில்?

ஆரம்ப காலங்களில் தமிழ்சினிமாவின் அபத்தங்களோடு முரண்பட்டு மோதினை வீரிய கமலஹாசனே, இன்று அதே அபத்தங்களை சர்வைவலுக்காகச் செய்வதாகச்

கமல் பதில்கள்

சப்பைகட்டு கட்டுகிற சாதாரண கமலஹாசனுக்கு நினைவிருக்கிறதா என்று கேட்டீர்கள். கேள்வியை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.... இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன், எனக்கு நானே — இப்படிச் செய்வது தப்பா என்று. 'ராஜபார்வை' தோல்வியடைந்தபோது, அது தோல்வியா என்று ஆராய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நான் ஆளாக்கப்பட்டேன்; ஒரு கடமையாகவும் அதைக் கருதினேன். ஃபெயிலியர் ஏன் ஆகிறதுன்னு தெரியாம ஒரு வீம்புக்குச் செஞ்சுக்கிட்டு ஒரு தியாகி ஆகிறது சரியா? ஜாலியன்வாலாபாக் தியாகி மாதிரி, யார் எதுக்குச் சுடறாங்கன்னு தெரியாம சாகிறதைவிட, என்ன நோக்கம்னு தெரிஞ்சுக்கிட்டு ஒரு காந்தியாகவோ, ஒரு சுபாஷ்சந்திரபோஸாகவோ பெயரோட இருக்கலாம். அதுக்காகத்தான், என்ன காரணம்னு ஆராய்ஞ்சு பார்க்கிற போது, சினிமா என்பது ஒரு வியாபாரம் என்பதை ஒத்துக் கொண்டுதான் நாங்கள் சம்பளம் வாங்கிக் கொண்டு வருகிறோம் என்பது புரியும். இதை நான் கடந்தபல வாரங்களில் ஒரு வாரத்தில் சொல்லியிருக்கிறேன். இந்தக் கேள்வி எனக்குப் பிடித்திருக்கிறது... மீண்டும் அதைத் திரும்பச் சொல்வதற்காக மன்னிக்கவும்... சினிமாவை ஒரு வியாபாரம் என்று ஒத்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன். தவிர அது ஒரு கலை நுட்பம் — இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த ஒரு கலை நுட்பம். ஒரு ரசிகனின் கண்ணிலுள்ள பாப்பாவை அகலப்படுத்தி விட்ட ஒரு மாபெரும் கலை நுட்பம். அதே தருணத்தில், வியாபாரத்திற்காகப் பெட்டிக் கடைகளில், சோடா, வாழைப் பழம் தவிர எப்படி நாம் பீடி, சிகரெட்டும் வைத்து விற்கிறோமோ, அதில் வெட்கப்பட எப்படி ஒன்றும் இல்லையோ, அது போலத்தான் இதுவும். பத்திரிகை நடத்தும் 'கல்கி' போன்ற இதழ்கள்கூட அதற்கு ஒரு விலைப் பட்டியல் போட்டு, கடையில் தொங்கவிட்டு விற்கிறார்கள் என்ற நிலை வருகிறபோது, 'கல்கி'யைத் தொங்கவிடக் கூடாது என்று நாம் சொல்ல முடியாது. சில வியாபார வரைமுறைகளுக்கு உட்பட்டதாகத்தான் செயல்பட வேண்டும். 'கல்கி'யில் ஒரு பவுடர் விளம்பரம் வந்துதான் தீர வேண்டும். வியாபாரம் செய்கிறவர்களுக்குத் தெரியும் அந்தக் கஷ்டம்... நடுவில் ஒரு சில புதுக் கவிதைகளைச் சொல்வார்கள். சில நல்ல விஷயங்களைச் சொல்லுவார்கள். பல பத்திரிகைகள் படும்பாடு போல, ஒரு நடிகனுக்கும் ஏற்படும். இது ஒரு சவால்தான்.

சர்வைவலுக்காக என்கிறீர்கள். இப்போது என்ன சர்வைவல் எனக்கு? இப்போது நல்ல ஏ. ஸி. கார் இருக்கு எனக்கு... ஃபியட் கார் இருக்கிறது... பெட்ரோல் தாராளமாக இருக்கிறது. இன்கம்டாக்ஸ் பிராப்ளம் இருக்கிறது! இத்தனைக்கும் மேல் என்ன பேராசை? இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தில், முழுப் படங்கள் ஐம்பது நாளைக்கு நடித்துக் கொண்டிருந்த கமலஹாசனைவிட, ஐம்பது மடங்கு பெரிதாகிவிட்ட என்று கூடச்சொல்லலாம்— ஒருநடிகன்என்ற நிலையில் நான் இருக்கிறேன்.

○ ''சலங்கை ஒலி போன்ற நல்ல படங்களையும் நடுவில் நுழைத்துக் கொண்டு வருகிறேன்.''



அப்படி இருக்கும்பொழுது, என்னுடைய நிலையைச் சப்பைக் கட்டு என்று சொல்லிவிட முடியாது. என்னை நான் உருவகப்படுத்திக் கொண்டுவிட்டேன் என்பதுதான் உண்மை. திருத்திக் கொண்டுவிட்டேன் என்றுகூடச் சொல்ல முடியாது. என்னுடைய கான்ட்ர டிக்ஷன்களில் எனக்கு வெட்கம் கிடையாது. அதனால் என்னைத் திருத்தி, என்னை மேம்படச் செய்வதில் மிக அக்கறை கொண்டவன் நான். அப்படி இருக்கும்போது, என்னையே ஆய்ந்து ஆய்ந்து இதுதான் நான் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் இன்னமும் நான் செயல்பட்டு வருகிறேன் என்கிற பொழுது, வீரியம் இழந்து விட்டதாக நீங்கள் சொல்லுவது தவறு என்று எனக்குத் தோன்றுகிறது. நல்ல சினிமாவையும் செய்து கொண்டுதான் வருகிறேன்: நடுவில் ஒரு 'சலங்கை ஒலி' வருகிறது... 'சலங்கை ஒலி' நன்றாக இல்லை என்று நீங்கள் ஒப்புக் கொண்டால், நீங்கள் கண்டனம் சொல்லுவீர்களேயானால், அதற்குப் பதில் இல்லை என்னிடம். 'சலங்கை ஒலி' போன்ற நல்ல படங்களையும் நடுவில் இணைத்துக் கொண்டு வருகிறேன். இப்பொழுது செய்யும் படங்களிலும் இரட்டை அர்த்த வசனங்கள் போன்றவற்றைக் குறைத்துக் கொண்டு, இதை எல்லாம் செய்யக் கூடாது என்று ஒரு கட்டுப்பாட்டையும் எனக்கு நானே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன்... சர்வைவல் என்பது உங்களுக்கும் இருக்கிறது. மாறுபட்டு நிற்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்கும் இருக்கிறது என்று சொல்வேன். சிவா என்ற பெயரை 'ஷ'வுடன் ஷிவா என்று எழுதுவதால் நீங்கள் அசாதாரணமானவரும் ஆகிவிடவில்லை. 'சி'யை போட்டு சிவா என்று எழுதி வந்ததால் நீங்கள் சாதாரணப்பட்டவராகவும் ஆகிவிடவில்லை. அதுபோல் ஒரு ஆசை எனக்கும் இருக்கிறது. இப்படி நீளமான பதிலைச் சொன்னதால், மற்ற ரசிகர்கள் ஏதோ இது எனக்கும் ஷிவாவுக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட சம்பாஷணை போல ஆகிவிட்டதே என்று நினைக்காமல், மன்னிக்க வேண்டும்.

40. ரமேஷ்குமார், போடி நாயக்கனூர்.
எழுத்தாளர் சுஜாதா, நடிகை சுஜாதா பற்றித் தங்கள் கருத்து என்ன?

நீங்கள் கேட்பது எப்படி இருக்கிறது என்றால், இடியென்று முகமது அலியைப் பற்றியும் கிருபானந்தவாரியாரைப் பற்றியும் உங்கள் கருத்து என்ன என்று கேட்கிற மாதிரி இருக்கிறது. இரண்டு பேரும் கொஞ்சம் ஆஜானுபாகுவான உடம்பாக இருப்பார்கள். கொஞ்சம் கறுப்பாக இருப்பார்கள். இவரும் தலையில் கொஞ்சம் முடியை மழித்துக் கொண்டிருப்பார். அவரும் கருட்டைத் தலையராக இருப்பதால் கொஞ்சம் மொட்டைத் தலையராக இருப்பது போல் தோன்றும்... இரண்டு பேரும் மேடையில் ஏறுபவர்கள் தான். இவரும் குத்திக் காட்டுவார் சில விஷயங்களை. அவரும் 'குத்திக்காட்டுவார்'... என்று இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கலாமே தவிர எழுத்தாளர் சுஜாதாவைப்பற்றித் தனியாகக் கேளுங்கள். சொல்லலாம். நடிகைசுஜாதாவைப் பற்றித் தனியாகக்கேளுங்கள், சொல்லலாம். இரண்டு பேரையும் சேர்த்து, வினா எழுப்பும் போது இவரையும் அவரையும் ஒப்பிடுங்கள் என்பது போன்ற கேள்வியாகப்பட்டது எனக்கு. தனித்தனியாக இரண்டு பேரைப் பற்றியும் கேளுங்கள் சொல்கிறேன்: இரண்டு பேருமே திறமையுள்ளவர்கள். அதைப்பற்றிச் சொல்வதற்கு இரண்டு புரோக்ராம் வேணும். அடுத்த கேள்வி?

41. எம். தனபாலன், கரூர்.
இருபதில் அறுபதாக நடிப்பதிலும், அறுபதில் இருபதாக நடிப்பதிலும் சிரமம் என்ன? ஏன்?


இருபதில் அறுபதாக நடிப்பதில் இருக்கும் சிரமம் மேக்கப் போட்டுக் கொள்ளும் சிரமம், தாடி வைத்துக் கொண்டு, முகத்தில் சுருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதில் உள்ள ஒரு தொழில் நுட்ப சிரமம் மட்டுமே இருக்கிறது. அதில் சுலைஞனின் பங்கு ஒரு ஐம்பது பர்செண்ட் இருக்க வேண்டும். ஆனால் அறுபதில் இருபதாக நடிப்பது என்பதில் மிகப் பெரிய பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்று உடல் வாகு. இரண்டு முகத் தோற்றம்; இளமையின் வேகம் — இத்தனையும் காட்டும் போது ஏற்படும் உடல் அசதி. இதற்கு அப்பாற்பட்டு, பார்க்கிறவர்களை கன்வின்ஸ் செய்ய வேண்டும், நான் ஒரு இளைஞன்தான் என்று. அது உடற்சட்டு, சிந்தனை எல்லாம் சேர்ந்து செயல்படும் ஒரு நிலை. அந்த நிலையில் இப்போது அதிகம் பேர் இல்லை. அந்த மாதிரி சாதனை செய்பவர்கள் இல்லை... என்னால் முடியுமா என்பது பெரிய சந்தேகத்துக்குரிய விஷயம். தமிழக முதல்வர் அதைச் செய்திருக்கிறார். சிவாஜி கணேசன் அவர்கள் ஓரளவு செய்து கொண்டிருக்கிறார். என்னால் எல்லாம் முடியுமா என்பது பெரிய கேள்விக்குரியது. இருபதில் அறுபதாக நடிப்பது சாதாரணமான விஷயம்.

42. ஆர். ராமசாமி, சென்னை.
நடனமாடும் ஆண்களிடம் பெண் நளினம் வெளிப்படுவது ஏன்? இதைப் பொய்யாக்கிய தங்கள் நடிப்பில் ஆடவரின் கம்பீரமும் மிடுக்கும் தனியே மிளிர்வதன் ரகசியம் என்ன?

நான் இதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். திரு டி. கே. சண்முகம் அவர்கள் என்னுடைய நடனத்தைப் பார்க்கும்போது சொன்ன முதல் அறிவுரையை நான் இன்று வரை மறக்காததுதான் காரணமாக இருக்கும். தவிர, நாடகத்தில் ஸ்திரீ பார்ட் போட்டு நடித்த சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்பில் தெரியாத ஆண்மையா? ஒரு நடிகன் தன்னை எப்படி உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்கிறானோ அதுதான் அவன் பாத்திரத்திலும் பிரதிபலிக்கும்.

தொகுப்பு: சித்தார்த்

குடும்பத்திற்கு ஒரு வீடு —
இதுவே தமிழ்நாடு அரசின் குறிக்கோள்





தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

DIPR/208/84/ADWAVE/TNHB/2756





○ விரக்தி – விம்மிதம் ○ ஸோபர்ஸ் சாதனை

○ வி. சௌரி ராஜன், ஸ்ரீரங்கம்.
? கல்கி நேரம் நல்ல நேரம் விளம்பரத்தில் ஐந்தோளம் மட்டும் இடம் பெறக் காரணம்?
! ஹிந்தோளம்மட்டுமென்ன, பாகேசுவரியிலும் பாடலை அமைத்து ஜமாய்த்திருக்கிறாரே ரமணன்.

○ சகுந்தலா, பூனா.
? ரவிசாஸ்திரியின் ஸோபர்ஸ் சாதனை பற்றி...?
! அவருடைய ஒரு சாதனையை இவர் தொட்டு விட்டதால் இவர் அவராகிவிடமாட்டார் என்பதை சென்னை டெஸ்டில் இரண்டேரன்களுக்கு அவுட்டாகி நிரூபித்துக் கொண்டார். என்றாலும் ஒரு ஓவரின் ஒவ்வொரு பந்திலும் ஒரு ஸிக்ஸர் என்பது அடேயப்பா, மலைக்க வைக்கும் சாதனைதான்! பிராவோ சாஸ்திரி !

○ ஜெ. முகமது பாரூக், நெல்லிக்குப்பம்.
? இந்தப் புதிய மந்திரி சபையிலாவது தமிழகம் தொழில் துறையில் முன்னேறுமா?
! முதலில் புதிய மந்திரி சபை அமைவதில் முன்னேற்றம் ஏற்படட்டும். அப்புறம் பார்க்கலாம் தொழில் முன்னேற்றம்.

○ எம். ஏ. பாஷா, சின்னசேலம்.
? நடிகைகளின் அங்கங்களைப் பற்றிக் கேள்வி கேட்போரைப் பற்றி தாரகையின் பதில் என்ன?
! லிமிட்டைத் தாண்டாதவரை என்ன தவறு? நாமென்ன இந்தியன் ஏர்லைன்ஸ், விமானப் பணிப் பெண்களுக்கு அங்கம் தெரியும் ஆடை கொடுத்தது போலவா நடந்து கொள்கிறோம் ?

○ கே. ராஜகோபாலன் சென்னை–92.
? எதிர்க்கட்சிகள் தோல்வி குறித்து சரண்சிங் உளறிக் கொட்டியிருக்கிறாரே?
! சுட்டுத் தள்ளுங்கள் சமாசாரம்தானே ? முதலில் படு தோல்வி கண்டு ஏற்பட்ட உளறல் பிறகு ராஜீவ் நடைமுறை கண்டு விரக்தி விம்மிதப் பாராட்டாக மாறி விட்டதே !

○ வண்ணை கணேசன், சென்னை–11.
? ராதா, விஜி இருவரில் நன்றாக நடிக்கத் தெரிந்தவர் யார்?
! கொஞ்சம் கன்னம் ஒட்டிய ஷோ கேஸ் பொம்மை ராதா, பன் அடைத்த கன்னத்துடன் புஷ்டியான ஷோ கேஸ் பொம்மை விஜி. இரண்டு பொம்மைகளில்... ம்... ராதா பொம்மையே தேவலை.

○ எம். ராஜேந்திரன், லால்குடி.
? அயல்நாட்டு உள் விவகாரங்களில் நாம் தலையிடக் கூடாது என்பதற்காக எத்தனை நாட்கள் தான் இலங்கையில் வாழும் தமிழருக்கு இழைக்கப்படும் கொடுமையைப்பார்த்து நாம் சகித்துக் கொண்டிருப்பது...?
! விடுதலைப் புலிகளிடம் உங்களுக்குச் செல்வாக்கு உள்ளதா ? அப்படியானால், ஒன்று அவர்களை வன்முறையையும், தனி நாடு கோரிக்கையையும் கைவிடச் சொல்லுங்கள் அல்லது சிங்களப் படையினர் போல் வெற்றிகரமாக நடித்து இந்தியாவைத் தாக்கச் சொல்லுங்கள். இரண்டிலொன்று நடந்தால் பிரச்னைக்கு ஒரு தீர்வு பிறக்கும். இல்லையேல் தலைவர்களிடமும் பேச்சுவார்த்தைகளிலும் நம்பிக்கை வைத்துப் பொறுமையாக இருக்க வேண்டியதுதான்.

○ இரா. சம்பத்குமார், இராசிபுரம்.
? இந்த வருட காலண்டர் ஓசியில் வாங்கி விட்டீர்களா?
! காலண்டரும் சரி, டைரியும் சரி ஓசியில் தவிர வேறுவிதமாக வாங்குவது மகா பாவம் என்ற கட்சியைச் சேர்ந்தவன் நான். இதுவரை இதிலே நாலு அதிலே நாலு சம்பாதித்து வினியோகித்தும்விட்டேன். அது சரி, மின்வாரியத்தில் பணியாற்றும் உங்களுக்குக் கிடைக்காத காலண்டரா, டைரியா ?

○ கொடுமுடி, கணேசன், சேலம்.
? கமல், மிதுன், ஆனந்த் பாபு – டிஸ்கோ டான்ஸில் வரிசைப்படுத்தவும்.
! மிதுன் டிஸ்கோ டான்ஸரில் மட்டும்தான் தூள் கிளப்பினார். அப்புறம் விழுப்புரம் தான். கமலுடையது ரசிக்கும்படியான டான்ஸ். ஆனால் டிஸ்கோ என்று வகைப்படுத்த முடியாது. நாகேஷ் குமாரரின் திறமைதான் அசத்துகிறது.

○ எம். ஷர்புதீன், தோப்புத்துறை.
? பாரதிராஜாவின் பெயரை ஒரு கைதியின் டைரி நிலை நிறுத்துமா?
! அவர் தம் பெயரை நிலைநிறுத்தி எத்தனையோ காலமாகிவிட்டது. ஒரு கைதியின் டைரி பாரதிராஜாவையும் தூக்கும், அதைவிட ஒரு படி மேலாகக் கமலையும் தூக்கும். அண்ணாந்து பார்த்து மற்றவர்களுக்குக் கழுத்தை வலிக்கப் போகிறது !

○ நடிக்கத்... ○ தெரிந்தவர்?...





கலைஞரின் மௌனம்

நீங்கள் கேட்டவை – தராசு



○ அசத்துகிருர்



○ முரளி, வேலூர். ★
? 28 உறுப்பினர்களே உள்ள தெலுங்குதேசக் கட்சி ஒரு சிறந்த எதிர்க்கட்சியாகச் செயல்பட முடியுமா?
! அதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துவருகிருர் ராமராவ் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. (1) மஞ்சள் உடை தரிக்கச் செய்து தூய்மையைச் சதா நினைவூட்டி வருகிருர். (2) நாட்டின் முன்புள்ள முக்கிய பிரச்னைகள் பற்றிய விளக்க உரைகள், நாடாளு மன்றம் செயல்படுகிற விதங்கள் பற்றிய பாடபோதனைகள் முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிருர். (3) அனைத்துக்கும் மேலாக ஒவ்வொரு தெலுங்கு தேச எம்.பி.யும் ஒரு மாநிலத்தை 'சுவீகாரம்' எடுத்துக் கொண்டு அதன் சார்பாகப் போராட வேண்டும் என்ற யோசனை இன்றையச் சூழலில் பாராட்டுக்குரிய அபாரமான ஒன்று. ராமாராவின் எண்ணத்தைத் தெலுங்கு தேச எம்.பி.க்கள் செயலாக்கினுல் பாரத தேசமே (கட்சி அல்ல, நாடு) அவர்களுக்குக் கடமைப்பட்டுப் போகும்.

○ எம். செல்லையா, சாத்தூர்.
? ஹிந்து நாளிதழ் வெளியிடும் ஃபிரண்ட்லைன் ஆங்கில இதழ் பற்றி...?
! முதல்தர அச்சு, முதல்தரக் காகிதம், முதல்தர விஷயங்கள். அது என்ன வண்ணங்கள், ஜப்பானிலோ ஜெர்மனியிலோ அச்சான மாதிரி! கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து என்பார்களே அது ஃபிரண்ட்லைன் விஷயத்தில் வெறும் உபசார வார்த்தைகள் அல்ல. வேறு சில செய்திச் சஞ்சிகைகள் போல பக்கத்துக்குப் பக்கம் பரபரப்பூட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொள்ள முடியாமல் ஹிந்து நிறுவனத்தின் பாரம்பரியப் பண்பாடு தடுக்கிறது. அதனுல் என்ன, வதந்திகள் ஹேஷ்யங்களுக்கு அல்லாமல் நிரூபணமான உண்மைகளுக்கே மதிப்புத் தரும் வாசகர்கள் நாட்டில் இல்லாமலா போய்விட்டார்கள்!

○ ந. சத்திய நாராயணன், அயன்புரம்.
? யாருடைய புத்தாண்டு வாழ்த்து உங்களைக் கவர்ந்தது?
! வாழ்த்தியவர்கள் அனைவருமே என் மனம் கவர்ந்து கொண்டவர்கள்தான். என்ருலும்,

'' மங்கைக்கு வேண்டியது தாலி
தோட்டத்துக்குப் போடணும் வேலி
அரசியலுக்கு மறுபெயர் போலி
சோடாவுக்குள் இருப்பது கோலி
வைஜயந்தி புருஷன் பேரு பாலி
புத்தாண்டு வந்ததையா ஜாலி!
(டி. ராஜேந்தர் மன்னிப்பாராக)''

என்ற அபஸ்வரம் ராம்ஜியின் வாழ்த்து அதன் அங்கத நகைச்சுவை காரணமாகச் சிரிக்க வைத்ததில் விசேஷமாகக் கவர்ந்தது.

நியாயமா?

○ அ. ரவிச்சந்திரன், அரூர்.
? உமக்கு அனுராதாவின் ஆட்டம் பிடிக்குமா? (இதுவரை எண்ணற்ற கேள்விகள் நான் கேட்டும் பதில் வராதது மிகவும் மனவேதனை. இதற்காவது பதில் சொல்லவும்.)
! இதிலுமா அனுதாப அலை எதிர்பார்க்கிறீர்கள்!


○ ஆர். சிவராஜ், லால்குடி.
? சைலஜுரின் மௌனம் நியாயமானதுதானே?
! காமராஜர் ஆறு மாதம் பேசமாட்டேன் என்று சொல்லி நிறுத்திஞர்; சைலஜுர் சொல்லாமல் நிறுத்தியிருக்கிருர். நியாயமோ இல்லையோ, புத்திசாலித்தனம் – தாற்காலிக மௌனம்.

○ து. ரவி, திருப்புத்தூர்.
? புத்தகக் கண்காட்சிக்குப் போனீர்களா? எப்படி அனுபவம்?
! கணுக்கால் வரை சேறு; நிறைய பேண்ட் போட்ட பெண்கள்; அவர்களைச் சுற்றி ஆண்கள்; பேத்திகளுக்கு எனிட் பிளைட்டன் வாங்கித் தரும் தாத்தாக்கள். ஆங்கிலப் புத்தக ஸ்டாலில் மூச்சின் வெம்மை தாக்க, ஆச்சரியம், நிறைய விற்பனையானவை நாவல்கள் அல்ல, ஸப்ஜெக்ட் புத்தகங்கள். ஈ ஓட்டிக் கொண்டிருந்தனர் பெரும்பாலான தமிழ்ப் பதிப்பாளர்கள் ஒப்பு நோக்க. வேதனை: 'கையெழுத்துப் போட்டுத் தாங்களேன் உங்கள் புத்தகம் நிறைய விற்கும்' என்ற தூண்டிலில் சிக்காது ஒரு எழுத்தாளர் தப்பிவிட, மாட்டிய கவிஞரோ திக்குத் தெரியாத காட்டில் ரசிகரைத் தேடித் தேடிக் கண்களை அலையவிட்டுக் கொண்டிருந்தது.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
எஸ். முரளி,
2, கனேசபுரம், வேலூர்–1.
வ. ஆ. (மா.வ.) 632 001



○ சிரிப்பு வாழ்த்து



○ கண்ணுக்கும் கருத்துக்கும்



10

ஒரு சமயம் துர்க்கை. ஒரு சமயம் தாடகை. 'உலகிலேயே எங்களைக் கவர்ந்தவர்' என்று அமெரிக்காவில் அதிக ஓட்டு வாங்கிய பெண்மணி. சொந்த மாநிலத்திலேயே ஓர் அரசியல் கோமாளியிடம் தோற்றுப் போன தலைவி. தேசம் வணங்கிய ஒரு தலைவனின் மகள். நாடு தூற்றிய ஓர் இளைஞனின் தாய். லஞ்சத்தை எதிர்த்துக் குரல் கொடுத்த எம்.பி.யின் மனைவி. ஊழல் செய்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்ட பி. எம். சிறிய வயதில் அம்மா கோண்டு. பின்னால் 'கொடுமை'க்கார மாமியார்.

இந்திராவிற்கு எத்தனை முகங்கள்?

ராஜமான்ய ரத்துச் சட்டம் தோற்றுப் போனதால், பாராளு மன்றத்தைக் கலைத்து இடைத் தேர்தலில் இறங்கி மக்களின் உத்தரவைக் கேட்க வந்த இந்திரா எதேச்சாதிகாரியா? எதிர்க்கட்சித் தலைவர்களைச் சிறையில் அடைத்து, கோர்ட்டுகளைப் பொம்மையாக்கி, பத்திரிகைகளின் பல்லைப் பிடுங்கிய இந்திரா ஜனநாயகத் தலைவியா? இந்திரா ஜோசியர்களையும் சாமியார்களையும் நம்பிய அடுப்பங்கரைப் பெண்மணி? அணுகுண்டு வெடித்த, அண்டார்டிக்காவைத் துளைத்த, விண்வெளிக்கு இந்தியனை அனுப்பித்த விஞ்ஞானி? பாங்குகளைத் தேசியமாக்கிய இடதுசாரி? ஐ.எம்.எஃப்பில் கடன் வாங்கிய அமெரிக்க விசுவாசி? புதிய பொருளாதாரத்தை உருவாக்கிய சிற்பி? பழைய போற்றுதலுக்குரிய நம்பிக்கைகளைத் தகர்த்த நாசக்காரி?

இதில் எது சரி? யார் உண்மையான இந்திரா? நிறைய யோசித்தேன். கொஞ்சம் படித்தேன். விளைவு இந்தத் தொடர்.

• • •

வயது வாரியாக, வருடம் வருடமாக அவரது வாழ்க்கைச் சரித்திரம் எழுதுவதில் எனக்கு ஆர்வம் இல்லை. அவரது முரணான குணங்கள், ஆச்சரியம் தரும் நடத்தைகள். இவற்றின் அடிப்படைகளைக் கண்டு கொள்ள ஆசை. **Discovery of Indira** எழுத விருப்பம்.

ஒருவருடைய வாழ்க்கையை அவர் வாழும் காலம் தீர்மானிக்கிறது. அவருக்கு நேரும் அனுபவங்கள் தீர்மானிக்கின்றன. அது தரும் படிப்பினைகள் தீர்மானிக்கின்றன.

இந்திராவைத் தீர்மானித்தவைகளும் இவைதான். நேருவிடம் இருந்த முதிர்ச்சி இந்திராவிடம் இல்லை. அதற்குக் காரணம் அரசியலில் அடிபடாதது. சரித்திரக் கதையின் திருப்பம் மாதிரி, தெருவில் போகிற பிச்சைக்காரனை யானை மாலை போட்டு அரசனாக்குவதுபோல, ஒரு விபத்து மாதிரி பதவி கிடைத்தது.

பெரோஸிடம் இருந்த சிறுமை கண்டு பொங்குகிற உணர்வு இந்திராவிடம் இல்லை. காலம் மாறியிருந்தது. அதற்குக் காரணம். நேர்மை சத்தியம் என்பதெல்லாம் இன்று காலமாகிவிட்ட அகராதி வார்த்தைகள். நேர்மை பேசுகிறவர்கள் பட்டியலில் சாமி மூர்கன். லஞ்சம் என்பது இல்லாத அரசியல் அமைப்பு எதுவும் உலகத்தில் இல்லை. இன்று வெற்றி என்பது பணம், அதிகாரம், பதவி. இந்த மதிப்பீடுகள் தவறானவைதான். ஆனால் அவற்றைச் சரிசெய்வது அரசியல் தலைவனின் வேலையில்லை. மகாத்மா காந்தி போன்றவர்கள் இதைச் சரி செய்ய முடியும். ஆனால் அவர் அரசியல் தலைவர் இல்லை. ஐந்து வருடத்துக்கு ஒரு முறை தேர்தலைச் சந்திக்கிற அவசியம் அவருக்கு இருந்ததில்லை. ஜனநாயகத்தில் நேர்மையாக இருப்பதைவிட பிரபலமாக இருப்பது முக்கியம் என்று இந்திரா நினைத்திருக்க வேண்டும். 'ஊழல் என்பது உலகம் முழுவதும்' என்று இதனால் தான் சொல்லியிருக்கக் கூடும்.

சஞ்சையிடம் இருந்த மூர்க்கம் அவரிடம் இல்லை. அவர் ஜனங்கள் மீது ஒரு போதும் நம்பிக்கை இழக்காததுதான் காரணம்.

இந்தியாவின் இந்திரா

நேருவின் முதிர்ச்சி இந்திராவிடம் இல்லை. ஆனால் அவருடைய விசாலமான பார்வை இருந்தது. பெரோசின் நேர்மை அவரிடம் இல்லை. ஆனால் அவருடைய கூர்மை இருந்தது. சஞ்சையின் மூர்க்கம் இல்லை. ஆனால் அவரின் துடிப்பு இருந்தது. அவர் இவர்களின் எல்லாமுமாக இருந்தார். ஆனால் அவர்களில் எவராகவும் இல்லை.

• • •

இந்திராவை வெறும் சுயநலம் மிக்க பிரதமர் என்று மாத்திரம் சொல்லிவிடமுடியாது. அவருடைய காலத்தில் இந்தியாவில் மகத்தான மாறுதல்கள் நேர்ந்தன. நோஞ்சானாகப் பிறந்த பெண் குழந்தை, கண்ணைக் கட்டுகிற அழகியாக மலர்ந்த மாதிரி. வறட்சிக்கும் பஞ்சத்திற்கும் நடுவில் பதவி ஏற்றார் இந்திரா. இறக்குமதியான கோதுமை இந்தியாவுக்குச் சோறு போட்டுக் கொண்டிருந்த நேரம். இன்று இந்தியா உணவு

மாலன்

உற்பத்தியில் தன்னிறைவு கொண்ட சில தேசங்களில் ஒன்று. இடைப்பட்ட காலத்தில் கூடிய ஜனத் தொகை இருபத்தைந்து கோடி. சீனாவிடம் தோற்றுப் போன நேரத்தில் இந்திரா பதவியேற்றார். இன்று அணுகுண்டை வெடித்த முதல் ஐந்து நாடுகளில் இந்தியா ஒன்று. செயற்கைக் கோள் ஏவிய ஏழு தேசங்களுக்குள் ஒன்று. பயிற்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுனர்கள் உலகிலேயே அதிகமாக (அமெரிக்காவுக்கு அடுத்தபடி) இருக்கிற தேசம் இந்தியா. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு, தொடர்ச்சியாக நூறு நாட்களில் 147 டி. வி. நிலையங்கள் இந்தியாவெங்கும் திறக்கப்பட்டன. தினம் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்கள். இவற்றிற்கான சாதனங்கள் அனைத்தும் இந்தியாவிலேயே உருவானவை. இந்திராவின் காலத்தில் சராசரி தனி நபர் வருமானம் 1.5 பங்கும், வாங்கும் சக்தியும் கூடி இருக்கின்றன.

விலைவாசியும் ஏறி இருக்கிறது (நான்கு மடங்கு). தொழில் வளர்ச்சி மந்த சதியில். பொருளாதார வளர்ச்சி இருந்தது — ஆனால் மெதுவாக. வளர்ச்சியும் சரிவும் ஒரு சேரக் கண்டது இந்தியா.

''இந்திய அனுபவம் எப்படி ?'' என்று கேட்டேன் என் வெளிநாட்டு நண்பரிடம்.

''இந்தியா ஒரு புதிர். இந்தியர்கள் பெரும் விநோதம்.''

'' ஏன் அப்படி ?''

வெய்யில் வறுக்கிற கன்னியாகுமரி. குளிர் விறைக்க பத்ரிநாத். கிழக்கில் அதிக மழை பொழியும் சிரபுஞ்சி. மேற்கே ராஜஸ்தான் பாலைவனம். ஒரு வேளை சாப்பாட்டிற்குத் தவிக்கும் மக்கள். ரிஜிஸ்டர் செய்து, காத்திருந்து, கலர் டி.வி.யும் காரும் வாங்குகிற மக்களும் இங்கேதான். தீவிரமான மதவாதிகள் அல்ல. ஆனால் நாஸ்திகர்களும் அல்ல. பெண்களின் சுதந்திரம் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் தங்கள் வீட்டுப் பெண்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்கிறார்கள். கல்வி முறை கெட்டுவிட்டது என்று கோபிக்கிறார்கள். ஆனால் காலேஜ்களில் அட்மிஷனுக்கு என்ன கூட்டம்! லஞ்சத்தைக் கண்டிக்கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுப்பதற்குத் தயங்குவதில்லை. சுயநலமிகள்போல் தோன்றுகிறார்கள். ஆனால் தேசத்தை விட்டுக் கொடுக்காத பற்றுடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஜனநாயகம் போன்ற அமைப்பைத் தீர்மானமாக விரும்புகிறார்கள். ஆனால் அதற்கான சுய கட்டுப்பாட்டைக் காணோம். ஒரு பக்கம் வளர்ச்சி. ஒரு பக்கம் சரிவு. இந்தியர்கள், சொல்வதற்காகக் கோபித்துக் கொள்ளாதீர்கள், முரண்பாடுகளின் மூட்டை.''

நான் கோபித்துக் கொள்ளவில்லை. இந்திரா பற்றிய கேள்விக்கு எனக்கு விடை கிடைத்துவிட்டதா? யோசிக்கிறேன்.

ஒரு நாட்டில் நிலவும் முரண்பாடுகளே அதன் பலமாகிவிட்டிருப்பதை உலக சரித்திரம் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டுகிறது. ஒரு தனி நபரிடம் காணப்படும் முரண்பாடுகள் அவரது அறிவு வளர்ச்சியை உறுதிப்படுத்துவதை பலரது வாழ்க்கை வரலாறுகள் கட்டிக்காட்டுகின்றன. எனவே, முரண்பாடுகளில் தவறில்லை. முரண்பாடுகளையும் தேசத்தின் முன்னேற்றத்துக்கே சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்வதில்தான் நாம் தவறிவிடுகிறோம். அந்த விதத்தில் இந்திரா இந்தியா ஆகிறார். (முற்றும்)

✖ நேருவின் முதிர்ச்சி இந்திராவிடம் இல்லை. ஆனால் அவருடைய விசாலமான பார்வை இருந்தது

✖ சஞ்சையிடம் இருந்த மூர்க்கம் இந்திராவிடம் இல்லை.







உங்களையும் ஒரு இலட்சாதிபதியா ஆக்கிட வருகிறாள்!
பூடான் லட்சுமி
முதல் குலுக்கல்: 26.1.85
திங்கட்கிழமை குலுக்கல் முதல் பரிசு ரூ. 1 லட்சம்
செவ்வாய்க்கிழமை குலுக்கல் முதல் பரிசு ரூ. 1 லட்சம்
புதன்கிழமை குலுக்கல் முதல் பரிசு ரூ. 1 லட்சம்
வியாழக்கிழமை குலுக்கல் முதல் பரிசு ரூ. 1 லட்சம்
வெள்ளிக்கிழமை குலுக்கல் முதல் பரிசு ரூ. 1 லட்சம்
சனிக்கிழமை குலுக்கல் முதல் பரிசு ரூ. 1 லட்சம்
பரிசு பணத்தில் எந்த வித வரி பிடித்தமும் கிடையாது.
தினசரி மொத்தப் பரிசுகள்: 44206.
பரிசுச்சீட்டு விலை ரூ. 1/-
இது ராயல் பூடான் அரசின் லாட்டரி.
விற்பனையாளர்களுக்கு ஊக்கம்
ஏஜண்ட்டுகளுக்கு ஊக்கம்
லாட்டரி இயக்ககம், பூடான் அரசு
ஆர்கனைசிங் ஏஜண்ட்: மணியன் ஏஜன்சி. தொலைபேசி: 73725

ஜனவரி 15: ராணுவ தினம்

தயாராக இருக்கிறோம்

டாங்குப் போர் எப்படி இருக்கும்? மகாராஷ்டிரா, அகமது நகரில் இருக்கும் ராணுவப் பயிற்சிப்பள்ளியைப் பார்த்துவிட்டு வந்த நமது நிருபர் எழுதுகிறார்:

கண்ணுக்கெதிரே ஐந்து டாங்குகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இரண்டு விஜயந்தா. மற்றும் மூன்று ரஷ்யன் ரக டாங்குகள். இடது பக்கம் ஐம்பது அடி உயரமுள்ள கண்ட்ரோல் டவரிலிருந்து கர்னல் சிப்பரின் குரல் கம்பீரமாக ஒலிக்கிறது. ஒவ்வொரு டாங்கின் வரலாற்றையும் சொல்லி முடித்து விட்டு 6000 அடி, 7000 அடி தூரத்தில் உள்ள குறிப்பிட்ட இடத்தைத் தாக்க வேண்டும் என்று டாங்குகளுக்குக் கட்டளையிட்டு விட்டு இறங்கி வருகிறார்.

டாங்குகளில் உள்ள ராணுவத்தினர் தயாராகின்றனர். பார்ப்பவர்கள் ஒருவித த்ரில்லுடன் உட்கார்ந்திருக்கின்றனர். எதிரே கண்ணுக்கெட்டிய தூரம் வரை, கட்டாந்தரைதான். இடையே சிறு சிறு குன்றுகள். புல், பூண்டுகள்கூடக் கண்டிப்பாக விளையாத இடம்.

"டாங்க் நம்பர் டூ அண்ட் த்ரீ! டார்கெட் நம்பர் ஃபோர் அண்ட் ஒன்!" கட்டளை பிறக்கிறது.


"டுமீல்! டுமீல்!"

குறிப்பிட்ட இடத்தைத் தாக்கக் குண்டுகள் பறக்கின்றன. கேப்டன் சௌகான் முன்னெச்சரிக்கையாகக் கொடுத்திருந்த பஞ்சைக் காதில் வைத்திருந்ததால் காதுகள் தப்பித்தன. மீண்டும் குறியீடுகள் சொல்லப்படுகின்றன. சொல்லப்படும் இடத்தைச் சரியாகத் தாக்குகின்றன டாங்குகள். ஆச்சரியம் நம் விழிகளில் நடமாடுவதைப் பார்த்து கர்னல் சிப்பர் மெல்லியதாகச் சிரித்து அருகில் வருகிறார். விளக்கம் தருகிறார்.

"இந்தச் சுடுகளம் (Range) ஆசியாவிலேயே பெரியது. ஷிர்டிக்கும் (சாய்பாபாவின் ஷிர்டிதான்) பூனாவுக்கும் இடையே உள்ள அகமது நகரில் உள்ள டாங்குகள் பயிற்சிப் பள்ளியின் உபயோகத்துக்காகத்தான் ராணுவ இலாகா இவ்வளவு பெரிய இடத்தைக் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் பயிற்சி முடிந்த பின்பு வெகு தூரத்திலுள்ள கிராமத்திலிருந்து பலர் வெடிக்காத குண்டுகளைப் பொறுக்க வருகிறார்கள். பித்தளையாக இருப்பதால் நல்ல விலை போகும் என்று பொறுக்க வருவார்கள். சமயத்தில் அந்தக் குண்டுகள் வெடித்து உயிரையே விடுகிறார்கள். அதற்கு ராணுவம் எப்படிப் பொறுப்பாக முடியும்? எவ்வளவோ எச்சரிக்கைகள் கொடுத்தும் இது நடந்து கொண்டிருக்கிறது. பத்திரிகைகள் இதைச் சரியான முறையில் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்!"

குண்டுகளைப் பொறுக்கி பித்தளையை விற்று வயிற்றுப் பிழைப்பை நடத்தலாம் என்று

"டாங்க் நெம்பர் டூ அண்ட் த்ரீ:
டார்ஜெட் நெம்பர் ஃபோர் அண்ட் ஒன்"



வரும் இராமத்து மக்கள் உயிரை விடுவது வறுமையால்தான் ! இது கர்னல் சிப்பருக்கும் நன்கு தெரியும். ராணுவத்தில் சேர்ந்து விட்டால் இதயம் மரத்துப் போகும் என்பதைப் பொய்யாக்கி மனிதாபிமானத்துடன் பேசுகிறார்.

மீண்டும் கண்ணெதிரே பல டாங்குகள் வருகின்றன. கட்டளைக்கேற்ப மலை மீது ஏறியும் 90 டிகிரியில் இறங்கியும் 50 கி.மீ. வேகத்தில் சென்றும், தண்ணீரில் நீந்திச் சென்றும் விந்தைகள் புரிகின்றன. நமது ராணுவத்தினரின் செயல் திறன், நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. அடுத்த நாள் மேஜர் ஜெனரல் டோடியைச் சந்தித்த போது, டாங்குகளை ஓட்ட, குண்டுகள் போட, ஒயர்லெஸ்ஸில் பேச, எவ்வாறு பயிற்சி கொடுக்கப்படுகிறது என்பதை விளக்கினார். கடுமையான பயிற்சிகள்.

யுத்தம் வரவே வேண்டாம். ஆனால் ஒருவேளை வந்துவிட்டால் டாங்குகள் பங்கு முக்கியமானது. 1962, 1965, 1971ல் நாம் பயன்படுத்திய டாங்குகளைவிட மிக நவீன மயமாக்கப்பட்ட டாங்குகளை இப்போது நாம் வைத்திருக்கிறோம். அவற்றை இயக்கத் திறமையான ராணுவ வீரர்களைப் பயிற்சி கொடுத்து வைத்திருக்கிறோம்.''

'' சைனா நம்மைத் தாக்கினால் சமாளிப்பீர்களா ?''

'' நாங்கள் தயார் நிலையில் இருக்கிறோம். நம்முடைய தற்போதைய பலம் சைனாவுக்கு நன்கு தெரியும்.'' சொல்லிவிட்டு மெள்ளச் சிரிக்கிறார் டோடி.

டைரக்டர் ஆர். சுந்தர்ராஜன் சொல்வது : '' ஒரு படம் தோல்வி அடைந்தால் பழியை யார் தலையிலும் போடலாம். ஆனால் ஒரு வெற்றிப் படத்திற்கு இதுதான் காரணம், இவர்தான் காரணம் என்று பிரித்துச் சொல்லவே முடியாது !''

— ஆர்.வி.எஸ்.

படம்: ஜெய்மோகன்



பிரிகேடியர் திலக் ராஜ், மேஜர் விஜயன் போன்றோர் இந்திய ராணுவத்தின் செல்லக் குழந்தையான எம். ஐ. ஆர். சி. என்று சொல்லப்படும் (இது டாங்குகள் + காலாட்படை பிரிவு) ரெஜிமெண்டல் சென்டரைச் சுற்றிக் காண்பித்தார்கள். திலக் ராஜ் நகைச்சுவை உணர்வு மிக்கவர். பயிற்சி பெறும் சிப்பாய்களிடம் ''தேசத்திற்காக உன் உயிரை நீ விடத் தேவையில்லை. உன் எதிரியை அவனுடைய தேசத்திற்காக உயிர்த் தியாகம் செய்ய வை'' என்றார். நாகாலாந்து, அந்தமான் தீவுகள், மினிக்காய் தீவுகள் போன்ற பல இடங்களிலிருந்து வந்தவர்கள் அங்கு பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர். லெப்டினன்ட் ஜெனரல் சுந்தர்ஜிதான் (பொற்கோயிலை மீட்டாரே நம்ம ஊர் சுந்தர்ஜி, அவர்தான்) இந்த ரெஜிமெண்டின் வழிகாட்டியாம். துப்பாக்கி சுடும் பயிற்சி கொடுக்கும் இடத்தில், குறியீட்டின் மேல் சுவரில், ''ஏக் கோலி ஏக் துஷ்மன்'' (ஒரு குண்டு: ஒரு எதிரி) என்ற வாசகம் நம்மைக் கவருகிறது.


'' டாங்கில் சவாரி செய்கிறீர்களா ?'' என்று நம்மைக் கேட்கிறார் திலக்ராஜ். ஒரு பக்கம் பயம் ; மறுபக்கம் நப்பாசை. அதையும்தான் பார்த்துவிடுவோமே என்று டாங்கின் உள்ளே உட்கார்ந்து சொன்ன (மிகச் சிறிய இடம் ; உசிலை மணி உள்ளே நுழையக் கூட முடியாது) அது கிளம்பியது. பயங்கரமான நடுக்கம். 40, 50 கி.மீ. வேகத்தில் சென்று ஒரு 'எஸ்' போட்டுவிட்டு நின்றது. எலும்புகள் வலியில் கெஞ்ச 'போதுண்டாப்பா' என்று வெளியே பாய்ந்து வந்தோம்.

உள்ளே குறுகலான இடத்தில், எட்டு பேர்கள் உட்காருவார்கள். பக்கவாட்டில் உள்ள துவாரங்கள் வழியாக எதிரிகளைச் சுடவும் பயிற்சி பெற வேண்டும் ! நம்மால் இரண்டு நிமிஷம்கூட உள்ளே உட்கார முடியவில்லையே என்று நினைத்தபோது திலக்ராஜ் சொன்னார்: ''யுத்த சமயங்களில் சோறு தண்ணீர் இல்லாமல் 72 மணி நேரம் இதனுள்ளேயே இருக்க நேரிடும் !'' நமது வீரர்களை நினைத்துப் பெருமை பொங்கியது.

அன்று இரவு மறுபடியும் டாங்குகளின் ஒத்திகையைப் பார்த்தோம். கும்மிருட்டு. ஒரு டாங்கிலிருந்து 'சரக்'கென்று ஏவுகணையை வீசும் சப்தம். ஒரு நிமிடத்திற்கு அப்புறம் வானத்திலிருந்து 2000 வாட்ஸ் பல்பு போல ஒளிப் பந்து கீழே இறங்கியது. ஒரு மைல் சுற்றளவுக்கு வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் மேஜர் குறியீட்டைச் சொல்ல, டாங்குகளிலிருந்து சீறிக்கொண்டு சென்றன குண்டுகள்.

நாம் அன்றாட வாழ்க்கையில் ஈடுபட்டு நிம்மதியாக இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் எந்தவித தியாகத்தையும், செய்யத் தயாராக இருக்கும் நமது ராணுவத்தினர்தான் என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

—நமது நிருபர்


"மத்த அம்பயர்களுக்கெல்லாம
வெள்ளை யூனிபாரம்தான். ஆனால்
நீங்க மட்டும் ராகமாலிகா
புடவையை கட்டிக்கிட்டு நிக்கிறீங்களே!
நாங்கள் போலிங்கை கவனிக்கிறதா?
இல்லே உங்கப் புடவையை கவனிக்
கிறதா? ஏற்கனவே ஏழு பேர்
அவுட்...."
UMA FEATURES

வாய்மை எப்போது வெல்லும்?

"லஞ்சம் ஒழியுமா? கொஞ்சமேனும் குறையுமா?" என்ற கருத்தரங்கில் (டிசம்பர் 30ந் தேதி கல்கி) பேசியவர்களின் வார்த்தைகளை வெகு கவனத்துடன் படித்தேன்.

இன்றைய சூழ்நிலைக்குக் காரணம் மேல் மட்டத்தில் இக்கொடிய வியாதி பரவியுள்ளதால், அடி மட்டத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை. மேல் மட்டத்தில் பணம் வாங்குவதற்கு உதவியாக உள்ளது. "லைசென்ஸ், கோட்டா, பர்மிட் இந்த மூன்றும்தான். அதனால்தான் இம்மூன்றையும் ஒழிக்க வேண்டும்" என்று ராஜாஜி சொன்னார். சூசகமாக, இம்மூன்றும் ஒழிந்தால் மேலிடத்தில் பணம் வாங்கச் சந்தர்ப்பம் இராது என்று சுட்டிக்காட்டினார்.

தேர்தலுக்காகக் கட்சிக்குப் பணம் வாங்குகிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. தேன் எடுப்பவன் புறங் கையை நக்காமல் இருக்க



மாட்டான் என்பது நடைமுறையில் கண்ட உண்மை. தேர்தலுக்காக மந்திரிகள் பெரிய தனக்காரர்களிடமிருந்து பணம் வாங்குவதை நேரில் கண்டும், கேட்டும் உள்ள அவரது சிப்பந்திகள் சொற்பதனக்காரரிடம் கை ஏந்தாமல் இருப்பார்களா? பணம் வாங்கும் எவனும், பணம் வாங்கும் மற்றொருவனைத் தட்டிக் கேட்பானா? மாட்டான்! அதற்கு வேண்டிய தார்மீக பலம் அவனிடம் இல்லை. அரசியலில் ஒரே ஒரு ராஜாஜிதான் இருந்தார்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் ஒவ்வொரு பொருளிலும், வாங்குகிறவருக்கு ஒரு கணிசமான கமிஷன் உண்டு. இது சர்வதேசச் சந்தையில் நடைமுறைப்பழக்கம். இக்கமிஷன் கணக்கில் வராது. ஆயுத தளவாடங்கள் ஆனாலும் சரி, சர்க்கரை, பஞ்சு, புளிக்கும் எண்ணெய் போன்ற எது இறக்குமதியானாலும் கமிஷன் உண்டு. இந்தக் கமிஷனை நம்நாட்டில் யார் எடுத்துக் கொள்கிறார்கள்?

தேர்தலுக்கு ஏராளமாகப் பணம் தேவைப்படுவதால் கணக்கில் வராத கறுப்புப் பணத்தை லஞ்சமாக அல்லது கமிஷனைப் பெறுவது அத்தியாவசியமாகிவிடுகிறது. ஆனால் இந்தத் தேர்தல் முறையை மாற்றி அமைக்கலாம் என்றும் ராஜாஜி யோசனைகள் கூறினார்.

லஞ்ச வியாதி எல்லா நாட்டிலும் உள்ளதென்பது சரியான சமாதானமில்லை. மலேரியா எல்லா நாட்டிலும் உள்ளது. கொலைகள் எல்லா நாட்டிலும் நடக்கின்றன என்பதால் இதற்கான தடுப்பு முறைகள் எடுக்காமல் இருப்பதில்லையே! மனிதனுக்கும், சமூகத்திற்கும் நேரும் இன்னல்களை ஒழித்துக் கட்டுவதுதான் அரசின் முதல் கடமை.

லஞ்ச ஒழிப்புஇலாகாக்கள் ஏற்படுத்தினால் மட்டும், லஞ்சம் ஒழியாது. ஒழிக்க முடியாது. எல்லோரும் அறிந்த விஷயம் என்னவென்றால் நிறைய பணம் வாங்குபவன் எப்படியும் தப்பித்துவிடுவான். அதற்கு வேண்டிய உபாயங்கள் தேட அவனிடம் பணசக்தி உள்ளது. அதே சமயம் சிறு அளவில் பணம் வாங்குபவன் மாட்டிக் கொள்கிறான். காரணம் அவன் வாங்கிய பணம், தப்பிக்க வேண்டிய உபாயங்களின் செலவை ஏற்கப்போதவில்லை!

"வாய்மையே வெல்லும்" என்று தேசிய சின்னத்தில் பொறித்து உள்ளோம். வாய்மை எப்போது வெல்லும்? அது உயிருடன் இருந்தால்தானே வெல்லும்? அதைக் கொன்றுவிட்டால் அதற்கு வெல்வதற்கு வாய்ப்பே இராது. அரசியல் மேடைகளில் ஆகட்டும், நிர்வாகத்தில் ஆகட்டும், கோர்ட்டு விவகாரங்களில் ஆகட்டும், வாய்மைக்கு இடமில்லாமல் ஆக்கிவிட்டோம். நம் நாட்டில் கலப்படமற்ற ஒரே பொருள் என்னவென்று ஒரு பெரியவர் கேள்வி கேட்டு, அவரே அதற்குப் பதில், "பொய்" என்று கூறினார்.

ஆண்டவன் நமக்கு உண்மை பேசும் சக்தியைக் கொடுத்தானே தவிர, உண்மையைக் கண்டு பிடிக்கும் சக்தியைக் கொடுக்கவில்லை. அதனால்தான் நீதிபதி, "குற்றம் நிரூபிக்கப்பட்டது" என்று சொல்கிறாரே தவிர, "குற்றம் உண்மையாக நடந்துள்ளது" என்று சொல்வதில்லை.

இந்நிலையிலிருந்து விடுதலை கிடையாதா? பொது ஜனங்கள் விழித்துக் கொண்டால் தான் உண்டு. அந்த விழிப்பு ஏற்பட, புத்தர், இயேசு, சங்கரர், காந்தி மாதிரி ஒரு தன்னலம் அறியாத, உன்னத மனிதன் தோன்ற வேண்டும். நாமே நமது நடத்தையில் வெறுப்பு கொண்டு, "காசே கடவுளடா" என்ற மனோபாவத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். மனம் மாறக்கூடிய சூழ்நிலை வரவேண்டும். அதற்கேற்ற ஒரு தலைவனைத் தர வேண்டும் என்று ஈசனை மனமுருகி பிரார்த்தித்துக் கொள்வது தவிர வேறு வழி இல்லை.


மிருத்தியுஞ்ஜயன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

உங்கள் முதலீட்டிற்கும் உங்கள் குடும்பத்திற்கும் பாதுகாப்பளிப்பது



ULIP ஒன்றே!

யூனிட் லிங்க்ட் இன்சூரன்ஸ் ப்ளான் (ULIP) அளிக்கும் பயன்களை அறிந்து கொள்ளுங்கள்.

மருத்துவ சோதனையின்றி உங்களுக்கு ஆயுள் இன்சூரன்ஸ் பாதுகாப்பு உங்கள் இலக்குத் தொகைக்குச் சமமாக கிடைக்கிறது.

மேலும் ரூ. 15,000 வரை விபத்து இன்சூரன்ஸ் பாதுகாப்பும் இலவசமாகக் கிடைக்கிறது.

இவை தவிர, உங்கள் முதலீடு கணிசமான டிவிடெண்ட் பெறுகிறது.

நீங்கள் செலுத்தும் தொகைக்கு வருமானவரி சலுகைகளும் உண்டு!

நீங்கள் 18 முதல் 45½ வரை வயதுள்ளவராயிருப்பின் ULIP திட்டத்தில் சேரலாம். உங்கள் இலக்குத் தொகை குறைந்தபட்சம் ரூ. மூவாயிரமாகவும் அதிகபட்சம் ரூ. பன்னிரெண்டாயிரமாகவும் இருக்கலாம். பத்து வருடமோ அல்லது பதினைந்து வருடமோ நீங்கள் ULIP திட்டத்தில் முதலீடு செய்யலாம்.

முதல் ULIP திட்டத்தில் சேர்ந்து மூன்றாண்டுகளுக்குப் பின் நீங்கள் இலக்குத் தொகை ரூ. 12,000த்திற்கு மற்றுமொரு ULIP திட்டத்தில் சேரலாம்.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்)

தலைமை அலுவலகம்: பம்பாய் 400 020

பிராந்திய அலுவலகம்: செதிரு மான்ஷன், 46, செகண்ட் லேன் பீச், சென்னை 600 001. போன்: 27433

ஆந்திரப்பிரதேச அலுவலகம்: 27/11/68, மேரி சாலை, கவர்னர்பேட்டை, விஜயவாடா 520 002. போன்: 63964

கேரளா அலுவலகம்: XII/758, தேக்கடம் சாலை, திருச்சூர் 680 001. போன்: 24690

தமிழ்நாட்டில் உங்கள் எங்கள் முக்கிய பிரதிநிதிகள்: • கோவை, பெரியார், நீலகிரி மாவட்டங்களுக்கு: திரு. ஏ. தனபால், 30, ஒப்பனார் ரோடு, கோவை 641 018. போன்: 34776 (அலு) 43179 (வீடு) • மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு: திரு. எம். இராமமூர்த்தி, 30, எல்.ஐ.சி. காலனி, மதுரை 625 002. போன்: 30160 (அலு) • சேலம் மாவட்டத்திற்கு: திரு. என்.கே. இங்கர்சால், 155, கவர்னரும்பிள்ளை தெரு, அன்னதானப்பட்டி, சேலம் 636 002. போன்: 64302 (வீடு) • தஞ்சை மாவட்டத்திற்கு: திரு. கே. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி. நகர், தஞ்சை 613 007. போன்: 1224 (வீடு) • நெல்லை, குமரி மாவட்டங்களுக்கு: திரு. எம்.எம். காஜா, பங்களா பில்டிங் அனெக்ஸ், 41-B, திருவனந்தபுரம் நெடுஞ்சாலை, பாளையங்கோட்டை 627 002 போன்: 4520 (அலு) 5395 (வீடு) • திருச்சி மாவட்டத்திற்கு: திரு. எம். ராமலிங்கம் 21-A, கான்வென்ட் ரோடு, திருச்சி 620 001 போன்: 28280

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்

20 YEARS OF TRUSTED SERVICE

Sista's-UTI.242.84 TM E

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka